50வது ஆண்டை நோக்கி.......

# மல்லிகை

ஆசிரியர் : டொமினிக் ஜீவா

PUBLIC LIBRARY
JAFFNA



## விதந்தோதத் தக்க—
## ஒரு வித்தியாசமான ரஸிகர்!

ஒக்டோபர்– 2009

விலை – 40/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண சேவை

**ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணமா?.....**
**இப்பழமொழிக்குச் சற்றும் உடன்பாடு இல்லாதவர் வேல் அமுதன்!**



**உண்மை விவரங்களை மாத்திரம் தேர்ந்து, சுயதெரிவு முறையில் திருமணம் செய்திட மூத்த புகழ் பூத்த சர்வதேச, சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர், குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனை முன்னேற்பாட்டு ஒழுங்குமுறையில் செவ்வாய், வியாழன் தவிர்ந்த ஏனைய நாட்களில் சந்தியுங்கள்!**

முகவரி:
8-3-3 மெற்றோ மாடிமனை (வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு முன்பாக, நிலப்பக்கம், 33ஆம் ஒழுங்கை வழி) வெள்ளவத்தை, கொழும்பு- 06

**மேலதிக விபரங்களுக்குத் திங்கள், புதன் வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு நண்பகலிலோ தொடர்பு கொள்ளுங்கள்!**

**தொ.பேசி: 2360488, 2360694, 4873929**

**விரைவான— சுலபமான தெரிவுக்குச் சுயதெரிவு முறையே!**
**மகோன்னத மணவாழ்வுக்குக் குரும்பசிட்டியூர், மாயெழு வேல் அமுதனே!**



## மல்லிகை

'ஆடுதல் பாடுதல் சித்திரம் கவி
ஆதியினைய கலைகளில் உள்ளம்
ஈடுபட்டென்றும் நடப்பவர் பிறர்
ஈன நிலை கண்டு துள்ளுவர்'

உலகப் பாராளுமன்ற வரலாற்றிலேயே, இலங்கை நாடாளுமன்றத்தில் மாத்திரம் தான் ஓர் இலக்கியச் சஞ்சிகை விதந்து பாராட்டப் பெற்ற பெறுமதி மிக்க சம்பவம் இடம் பெற்றுள்ளது. அங்கு பாராட்டப்பட்ட சஞ்சிகை மல்லிகை. இதனை நாடாளுமன்றப் பதிவேடான ஹன்ஸார்ட் (04. 7. 2001) பதிவு செய்ததுடன் எதிர் காலச் சந்ததியினருக்காக ஆவணப்படுத்தியுமுள்ளது- அத்துடன் உலக வரலாற்றில் முதன் முதலில் சலூனுக்குள் இருந்து வெளிவந்த இலக்கியச் சஞ்சிகையும் மல்லிகையே தான்!

**50 - வது ஆண்டை நோக்கி... ஒக்டோபர் 365**

*'Mallikai' Progressive Monthly Magazine*

மல்லிகை அர்ப்பணிப்பு உணர்வுடன் வெளிவரும் தொடர் சிற்றேடு மாத்திர மல்ல - அது ஓர் ஆரோக்கியமான இலக்கிய இயக்கமுமாகும்.

201/4, Sri Kathiresan St,
Colombo - 13.
Tel : 2320721
mallikaiJeeva@yahoo.com


## 45– வது ஆண்டு மலர்– தயாராகின்றது!

**பி**றக்கப் போகும் 2010ம் ஆண்டு ஜனவரியில் மல்லிகையின் 45- வது ஆண்டு மலர் வெளிவர இருக்கின்றது.

இத் தகவல் உங்கள் அனைவருக்கும் தெளிவாகத் தெரிந்த சங்கதிதான். மல்லிகையின் ஆண்டு மலர்களின் சிறப்பும், அதன் உள்ளடக்கக் கனதியும் நேர்த்தியும் பேசப்படுபவை.

எனவே மிக மிகப் பொறுப்புணர்ச்சியுடனும், கவனத் தெளிவுடனும் இம் மலரைத் தயாரிக்க விரும்புகின்றோம்.

மல்லிகையின் ஆண்டு மலர்கள் என்றாலே இலக்கிய உலகில் ஒரு கவனிப்பைப் பெற்றுவரும் சங்கதிதான். அதற்காக நாம் கொடுக்கும் உழைப்பு, விலை இலக்கிய உலகில் யாராலும் நன்கறியப்பட்டதொன்றாகும்.

ஆகவே, இம் மலரில் தமது எழுத்தைப் பதிய விரும்புகின்றவர்கள் இப்போதே மிகப் பொறுப்புடனும் அதிக கவனத்துடனும் தத் தமது ஆக்கங்களை மல்லிகைக்குச் சேர்ப்பிக்க முனைய வேண்டும்.

ஆண்டு மலர்கள் சந்தாவுக்கு உட்பட்டவையல்ல. இந்தத் தகவலைச் சந்தாதாரர்கள் கவனத்தில் கொள்வது நல்லது. பலர் சந்தாவைத் தவிர, மலருக்கென முற்பணம் தந்துதவியுள்ளார்கள் என்பதையும் நாம் கவனத்தில் கொண்டுள்ளோம். அப்படி மலருக்கென்றே முற்பணம் தந்து பதிந்து வைத்திருப்போர், சொற்பப் பேர்களே.

மல்லிகைக்கான ஆண்டு மலர் தயாரிப்பு என்பதே பாரியதொரு இலக்கியப் பணி. வெறும் தனி மனித ஊக்கத்தையும், உழைப்பையும் பின்புலமாகக் கொண்டு செயல்பட்டு வரும் இலக்கியச் சிற்றேடு தான் மல்லிகை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் சுவைஞர்களும், இலக்கிய அபிமானிகளும் நாடு தழுவிய ரீதியில் பரந்து போய்க் காணப்படுகின்றனர். தேசம் கடந்தும் பலர் தொடர்பு கொண்டு இயங்கி வருகின்றனர்.

இதுதான் மல்லிகை என்ற இச்சிற்றேட்டின் அடிப் பசளை. அடிப்படைப் பலம்.

சிதறிப் போய்ப் பரந்து பட்டுப் பலப் பல திசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த அடிப்படைச் சுவைஞர்கள் மல்லிகை மலருக்குத் தத்தமது சக்திக்கேற்ப வழிதுறைகளில் உதவலாம்; ஒத்துழைப்பு நல்கலாம்; மலருக்கு விளம்பரங்கள் சேகரித்துத்' தந்துதவலாம். பரந்து பட்டுப் புதிய புதிய பிரதேசங்களில் வாழ்ந்து வரும் தரமான இலக்கியச் சுவைஞர்களை அணுகிச் சந்தாதாரராக்கலாம். பலரை இன்னுமின்னும் மல்லிகை பால் நெருங்கி வரச் செய்யலாம். உண்மையான இலக்கிய நெஞ்சங் கொண்டவர்களுக்கு இது சாத்தியப்பாடான செயல்களேயாகும்.

மல்லிகை ஒரு வியாபாரச் சஞ்சிகையல்ல. அது ஓர் இலக்கிய இயக்கம். தமிழ் மொழியில் ஆரோக்கியமான ஓர் இலக்கியப் பரம்பரையை எதிர்காலத்தில் இந்த மண்ணில் வளர்த்தெடுக்க வேண்டும் என்ற பேரவாவினால், கடந்த நாலரைத் தஸாப்தங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண மண்ணில் வேரூன்றி உருவாக்கப்பட்ட தனி மனித இலக்கிய இயக்கம், அது!

இன்று அந்தத் தனி மனித இலக்கிய இயக்கமே வேர் பரப்பி விரிவடைந்து, நாடு பூராவும் பரந்துபட்டு வாழும் பலதரப்பட்ட இலக்கியச் சுவைஞர்களை ஒருங்கிணைத்துத் தனி இலக்கிய நிறுவனமாக நின்று நிலைத்து, நிழல் பரப்பி வருகின்றது.

இந்த மாபெரிய இலக்கிய மரத்தின் நிழலில் வந்து நின்று, ஆறுதல் பெறுவோர்கள், ஆசுவாசப்படுத்திக் கொள்வோர்கள் பலராவர். இவர்களில் பலர், பல்வேறு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள், மத நம்பிக்கையுள்ளவர்கள், கருத்து முரண்பாடு கொண்டவர்கள், இலக்கிய நோக்கில் மாறுபட்ட கருத்துக் கொண்டவர்களும் அடங்குவர்.

இவர்கள் அனைவரையும் அரவணைத்து, அன்பு காட்டி, ஒருங்கிணைத்து, நம் மண்ணின் தனித்துவமான இலக்கியக் கோட்பாட்டை வெற்றிகரமாக வென்றெடுக்க உழைத்து வருவதே கடந்த கால மல்லிகையின் போராட்ட சரித்திர வரலாறாகும்.

ஆரம்ப காலங்களில் மல்லிகையின் வரவைக் கிண்டலடித்தவர்களின் பெயர்ப் பட்டியல் இன்றும் கூட நம்மிடம் உண்டு. அலட்சியம் செய்து, பந்தா காட்டி, தம்மைத் தாமே இலக்கியப் பிரம்மாக்கள் எனப் பிரகடனப்படுத்தியவர்களின் பெயர்கள் கூட மல்லிகைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. அட்டைப் பதிவுக்கு அன்னாரது புகைப்படப் பிரதியைக் கேட்டெழுதிய போது, மல்லிகையின் இலக்கிய நேர்மையைக் கொச்சைப்படுத்திக் கதைத்தவர்களின் பெயர்- முகவரிகள் எழுத்தில் மல்லிகை வரவேட்டில் இன்று கூடப் பதியப்பட்டுப் புதுப்பிக்கப் பட்டுள்ளன.

மல்லிகை ஆசிரியரை நேரடியாகப் பெயர், சொல்லி அவதூறு பேசியவர்களின்- எழுதியவர்களின் உருவங்களையே அவர்களே வெட்கப்படும் வகையில் மல்லிகை அட்டையில் பதிப்பித்து, இலக்கிய நேர்மையைப் பிரகடனப்படுத்திய வரலாறு கூட, மல்லிகைக்கு உண்டு.

இவையனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தான், நாம் மல்லிகையின் 45-வது ஆண்டு மலர் தயாரிப்பை நோக்கி முன் செல்கின்றோம்.

நாளைய வரலாறு உண்மை சொல்லும்!

– ஆசிரியர்



# அரசியலுக்கே இது– முன் மாதிரியாக அமையட்டும்!



சென்ற செப்டம்பர் மாதம் 10ந் திகதி ஓர் இலக்கிய அதிசயம் இந்த மண்ணில் இடம் பெற்றது.

கொடகே இலக்கிய விருது வழங்கும் நிகழ்ச்சிச் சம்பவம் தான், அது!

முற்று முழுதான ஒரு சிங்கள இலக்கிய விழாவில் மூன்று தமிழ் எழுத்தாளர்களுக்கு விருதும், பணப் பரிசும் வழங்கப் பெற்றது இந்த நாட்டு இலக்கிய வரலாற்றிலேயே வியந்து மெச்சத் தக்க ஒரு சம்பவமாக இடம் பெற்று, நல்லவர்களின் நெஞ்சத்தைக் குளிர்விக்கச் செய்துவிட்டது.

கொடகே விருது பெற்றவர்கள் மூவர்: ஒருவர் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா. அடுத் தவர் பெண் எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன். மற்றவர் கவிஞர் ஏ. இக்பால்.

இந்த மண்ணின் இலக்கிய வரலாற்றிலேயே இது ஒரு புதிய திருப்பம், சகாப்தம்.

இதுவரையும் நடந்த இலக்கிய விழாக்கள் அனைத்துமே அரசாங்க அநுசரணையுடனும் ஆதரவுடனும் தான் நடைபெற்று வந்துள்ளன. இது எதார்த்தம்.

இந்த விருது விழா வைபவம் வித்தியாசமானது.

சிங்களப் பாமர மக்கள் மத்தியில் பிறந்து வளர்ந்த கொடகே அவர்கள், தன் விடா முயற்சியாலும் ஊக்கத்தாலும் தொடர்ந்து முன்னேறி, ஒரு புத்தகசாலைக்கு அதிபராகி, அதன் நிமித்தம் தனது பெயரில் ஸ்தாபித்துக் கொண்ட ஒரு சிங்களப் புத்தக வெளியீட்டு நிறுவனத்தின் நாமத்தை முன்னிறுத்தி, இந்த இலக்கிய விழாவைக் கொண்டாடி வருகின்றார்.

இந்த ஆண்டு முற்றிலும் புதுமையாக மூன்று தமிழ் படைப்பாளிகளுக்கு விருதும் பண முடிப்பும் அளிக்க ஏற்பாடு செய்து, மிக மிகச் சிறப்பான முறையில் 10.9.2009ல் கொழும்பு-7 ஆனந்த குமாரசாமி மாவத்தை, மகாவலி கேந்திரக் கேட்போர் கூடத்தில் சும்மா ஜாம்..... ஜாம் என்கின்ற முறையில் வெகு கோலாகலமாக நடத்தி முடித்துள்ளார்.

இந்த இலக்கியவாதிகளின் முன்னுதாரணத்தை அரசியல்வாதிகள் பாடமாகக் கற்றுக் கொள்வது நாட்டுக்கே நல்லது!

புதிய நவ இலங்கையை நிச்சயம் கலை, இலக்கியவாதிகளாலும் தோற்றுவிக்க முடியும்! இது சர்வ நிச்சயம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமான முகாமிலிருந்து இலக்கியத்துக்கு வந்த ஒரு வித்தியாசமான ஆளுமை

**—மா. பாலசிங்கம்**

மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் 83 ஆவது (2009) பிறந்த நாள் வாழ்த்து நிகழ்ச்சியில் ஒரு வித்தியாசமான தலைமையைக் கண்ட பல கலை, இலக்கியவாதிகள் 'இவர் யார்?' என வியந்தனர். அங்கலாய்த்தனர். நிகழ்வுகளை ஒருங்கிணைத்தவர் **'மில்லேர்ஸ்' பாலச்சந்திரன்** எனத் தலைவரை அறிமுகப்படுத்தினார். அப்போதும் பல முகங்களில் வியப்பு, ஆச்சரியப் பாவங்களே முத்திரையிட்டுக் கொண்டிருந்தன. பெரிய வர்த்தக நிறுவனம். அதை அடையாளப்படுத்தும் ஒருவர் இத்தகைய ஓர் இலக்கியக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கி நடத்த முடியுமா? இது மொட்டந் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சிட்ட மாதிரியெல்லோ இருக்கின்றனதென ஒவ்வொருவரும் மற்றவரின் காதைக் கடிக்குமாப் போல் குசுகுசுத்தனர். அதுவும்- தடித்த மீசையும் கட்டுடலுமாகத் தலைவர் **'சான்டோ'** போன்று ஆஜானுபாகுவாகக் கண்டவர்களின் கண்களை நிறைத்திருக்கிறாரே.....!

தலைமையுரைக்காகத் தலைவர் அழைக்கப்பட்டார். 'மில்லேர்ஸ்' பாலச்சந்திரன் என்ற அந்தப் பெரியவர் எழுந்து தனது உரையைத் தொடங்கினார். அனைவரும் அசந்து விட்டனர். கூட்டம் நிசப்தமானது. இந்த ஜாம்பவான் எதற்காக இம்மட்டுக் காலமும் இலை மறை காயாக இருந்தார்? இந்தளவுக்கு இலக்கியத்தில் பரிச்சியம் பெற்றவராக இருக்கிறாரே? முகபாவங்கள் மாறின. அங்கீகாரங்கள் சொரிந்தன. 'மில்லேர்ஸ்' பாலச்சந்திரன் என்ற எஸ். ஆர். பாலச்சந்திரனின் தலைமையுரையைக் கேட்டு முழுக் கூட்டத்தினருமே வாயடைத்திருந்தனர். இங்கிதங் கொண்டனர்.

பாதணி தயாரிக்கும் தொழிலாளியை மையமாக வைத்துப் படைக்கப்பட்ட டொமினிக் ஜீவாவின் **'பாதுகை'** என்ற புனைக்கதையைப் பல்வேறு கண்ணோட்டங்களில் அலசி நுட்பமாகத் திறனாய்வு செய்து பாலச்சந்திரன், தன் தலைமையுரையை நிகழ்த்தினார். அக் கதையில் தான் கண்டு இரசித்த மார்க்சியம், மனிதம், மண்வாசனை, ஜனரஞ்சகம் என்பவற்றைக் கூட்டத்தினருடன் பகிர்ந்து கொண்டு தானுமோர், ஆக்க இலக்கிய அபிமானியென்பதை நிறுவினார். அத்தோடு, வெளிப்படுத்திய உந்நதமான திறனாய்வுப் பார்வையினூடாகத் தானொரு தீவிர வாசகனென்பதையும் மெய்ப்படுத்தினார். ஒருவரது இலக்கிய ஆளுமையை மட்டுக்கட்ட இவ்வளவும் போதாதா..... ஆ.....!

பல தமிழ்த் தலைமுறைகளின் கூடுதல் சதவிகிதத்தைத் தீவிர வாசகராக்கிய சாதனை புனைக்கதைப் படைப்பாளி, கல்கி, அகிலன், ந. பார்த்தசாரதி, சாண்டில்யன், ஜெகசிற்பியன், லக்ஷ்மி, இளங்கீரன் ஆகியோரையே சாருமென்பதை இப்பவும் கூடத் தமது கண்களுக்கு



'லென்ஸ்' பொருத்தி, கண்ணாடி அணிந்து வாசிப்பதைத் தொடர்ந்து கொண்டிருக்கும் முதியோரோடு இன்றைய இளசுகளும் மறுக்காது! அதற்கு விதிவிலக்காக பாலச்சந்திரனும் இவர்களது நாவல்களில் தணியாத தாகம் கொண்டிருந்த பின்னரே வாசிப்பில் மடை மாற்றம் கண்டவராகக் காணப்படுகிறார். வரலாற்று நாவலாசிரியர் சாண்டில்யனைத் தனக்குப் பிடித்த ஆசிரியராகக் குறிப்பிடும் இவர் அறுபது எழுபதுகளில் நகைச்சுவைச் சஞ்சிகைகளையும் இலக்கிய இரசனையோடு ஈழத்தவரால் வெளியிட முடியுமென தமிழுலகுக்குச் சாதித்துக் காட்டிய 'சிரித்திரன்' சஞ்சிகையை இரசித்துப் படிப்பாராம். அந்தக் காலத்தில் தினகரன், வீரகேசரி ஆகிய தேசியப் பத்திரிகைகளில் படித்த 'சவாரித் தம்பர்' என்ற கருத்தோவியங்களை இன்னமும் தனது மன மடிப்புகளுக்குள் வைத்திருந்து அதில் தான் படித்து, இரசித்த அரசியல், சமூகம் சார்ந்த அங்கதமான கருத்துக்களை நினைவுக்குக் கொண்டு வந்து பொச்சடிக்கிறார். அந்த வகையில் இத்தகைய படைப்புக்களைக் 'கேலிச் சித்திரங்கள்' என வகைப்படுத்தியிருந்த போதும் அவைகளுக்குப் புதுப் பரிமாணம் கொடுத்துக் 'கருத்துச் சித்திர'மென ஏற்க வைத்த 'சிரித்திரன்' ஆசிரியர் சுந்தரை நெஞ்சில் வைத்துப் பூசிக்கிறார். எனவே, பாலச்சந்திரனின் வாசிப்பு வீச்சு ஜனரஞ்சகமான இந்திய வணிக சஞ்சிகைகளோடு மட்டுப்படாது, ஈழத்து இலக்கிய சஞ்சிகைகளிலும் ஈடுபாடு கொண்டிருப்பதை அவரது தலைமையுரை உணர்த்தி அதற்கு அடிப்படை அவரது தீவிர வாசிப்புத்தானென்பதை அறிவுறுத்தியது.

அறியாப் பராயமான இரண்டு வயதிலேயே பாலச்சந்திரன் தந்தையை இழந்தவர். தனது தாயின் வழிகாட்டலில் சென்று தனது பெயருக்குப் பின்னால் Bsc, Fca, Fcma ஆகிய கல்வித் தகைமைகளைப் பெற்றார். சமூகத்தில் உன்னதமானதோர் அந்தஸ்துக்கு உயர்ந்தார். அவரது சலியா உழைப்புக்குக் கிடைத்த வெற்றி இது. யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, மக்களுக்கு வழிகாட்டக் கூடிய பல கல்வி இலக்கியப் பிரமுகர்களை இந்நாட்டுக்கு அளித்திருக்கிறது. அதே மண்ணில் மலர்ந்தவர் தான் பாலச்சந்திரன். இவர் 33 ஆண்டுகள் மில்லேர்ஸ் வர்த்தக நிறுவனத்தில் கொம்பனிச் செயலர், பிரதான கணக்காளர், நிதி முகாமையாளர் ஆகிய பதவிகளில் தன் செயற்றிமையை வெளிக்காட்டிப் பின்னர், பணிப்பாளரென்ற பதவி நிலைக்கு உயர்ந்தவர். நம்பிக்கை, நுண்ணாற்றல் ஆகிய இவரது சிறப்பு ஆளுமைகளே இவரது பெயருக்கு முன்னால் 'மில்லேர்ஸ்' என்ற பெயரை ஒட்ட வைத்ததெனில் பொய்யாகாது.

''சோம்பேறிகளுக்கும் ஏமாற்றுக்காரர்களுக்கும் இந்நாட்டில் இடம் கொடுக்கக் கூடாது'' என்ற கருத்தியலின் அடிப்படையில் மிடுக்கும் ஆரோக்கியமுமுடைய சமுதாயத்தைக் கட்டி எழுப்ப வேண்டுமென்ற சிந்தனையாளர், இவர். உண்மையான உழைப்பாளிகளை மேம்படுத்த எண்ணும் பாலச்சந்திரன் இடதுசாரிக் கொள்கைளில் பற்றுறுதி கொண்டிருக்கும் முற்போக்காளர். இனரீதியான இன்றைய அரசியல் நமக்களித்திருக்கும் இக்கட்டான சூழ்நிலையில்- அன்றைய சமசமாஜக் கட்சியின் தலைவர்களான கலாநிதிகள் என். எம். பெரேரா, கொல்வின் ஆர் டி சில்வா மற்றும் எட்மன் சமரக்கொடி ஆகியோரையும் அவர்களது சம அந்தஸ்து என்ற இனப் பிரச்சினைக்கான தீர்வையும் மனதுக்குக் கொண்டு வருவதுண்டு. தேசிய கருத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்துக்கான தடமாக அரசியல் இருக்க வேண்டுமென அரை நூற்றாண்டுக்கு முன்னரே எதிர்வு குறிய இத் தலைவர்களையும் அவர்கள் முன் வைத்த கொள்கைகளையும் பாலச்சந்திரன் நெஞ்சார நேசிக்கிறார். காந்தியத்தை ஏற்கிறார். இச் சிந்தனைகளால் ஞானோபதேசம் பெற்றவர்- அல்லலுறும் பாட்டாளிகளின் வயிற்றிலடிக்கும் அதிகார முகாங்களுக்கு எதிராக எறிகணை தொடுப்பவர். இதனால் அவர் சம்பந்தப்பட்ட நிறுவனத்தாலேயே சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்பட்டவர். 'யூனியன் லீடர்' எனவும் முத்திரை குத்தப்பட்டவர்.

'கலைஞர்களும் தொழிலாளர்களும் கண்ணீர் வடிக்கக் கூடாது' என்ற தாரக மந்திரத்தோடு மக்கள் முக வாட்டங்களை அணுகுபவர்.

வாசிப்பு எப்படி மனிதனை முழுமையாக்குகிறதோ விளையாட்டும் அப்படியே செய்யுமென்பது சான்றோர் கருத்து. பாலச்சந்திரன் தீவிர வாசகர் தான். அத்தோடு விளையாட்டுத் துறையையும் நேசித்தவர். விளையாட்டுத் தன்னம்பிக்கையை (Will Power) வளர்க்குமென்கின்றார். தமிழனின் பாரம்பரிக் கலையான சிலம்பம் கற்பதற்கு எத்தனித்திருக்கிறார். கராட்டி, வர்மக் கலை என்பவற்றில் பயிற்சி பெற்றுள்ளார்.

தமிழ்ப் படைப்பிலக்கியத்தில் அதீத ஆர்வம் கொண்டவர். தானும் படைப்பதற்கு முயற்சித்தவர். இருந்தும்- புதியவர்களைத் தட்டிக் கொடுக்கும் பெரு நோக்கற்ற, தலைக்கனம் பிடித்த தமிழ் இலக்கிய பீடங்கள் இவரது முயற்சிக்குப் பச்சைக் கொடி காட்டவில்லையாம்! உள்ளதைச் சொல்லப் போனால் 'பாலா'வும் மெல்லிய கர்வமுடையராகவிருந்து- தமிழ் இலக்கியத்தின் உபாசகனாகவும் வாசகராகவும் மிதந்தார். ஆனால், இவரது எழுத்தாற்றலை ஆங்கில ஏடுகள் வரவேற்றன. தனது கல்வி சார்ந்த பொருளாதாரம், வணிகம், பங்குச் சந்தை ஆகிய விடயங்களை அடக்கும் ஆழமான கட்டுரைகளை ஆங்கில ஏடுகளில் எழுதுகிறார். இவைகளைக் கிரமமாகப் படிப்போர் பாராட்டுகின்றனர். தமிழ்ச் சமூகத்துக்கு ஆதாயத்தைக் கொடுக்கக் கூடிய ஒரு வேண்டுகோளை இச் சந்தர்ப்பத்தில் அன்பர் பாலச்சந்திரனுக்கு விடுக்க வேண்டியுள்ளது. விஞ்ஞானம், வர்த்தகம் போன்ற விடயங்களுக்கான நூல்கள் பெரும்பாலும் ஆங்கில மொழியில் தான் இருக்கின்றன. உயர் கல்விக்கென இக் கற்கை நெறிகளை மேற்கொள்ளும் தமிழ் மாணவர்கள் இந்த ஆங்கில நூல்களைத் தேடிக் கண்டு பிடித்தாலும் ஆங்கிலத்தில் கிரகிப்பதுக்கு வேறொரு துணையைத் தான் நாட வேண்டும்! எனவே பொதுசன நேசரான பாலச்சந்திரன் தனது ஆங்கிலக் கட்டுரைகளை சிரமத்தைப் பார்க்காது தமிழ் மாற்றம் செய்து பத்திரிகைகள் மூலம் வெளியிட்டால் இந்த மாணவர்கள் பயன்படுத்துவார்கள். ஏனைய தமிழ் வாசகனும் அறிவைப் பெருக்கும் பொருட்டு இவைகளைப் படித்துப் பார்ப்பான். இப்பொழுது எமது தேசியப் பத்திரிகைகள் வர்த்தகம் சார்ந்த விசேட இணைப்புக்களைப் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுவொரு சமுதாயத் தேவையென்பதை உணர்ந்து அவர் இதில் ஊக்கம் காட்ட வேண்டும். வடத்தைப் பிடித்து எல்லோரும் இழுத்தால் தான் தேர் நகரும். உழைப்பால் உன்னதம் கண்ட பாலச்சந்திரனுக்கு அதை நாம் சொல்ல வேண்டுமா, என்ன?



சுயசரிதை: 2

# யாழ்ப்பாணத்துச் சுவாமிகள்

- செங்கை ஆழியான்

அம்மாவுக்குத் தன் தகப்பனைப் பற்றி எப்போதும் ஒரு பெருமிதம் இருந்தது.

அவர் பாரதியாரின் ஞானகுரு என்பார். அவரைப் பற்றிக் கதை கதையாகச் சொல்வார்.

ஸ்ரீவில்லிபுத்தூர் பஸ் நிலையத்திலிருந்து சாத்தூர் செல்லும் சாலையில் ஒரு கிலோ மீற்றர் தூரம் பயணித்தால் புளியந்தோப்பு என்ற மயானபூமியை அடையலாம். பிரதான வீதியோரத்தில் சுற்றுமதிலோடு கூடிய சிறியதொரு ஆலயமாக யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி சமாதிக்கோயில் அமைந்துள்ளது. கருவறையில் சமாதியின் மேல கட்டப்பட்ட மேடையில் ஓரடி உயரமான சிவலிங்கம் பிரதிஷ்டை பண்ணப்பட்டுள்ளது. பரிவாரத் தெய்வங்களாக அர்த்தமண்டபத்தின் கருவறை வாயிலின் வலப்பக்கத்தில சிறியதொரு விநாயகர் சிலையும் இடது பக்கத்தில் சிறியதொரு முருகன் சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. அவை கருங்கற் சிலா விக்கிரகங்கள். மூலமூர்த்தியை நோக்கியவாறு அர்த்தமண்டபத்திலேயே பலிபீடமும் இடபமும் அமைந்துள்ளன. கிழக்கு நோக்கிய தேவாலயத்தின் தென் கிழக்கு பக்கத்தில் திருமஞ்சனக் கிணறு அமைந்துள்ளது

யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி சுவாமி கோயில் சிறியதொரு கிராமியக் கோயிலாயினும் தூய்மையும் அமைதியும் அங்கு ஆட்சி செலுத்தின. இக்கோயிலின் தென் மேற்கு மூலையிலும் வடமேற்கு மூலையிலும் இரண்டு சிறிய சமாதிக் கோயில்கள் உள்ளன. தென் மேற்கே அமைந்த சமாதி நெட்டைச்சுவாமியினதும் வடமேற்கே அமைந்திருப்பது குள்ளச் சுவாமியினதும் என்று அறிய முடிந்தது. நெட்டைச்சுவாமியின கோயில் விமானம் சிறியதொரு அரைக்கோள வடிவக் கலசத்தைக் கொண்டிருக்கின்றது. இரு நேரப் பூசை நிகழும் ஆலயமாக ஆறுமுகசுவாமி கோயில் மட்டுமேயுள்ளது.

ஆறுமுகசுவாமி கோயிலின் உட்சுவரில் யாழ்ப்பாணத்து ஆறுமுகசாமியின் புகழை போற்றும் சுப்பிரமணியபாரதியாரின் பாடல்கள் பலகையில் எழுதி மாட்டப்பட்டுள்ளன.

'குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பாணத்தான்
தேவி பதம் மறவாத தீர ஞானி
சிதம்பரத்து நடராஜ மூர்த்தியாவான்
பாவியரைக் கரையேற்றும் ஞானத் தோணி
பரம பத வாயிலெனும் பார்வை யாளன்
காவி வளர் தடங்களிலே மீன்கள் பாயுங்
கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கத்தாற் பதுமை செய்தும் இதரலிங்கம்
சமைத்து மவற் றினிலீசன் தாளைப போற்றும்
துங்கமுறு பக்தர் பலர் புவிமீ துள்ளார்
தோழரே எந்நாளும் எனக்குப் பார்மேல்
மங்களஞ் சேர் திருவிழியால் அருளைப் பெய்யும்
வானவர் கோன் யாழ்ப்பாணத் தீசன் தன்னைச்
சங்கரனென் றெப்போதும் முன்னே கொண்டு
சரணடைந்தால் அது கண்டீர் சர்வ சித்தி.'

உலக மகாகவி சுப்பிரமணிய பாரதியின் ஞானகுருவாக யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி விளங்கியுள்ளார். பாரதியாருக்கு ஆறுமுகசுவாமி என்ற துறவி தேவிபதம் மறவாத தீரஞானியாகவும், சிதம்பரத்து நடராஜமூர்த்தியாகவும், பரமபதவாயிலெனும் பார்வையாளனாகவும்,, மங்களம் சேர் திருவிழியால் அருளைப் பெய்யும் வானவர்கோனாகவும், சங்கரனாகவும் விளங்கியுள்ளார். யார் இந்த யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி?

எனது தாயின் தந்தையார். அம்மாவுக்குச் சிறுவயதாக இருக்கும்போது இந்தியாவுக்குத் துறவறம் பூண்டு சென்றுவிட்டார்.

1863 ஆம் ஆண்டு ஒரு மழைக்கால அதிகாலை யாழ்ப்பாணம் வண்கிழக்குக் கலட்டிப் புன்னை வளவில், கலட்டி அம்மன்கோயில் காண்டாமணி உதயகாலப் பூசைக்காக அறிவிப்பு ஒலி எழுப்பிய வேளையில், ஒரு அற்புதக் குழந்தை பிறந்தது. தந்தையார் கதிரவேலுவும் தாயார் தையலாச்சியும் தமது மூத்த புதல்வனை ஏந்தி மகிழ்ந்தார்கள். ஆறுமுகம் என்று பெயரிட்டார்கள். தனது வம்சத்தினை விளங்க வைக்க ஒரு புதல்வன் பிறநதுள்ளதாகத் தந்தை மகிழ்ந்தார்.

கதிரவேலு இக்கிராமத்தில் பெரும் புகையிலை வர்த்தகராக விளங்கினார். ஆறுமுகம் சிறுவயதில் சுப்பிரமணியபண்டிதர் என்ற குருவின் திண்ணைப் பள்ளிக் கூடத்தில் எழுத வாசிக்கக் கற்றிருந்தார். ''உன் மகன் பெரிய கிறுக்கனாக, ஞானக் கிறுக்கனாக இருக்கிறான் கதிரவேலு என்பார் பண்டிதர். வண்ணார்பண்ணைப் பகுதியில் கதிரவேலுவின் இட்டமான நண்பராக விளங்கியவர் இராமநாதர் என்பவராவார். அவருடைய மகன் அருளம்பலம் ஆவார்.

ஆறுமுகத்திலும் பார்க்க இரண்டு வயது இளையவர். 1865 இல் அருளமபலம் பிறந்தார். இராமநாதர் அருளம்பலமும் ஆறுமுகமும் நல்ல நண்பர்கள். இவர்கள் இருவரும் பல விடயங்களில் ஒத்துப் போனார்கள். பிற்காலத்தில் குழந்தைவேற்சுவாமிகளின் அருளுக்குட்பட்டு துறவறம் பூண்டவர் அருளம்பலமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆறுமுகம் புகையிலை வியாபாரத்தில் தந்தைக்கு உதவியாக இருந்தார். ஓயவு நேரத்தில் ஏதாவது நூல்களைத் தேடி வாசிப்பதிலும் கலட்டி அம்மன் கோயிலின் முன் ஓங்கி வளர்ந்திருந்த தல விருட்சமான வேம்பின் நிழலில் அமர்ந்து சிந்தனை வயப்பட்டிருப்பவராகவும் விளங்கினார். சிறியதொரு ஆலயமாகக் கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்மன் கோயில் அக்காலத்தில் இருந்தது. மிகச்சிறு வயதிலிருந்தே அம்மனிடம் மிகுந்த பக்தியுடையவராக அவர் இருந்தார். தேவிபதம் மறவாத பக்தனாக விளங்கினார். சிலவேளைகளில் வேப்பமரநிழலில் அமர்ந்து காலையிலிருந்து மதியம் வரை அம்மன் சிலையைப் பார்த்தபடி இருப்பாராம். தாயார் மகனைத் தேடி வந்து அழைத்துச் சென்று



மதிய உணவு வழங்கிய வேளைகளே அதிகம். வேறு கோயில்களுக்குத் தரிசிக்கச் சென்றால் சன்னிதானத்தில் பித்தன் போல நடந்து கொள்வார்.

ஆறுமுகத்தினுள் இன்னொரு மனிதன் இருந்தான். வீதியில் இறங்கினால் பிறருக்காகச் சண்டையிடும் ஒருவராக மாறி விடுவார். பக்திக்கும் சண்டித்தனத்திற்கும் எப்படி இணைப்பிருந்ததென்பதை விளக்குவது கஷ்டம். வீதியில் செல்லும்போது இருவர் சண்டைபிடித்தால் எவன் பக்கம் நியாயம் இருக்கிறதோ அவனுக்காக மற்றவனைத் துவைத்து எடுத்து விடுவார். அயல் வீட்டில் கணவன் மனைவிக்கு அடித்து உதைத்து ஆர்ப்பாட்டம் செய்து மனைவி அபயக் குரல் எழுப்பினால வேலி பாய்ந்து கணவனைப் பிரட்டி எடுத்து விடுவார். எவர் பக்கம் வலிமை குறைந்திருக்கிறதோ அப்பக்கம் ஆறுமுகம். நீதியின் பக்கம் நிற்பவராக இருந்தார். ஆறுமுகம் ஒரு சண்டியன் என்ற பயம் ஊராரிடம் ஏற்பட்டிருந்தது. ஒரு தடவை எதிரிகள் சேர்ந்து ஆறுமுகத்தினைக் கடுமையாகத் தாக்கிவிட்டார்கள். அவருடைய இடக் க்ரத்தில் கத்தி வெட்டு விழுந்தது. அக்காயத்தோடு பாய்ந்து வேலிக்கதியால் ஒன்றினைப் பிடுங்கி எடுத்த ஆறுமுகம், எதிரிகளை அடித்து விரட்டியதாக ஊரார் பல காலம் பெருமையாகப் பேசிக் கொண்டனர். இடது கரத்தில் கத்தி வெட்டு விழுந்ததால் அவர் இடது கரம் சற்று குடங்கிப் போனது. அதனால் அவரைக் குடக்கர் ஆறுமுகம் என்றழைப்பாராயினர்.

கதிரவேலுவிற்கு ஒவ்வொரு நாளும் ஆறுமுகம் பற்றி முறைப்பாடுகள் வந்தன. அந்த வேளைகளில் அவர் புகையிலைப் பாடங்களை அடுக்கிக் கொண்டிருப்பார். அல்லது அம்மன் கோயில் வேப்பமர நிழலில் அமர்ந்திருப்பார் அல்லது தனது நண்பர் அருளம்பலத்துடன் அளவளாவிக் கொண்டிருப்பார். (நண்பர் அருளம்பலத்தின் மீதுள்ள பிரியத்தால் பிற்காலத்தில் ஆறுமுகம் தனது மூத்த மகனுக்கு அருளம்பலம் என்று பெயரிட்டார்.)

ஒரு கலியாணத்தைச் செய்து வைத்து விட்டால் அடங்கி விடுவார், பொறுப்பு வந்து விடும் எனப் பெற்றோர் எண்ணினர். ஆனால் ஆறுமுகம் திருமணத்தில் விருப்புடையவராக இருக்கவில்லை. இருபத்தெட்டு வயது வரை அவரை ஒப்புக் கொள்ள வைக்க முடியவில்லை. அம்மனிடம முறையிடுவதைத் தவிர தாய்க்கு வேறு வழி தெரிந்திருக்கவில்லை.

ஒரு முறை கதிரவேலுவுக்கு உடல் நலக் குறைவேற்பட்டது. புங்குடுதீவில் விலை பேசித் தீர்த்து வைத்திருந்த புகையிலைச் சிப்பங்களை அங்கு சென்று யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வருமாறு ஆறுமுகத்தையும் கூலியாட்களையும் அனுப்ப நேர்ந்தது. முன்னரும் இப்பணிகளில் ஆறுமுகம் ஈடுபட்டிருந்தார். புங்குடுதீவிற்குச் செல்வதாயின் இரண்டு கடல்வழிகளைத் தோணிகளில் கடக்கவேண்டும். முதலில் பண்ணைக்கடல் வழி, பின்னா வேலணைத் தீவையும் புங்குடுதீவையும் இணைக்கும் கடல்வழி (வாணர் அணை) என்பனவற்றினைப் பாய்தோணிகளில் அல்லது சிறு வள்ளங்களில் ஏறிக்கடக்கவேண்டும். புங்குடுதீவில் பார வண்டிலில் புகையிலைச் சிப்பங்களை ஏற்றி இரண்டு கடல்வழி தோணித்துறைகளில் இறக்கி வள்ளங்களில் ஏற்றி யாழ்ப்பாணம் கொண்டு வர நான்கு நாட்களாவது செல்லும். புங்குடுதீவுப் பயணத்தால் ஆறுமுகத்திற்கு இரண்டு பலன்கள் கிடைத்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று அவருடைய மனதைக் கவர்ந்து கொண்ட நாகமுத்து. புங்குடுதீவு உடையார் ஐயம்பிள்ளையின் பரம்பரையில் வந்த இன்னொரு ஐயம்பிள்ளையிடம் தான், புகையிலைச் சிப்பங்கள் ஏற்றி வர ஆறுமுகம் சென்றிருந்தார். புங்குடுதீவுச் சிவன்கோயில் அருகில் அவர் வீடு இருந்தது. அங்கு தான் ஆறுமுகம் நாகமுத்துவைச் சந்தித்தார். அவர் மனதிற்குள் அவள் எப்படிப் புகுந்து கொண்டாளென்பது அவருக்குப் புரியவில்லை.

இன்னொரு அனுபவம் புகையிலைச் சிப்பங்களை ஏற்றிக் கொண்டு பார வண்டிலுடன் வந்து கொண்டிருக்கும் போது மண்டைதீவுப் பக்கமிருந்து பலர் விரைந்து வந்து பிரதான மண்பாதையில் ஏறினர். வண்டிலின் முன்னால் நடந்து வந்து கொண்டிருந்த ஆறுமுகம் அவர்களைக் கண்டார். குழந்தைவேல்சுவாமிகளும் ஆறுமுகத்தின் நண்பர் அருளம்பலமும் அவர்களில் இருந்தனர். நண்பரைக் கண்டதும் ஆறுமுகம் அவரிடம் சென்றார். கடையிற்சுவாமிகள் நீராவியடியில் ஒடுங்கிக் கொண்டிருப்பதாகவும் (சமாதி ஒடுக்கம் 1891) அதற்காகக் குழந்தைவேற்சுவாமி, நன்னித்தம்பிசுவாமி ஆகியோரை தான் மண்டைதீவிலிருந்து அழைத்துச் செல்வதாகவும் அருளம்பலம் தெரிவித்தார். புகையிலைச் சிப்பங்களைக் கவனமாக யாழ்ப்பாணத்திற்குக் கொண்டு வந்து சேர்க்குமாறு கூலியாட்களிடம் தெரிவித்துவிட்டு அக்கோஷ்டியுடன் ஆறுமுகம் நீராவியடிக்கு வந்து சேர்ந்தார்.

தென்னிந்தியாவின் பங்களூரிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு ஞானகுருவாக வந்து வண்ணார்பண்ணையில் தங்கி பெரிய கடைப் பகுதி எங்கும் பித்தனாக அலைந்து கடையிற் சுவாமி என்ற காரணப் பெயரோடு அருள் நிறைவாக நீராவியடியில் சமாதி கூடும் காலத்தில் நிஷ்டையில் அமர்ந்தார். கால்களை மடக்கி இரு கைகளையும் தியானக் கோலவடிவில் மடியில் வைத்தவாறு சமாதியாகியிருந்தார். நிலத்தில் அவர் எதுவிதமான ஆதாரமுமின்றி அமாந்திருந்தார். அவரைச் சுற்றி தேஜஸ்மயமான ஒளி கவிந்திருப்பதாக ஆறுமுகத்திற்குப்பட்டது.

'சுவாமி என்றழைத்தவாறு எல்லாரும் அவர் முன் பணிந்தனர். ஆறுமுகம் அப்படியே சாஸ்டாங்கமாக அவர் முன் விழுந்தார். சமாதிக்குரிய முன்னேற்பாடுகள செய்யப்பட்டிருந்தன. சமாதி வைபவத்தினை குழந்தைவேற்சுவாமி ஆற்றினார். ஆறடி ஆழத்தில் நான்கடி அகலச் சதுரக்குழி ஒன்று தயாரிக்கப்பட்டிருந்தது. செங்கற்கள், உப்பு மற்றும் வாசனைத் திரவியங்கள் அதன் அருகில் குவிக்கப்பட்டிருந்தன. கடையிற்சுவாமியை அவர் அமர்ந்த நிலையிலேயே அபிஷேகத் திரவியங்களால் அர்ச்சித்து தீபதூபங்காட்டி குழிக்குள் தூக்கி இறக்கி அமர்த்தினார்கள். அருகிலிருந்த பொருட்களால் குழியை நிரப்பினார்கள். 'அவரது சமாதி நிலைச் சரீரத்தைத் தூக்கிக் குழிகுள் இறக்கிய போது என்னைத் தூக்கி அதற்குள் இறக்குவது போன்ற பிரமை ஏற்பட்டது. அப்பிரமை என்னைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றது. பிற்காலத்தில் ஆறுமுகம் தன் மூத்த மகன் அருளம்பலத்திடம் அந்த அனுபவத்தினை எடுத்துரைத்துள்ளார். வாங்கில் அமர்ந்தபடி தனது தந்தையின் நினைவுகளைப் பலதடவைகள் அருளம்பலம் அம்மான் மருமகனான என்னிடம் எடுத்துரைத்துள்ளார்.

கடையிற்சுவாமிக்கு சமாதி கட்டினார்கள். சமாதிக் குழிமேல் மேடையமைத்து சிவலிங்கம் ஒன்றினைப் பிரதிஸ்டை பண்ணினார்கள். சமாதி வைபவத்தினைத் தொடர்ந்து தொடர வேண்டிய பூஜா கைங்கரியங்கள் குழந்தைவேற்சுவாமியால் ஆற்றப்பட்டன. அந்தப் பூஜா கைங்கரியங்கள் நடந்த கால வேளைகளில் ஆறுமுகம் தன்னையே உற்றுப பார்த்தவாறு எதையோ யார்சிப்பது போல அமர்ந்திருப்பதைக் குழந்தைவேற் சுவாமி அவதானித்தார். ஆறுமுகத்தின் மனநிலை அவருக்குப் புரிந்தது. ஏழாம் நாள் சமாதி வைபவ நிறைவில் குழந்தைவேற் சுவாமிகள் ஆறுமுகத்தின் அருகில் வந்தார். அவர் தோளில் தன் வலக் கரத்தினைப பதித்தார். ''வாழ்ந்து முடித்துவிட்டு வாடா'' இவை தான் அவருக்குக் குழந்தைவேற்சுவாமிகள் கூறிய வார்த்தைகள். குருவின் பரிச தீட்சையும், குருவின் வாசக தீட்சையும் ஆறுமுகத்திற்குப் புதிய வாழ்க்கையினைச் சுட்டிக்காட்டின.

1891இல் ஆறுமுகத்திற்கு அவருடைய இருபத்தெட்டாவது லயதில் கடையிற்சுவாமி சமாதி அடைந்த அதே வருடத்தில் திருமணம் நடந்தேறியது. அவர் மனதில் சலனத்தை ஏற்படுத்திய புங்குடுதீவு நாகமுத்து மனைவியாக வந்து இணைந்தார். 1907 ஆம் ஆண்டு வரை ஆறுமுகத்தின் வாழ்க்கை சீராக ஓடியது. அருளம்பலம், தையல்முத்து, இராசம்மா, பொன்னுத்துரை, அன்னம்மா, வைத்திலிங்கம் என ஆறு பிள்ளைகளுக்குப் பெற்றோராயினர்.

குடும்பத்துடன் மனைவி வீட்டிற்குப் புங்குடுதீவிற்குச் செல்கின்ற வேளைகளில ஆறுமுகத்திற்கு மிகப்பிடித்தமான இடமாகத் தேவிமுனைக் கரையும் அதில் ஓங்கி வளர்ந்திருந்த ஆலமரநிழலும் விளங்கின. எப்படி அம்மன் கோயில் வேப்பமரநிழல் அவருக்குப் பிடித்தமாக இருந்ததோ அது போல தேவிமுனை ஆலமரம் விளங்கியது. அதில் அமர்ந்து நயினாதீவையும் அதில் உறையும் அம்மனையும் சிந்தித்தபடி இருப்பார்.

சிலவேளைகளில் வள்ளம் ஏறி நயினாதீவிற்குச் சென்றுவிடுவார். ஓரிரு நாட்கள் வராதிருந்து விடுவார். சில நாட்கள நெடுந்தீவிற்குச் சென்று அங்கிருந்து கச்சதீவிற்குப் பயணப்பட்டு கச்சதீவில் தென்னங்கீற்றுச் சிறுகுடிலில் இராமேஸ்வரத்தினைப் பார்த்தபடி அமர்ந்திருக்கும் அநுமனை வணங்கிவிட்டு மீன்பிடி வள்ளம் ஒன்றில் ஏறி இராமேஸ்வரத்திற்குச் சென்றுவிடுவார். அங்கிருந்து தலயாத்திரை மேற்கொள்வது அவர் வழக்கமாகிவிட்டது. சில நாட்கள் அலைந்து திரிந்துவிட்டு மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு வல்வெட்டித்துறையூடாகவோ மன்னார் ஊடாகவோ நெடுந்தீவு ஊடாகவோ வந்து சேர்வார். எதுவும் பேச மாட்டார். மௌனமாக அமர்ந்திருப்பார். சிந்தனை வயப்பட்டிருப்பார். அவர் போகினைச் சித்தன்போக்கு என்று அனைவரும் புரிந்து கொண்டனர்.

குடும்ப சுமை அவருக்கு இருக்கவில்லை. 62 வயதான கதிரவேலு பார்த்துக் கொண்டார். அவரின் புகையிலை வர்த்தகம் மிகச் செழிப்பாக நடந்தது.

1908 ஆம் ஆண்டு மார்கழி மாதம் ஒரு நாள் ஆறுமுகம் காணாமல் போயினார். அவர் வள்ளம் ஏறி இந்தியாவிற்குச் சென்றுவிட்டார் என்பது தெரிந்தது. 1918 ஆம் ஆண்டு அவரை ஸ்ரீவில்லிபுத்தூரில் கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்மன் கோயிலின் பூசகரான துரையப்பாஐயரின் தந்தையும், யாழ்ப்பாணத்தின் மேலதிக அரசாங்க அதிபராக விளங்கிய வைத்திலிங்கத்தின் பேரனாருமான அருணாசலக் குருக்கள் சந்திக்கும் வரை அவர் பற்றிய விபரங்கள் எவருக்கும் தெரிந்திருக்கவிலலை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராமேஸ்வரத்திலிருந்து திருத்தலங்கள் ஒவ்வொன்றாக ஆறுமுகம் யாத்திரை செய்தார். அவருடைய திருக்கோலமும் மாறியது. சித்தர்களுடனும் துறவிகளுடனும் சேர்ந்து அலைந்தார். மௌன சுவாமியாக (மோனகுரு) விளங்கினார். அவருடைய அருட்பார்வையே பக்தர்களுக்கு மருந்தாக அமைந்தது. 'மங்களம் சேர் திருவிழியால் அருளைப்பொழியும் வானவர்கோன் என்கிறார் பாரதியார். அவருடைய ஞானத்தில் அருட் செய்கைகளில் ஈடுபாடு கொண்ட முக்கியமான துறவிகளாக குள்ளச்சுவாமி, கோவிந்தசுவாமி, குவளைக்கண்ணன் என்போர் விளங்கினர். கோவிந்தசுவாமியை நெட்டைச்சுவாமி என்றும், குள்ளச்சுவாமியை மாங்கொட்டைச் சுவாமி என்றும் அழைத்தனர். இவர்கள் ஊருராகத் தலங்கள் தலங்களாக திரிந்தனர். சுப்பிரமணியபாரதியாரை அவர்கள் சந்தித்த சம்பவம் மிகமுக்கியமானது.

1908 முதல் 1918 வரை ஆங்கிலேயர் பாரதியாரைச் சிறைப்படுத்தத் தேடியதால் அவர் எட்டையபுரத்தினை விட்டுத் தலைமறைவாகப் புதுவையில் வாழ்ந்து வந்தார். தலயாத்திரையின் போது புதுவைக்கு வந்திருந்த சுவாமியை பாரதியார் சந்திக்க நேர்ந்தது. அச்சந்திப்பை 'காவி வளா தடங்களிலே மீன்கள் பாயும் கழனிகள் சூழ் புதுவையிலே அவனைக் கண்டேன் என்கிறார் பாரதியார். யாழ்ப்பாணத்துச் சுவாமியின் அருட்பார்வை பாரதியாருக்குக் கிடைத்தது. அவரை மீண்டும் சந்திக்க பாரதியார் அவாக் கொண்டபோது, புதுவையில் பாரதியார் கரந்துறைந்த இல்லத்திற்கு யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமியை அழைத்துச் சென்று பாரதிக்கு அறிமுகப் படுத்தியவர் குவளைக்கண்ணன் சுவாமியாவார்.

ஜகத்தினிலோர் உவமையிலா யாழ்ப்பாணத்துச்
சாமிதனை இவனென்றன் மனைக் கொணர்ந்தான்.
அகத்தினிலே அவன் பாத மலரைப் பூண்டேன்.
அன்றேயப் போதேவீ டதுவே வீடு.

என்கிறார் பாரதியார்.

யாழ்ப்பாணத்தீசன் என்றும், சங்கரன் என்றும், யாழ்ப்பாணத்துச் சுவாமியை பாரதியார் போற்றுகிறார். பாரதியார் இன்னொருவிடத்தில் யாழ்ப்பாணசுவாமியை மோன குரு என்கிறார். 'மோனகுரு திருவருளால் பிறப்பு மாறி முற்றிலும் நாம் அமரநிலை சூழ்ந்து விட்டோம் என்கிறார். புதுவையில் பாரதியாரோடு இத்துறவிகள் பல காலம் தங்கியிருந்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமியால் ஓரிடத்தில் தங்கியிருக்க முடியவில்லை. 1916 -களில் அவர் ஸ்ரீவில்லிபுத்தூா வந்தார். சாத்தூர் பெருந்தெருவிலுள்ள புளியந்தோப்பு மயானபூமி அவருக்கு உகந்த சாந்தி தவமும் இடமாகப்பட்டது. இவரோடு நெட்டைச்சுவாமி, குள்ளச்சுவாமி இருவரும் கூடவே வந்திருக்கலாம்.

புளியந்தோப்பில் தான் சத்திரப்பட்டி ஜமீன்தார் சங்கரபாண்டி என்பவரைச் சந்திக்க நேர்ந்தது. ஆறுமுகசுவாமியின் மீது அளவிலா பக்தி கொண்டவராக ஜமீன்தார் விளங்கினார். ''சென்ற பிறப்பில் நீ எனக்கு மகனாக இருந்தாய். நான் சமாதி கூடும்போது நீ தான் அக்காரியங்களைச் செய்ய வேண்டும்.. நீ எங்கிருந்தாலும் அந்த வேளை நீ இங்கிருப்பாய்.'' என்ற வேண்டுகோளை ஜமீன்தார் ஏற்றுக கொண்டார். அச்சுற்றாடலிலுள்ள சாலியர் சமூக மக்கள் சுவாமியிடம் பக்தியும் நம்பிக்கை



யும் கொண்டிருந்தார்கள். அவர்களுடைய துன்பங்களைத் தீர்க்கும் மகானாக அவர் விளங்கினார்.

1918 ஆம் ஆண்டு சித்திரை நாளில் யாழ்ப்பாணத்து அருணாசலக்குருக்கள் ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தல யாத்திரை மேற்கொண்டு வந்திருந்தார். கலட்டி எச்சாட்டி மஹாமாரி அம்மன் கோயில் குருக்கள் அவர். ஆறுமுகத்தினை நன்கு தெரிந்த அயலவர். ஸ்ரீவில்லிபுத்தூரில் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி கோதையைத் தரிசித்துக் கொண்டிருக்கும் போது, புளியந்தோப்பில் அருளாளனாக யாழ்ப்பாணத்துச் சுவாமி ஒருவர் இருப்பதாகக் கேள்விப்பட்டார். ஊர் உந்துதல் காரணமாக மாட்டு வண்டிலில் ஏறி அங்கு வந்து சேர்ந்தார். ஆறுமுகசுவாமியை அருணாசலக்குருக்கள் முதலில் அடையாளம் காணவில்லை. சுவாமிகள் அடையாளங் கண்டு கொண்டார்.

''இருங்கள் குருக்களே. அன்னத்திற்குக் கலியாணம் நடந்தேறிவிட்டதா?'' என்று ஆறுமுகம் வினவியதும் அருணாசலக்குருக்கள் அவரை அடையாளம் கண்டு கொண்டார். அன்னம் சுவாமிகளின் கடைசி மகள்.

''உன் பிள்ளைகள் கடைசி மகன் வைத்திலிங்கத்தைத் தவிர எல்லாருக்கும் திருமணமாகிவிட்டது. நல்லா இருக்கின்றனர். நீங்கள் ஊரை விட்டு வந்து பத்து வருடங்களுக்கு மேல் ஆகின்றது. என்ன செய்தீர்கள்? எங்கெங்கு போனீர்கள்? யார் யாரைச் சந்தித்தீர்கள்?''

அருணாசலக்குருக்களுக்கு ஆறுமுகம் விரிவாகச் சொன்னார். அதனை அவா ஆறுமுகத்தின் மூத்தமகன் அருளம்பலத்திற்கு யாழ்ப்பாணம் வந்து விரிவாகச் சொன்னார். அவரின் எல்லாப் பிள்ளைகளுக்கும் எடுத்துரைத்தார்.

அருணாசலக்குருக்கள், தான் அன்றே இராமேஸ்வரம் சென்று யாழ்ப்பாணம திரும்புவதாகக் கூறினார். நாளை ஒரு நாள் தங்கிச் செல்லுமாறு ஆறுமுகம் கேட்டுக் கொண்டார். அவரது கோரிக்கையை அருணாசலக்குருக்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதிகாலை புறப்பட்டுவிட்டார். அவர் பயணப்பட்ட வண்டிலை இழுத்த எருதுகள் சங்கரன்கோயில் அருகில் நிலத்தில் படுத்துவிட்டன. வண்டிக்காரன் எவ்வளவு முயன்றும் எருதுகள் எழ மறுத்து அடம்பிடித்தன. குருக்களுக்கு மனதில் ஒரு கலக்கம். ''வண்டியை மீண்டும் ஸ்ரீவில்லிபுத்தூருக்கே திருப்பு என்றார். அவ்வால் நம்ப முடியவில்லை. எருதுகள் எழுந்து நின்றன. புளியந்தோப்பினை நோக்கி வேகமாக நடந்தன.

ஆறுமுகசாமி சமாதி ஆகிக்கொண்டிருக்கிறார் என்ற தகவல் பரவியது.

யாழ்ப்பாணத்து சுவாமிகள் தியான நிலையில் அமர்ந்திருந்தார். சத்திரப்பட்டி ஜமீன்தார் சங்கரபாண்டி தலைமையில் ஊர்மக்கள் கூடியிருந்தார்கள். சுவாமியை அவ்வாறே தூக்கி இருத்தத்தக்க அளவில் குழி தோண்டப்பட்டிருந்தது. செங்கற்கள், உப்பு ஏனைய அபிஷேகத் திரவியங்கள் என்பன குவிக்கப்பட்டிருந்தன. ஆறுமுக சுவாமியைச் சுற்றி ஒரு பிரகாசம் பரவுவதை அருணாசலக் குருக்கள் கண்டார். சமாதி நிலையில் அபிஷேகம் நடந்தது. பால், தயிர், சந்தனம், விபூதி, பன்னீர் என்பனவற்றால் அபிஷேகம் செய்தனர். இறுதியாக நெய் நிரம்பிய மண் சட்டியை அவரின் சிரசில் வைத்தனர். கெட்டித்திருந்த நெய் உருகிப் பொங்கிச் சிரசின் வழியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிவதைக் குருக்கள் கண்டார். கரங்களைக் கூப்பி வணங்கினார்.

யாழ்ப்பாணத்து ஆறுமுகசுவாமி சமாதி வைக்கப்பட்டார்.....

சமாதியின் மீது, சிவலிங்கத்தைப் பிரதிஸ்டை செய்வித்து சிறியதொரு ஆலயம் ஜமீன்தார் அமைப்பித்தார். கர்ப்பக் கிரகம், அர்த்தமண்டபம் என்பன கல்லினால் சமைக்கப்பட்டன. முன் மண்டபம் தென்னங்கீற்றுக் கொட்டகையாக விளங்கியது. அதனை இன்று கற்கட்டிடமாக ஆறுமுகசாமியின் பரம்பரையினரான நாம் அமைத்துளளோம்.


இந்த ஆலயத்தினை அதன் சுற்றாடலிலுள்ள ஆறு ஊர் சாலியா சமூகத்தினருகுப் பாத்தியப்பட்டது. அவர்களினால காலம் காலமாகப் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. பண்டாரம் ஞர்னகுருசாமி கோயிலின் பூஜா கைங்கரியங்களைக் கவனித்து வருகின்றார்.

தேவி பதம் மறவாத தீர ஞானி
சிதம்பரத்து நடராஜ மூர்த்தி யாவான்
பாவியரைக் கரை யேற்றும் ஞானத தோணி
பரம பத வாயினெனும் பார்வையாளன்
மங்களஞ் சேர் திரு விழியால் அருளைப் பெய்யும்
வானவர் கோன் யாழ்ப்பாணத் தீசன தன்னை
சங்கரனென் றெப்போதும் முன்னே கொண்டு
சரணரடைந்தால் அது கண்டீர் சர்வ சித்தி.

சுப்பிரமணியபாரதியார்

அம்மா் ஆறுமுகசாமியின் கதையை அடிக்கடி கூறுவார்.


**மல்லிகை ஆண்டுச் சந்தாதாரராகச் சேருபவர்கள் கவனத்திற்கு....**



**ஆண்டுச் சந்தா 600/-**
**தனிப்பிரதி 40/-**
**ஆண்டு மலர் 200/-**

**ஓராண்டுச் சந்தாவுக்குக் குறைந்தது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.**

**வங்கித் தொடர்புகளுக்கு:**

**Dominic Jeeva 072010004231,- Hatton National Bank. Sea Street, Colombo - 11.**

**44வது ஆண்டு மலர் தரமான தயாரிப்பு. விரும்பியோர் தொடர்பு கொள்ளவும்.காசோலை அனுப்புபவர்கள் Dominic Jeeva எனக் குறிப்பிடவும். காசுக்கட்டளை அனுப்புபவர்கள் Dominic Jeeva. Kotahena, P.O. எனக் குறிப்பிட்டு அனுப்பவும்.**

***தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :***

201/4, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13. தொலைபேசி : 2320721




# கடுகுக் கவிகள் 6

**– அகியோபி**

## ஏழைத்தாய்

அவள்,
அவித்தும் பொரித்தும் போடுகிறாள்!
அந்தச் சோற்றுப் பானையைப் போல்
அந்தத் தாச்சிச் சட்டியைப் போல்
ஆனாலும்,
அவள் வயிறு நிறைகிறது!

## பெரும் பணி எது?

திருப்பணிப் பட்டியல்
திருக் கோயிற் சுவரிலே
வர்ணந்தீட்டி விளக்கப்பட்டுள்ளது!
அந்தத் திரு வீதியிலே,
அன்றாடம் வயிற்றுப் பணி தீர்க்கும்
அம் முதியவரின் பிச்சைக்கலம் அழுகிறது!

## பஞ்சி

கஞ்சியைக் குடித்து வளர்ந்த
ஆச்சிக்கு இல்லைப் பஞ்சி–
அவள் கையுணவில் வளர்ந்த
அம்மாவிற்கு இல்லை பஞ்சி!
மிக்சியில், குக்கரில், ஹீற்றரில்
குஷியாய் வேலை பார்க்கும்
மகளுக்கு வந்ததேன் பஞ்சி?

## பிச்சைக்காரி

வெளி நாட்டில் புருஷன்,
வெளிப்பான வீடு வளவு!
செழிப்பான சுற்றத்தவர்–
பணக் கொழிப்பான வாழ்வு!
அவ்வூரில் அவள்தான் பணக்காரி!
ஆனாலுமவள் பிச்சைக்காரி!
பள்ளியறைக்கு மட்டும்,
பிச்சை வாங்க முடியாத பிச்சைக்காரி!

## இரவுகளுக்கு லீவு

இதுவரை நிராகரிக்கப்பட்ட,
இரவுகளின் லீவு விண்ணப்பம்–
இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது!
ஏனெனில்,
இன்றுதான் எனது–
வாரிசின் பூலோகப் பிரவேசம்!

## சாதி

முட்களை மூடிப் படர்ந்திருக்கும்,
பூ மஞ்சம்!
பூரணத்துக்குள்ளேயொரு,
பூச்சியம்!
புழுதியுள் புதையுண்ட
பாம்புபல்!
மனப் பொந்துள் கரந்துறையும்
மாயப் பிசாசு.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படி ஒரு நிறமாகினோமோ?

– ரா. நித்தியானந்தன்

நிற்பதற்கு கால் எதற்கு?
கை குலுக்க விரல் எதற்கு?
கண் இருந்தால் விழி பார்க்கும்.
அதனையும் எடுத்துவிடு.

எதுவுமே நிறமில்லை என்று சொல்லிவிடு.
பின்னால் ஒரு நிழலிருக்கும்.
அது நீட்டி வைக்கும் முனை எல்லாம்
நிறம் பரப்பும்......

வாழ இனி நிலமில்லை- எம்
வக்கணைக்கு நாடில்லை.
வாயிருக்கு நாக்கில்லை.
எமது உளறல் இனி மொழியாகும்.
அது கூடக் கேட்காது
செவிக்குள்ளே துளையிருக்கும்.
அங்கே- சின்னங்கள் பதிந்திருக்கும்.

இனி, திருப்பித் திருப்பி பேசாதே
போதும் உன் பேச்சு.
முடிந்து போனது
தமிழர்களின்......
பேசியே தீர்ந்து விட்ட யுகம்.



# படைப்பியல் நபுன்சகர்

-'ஜின்னாஹ்'

நன்செய் நிலமென்ற போதும் - விதை
நன்றன்றிச் சொத்தையென் றானால்
என்றுமே விளைந்திட மாட்டா - ஒரு
நாளுமே பலன்தர மாட்டா

முற்பகல் விளைவித்த பயிர்கள் - பின்னாள்
முழுமையும் நலந்தரு மாயின்
சும்மாயி ருந்துண்ண லாமே - மக்கட்
பேறது தெய்வத்தின் அருளாம்.

இரும்பினால் கட்டிடும் சட்டம் - போல
எழுதிடும் சொற்கூட்டம் என்றும்
கவிதையென் றோர்நாளும் ஆகா - இதைச்
செய்பவன் கொல்லனே யாவான்

யாப்பினை அறியாத மூடன் - கவி
எழுத்தெண்ணிப் பாடுதல் தன்னைப்
பழிப்பதில் பிழையேதும் உண்டோ - பாவம்
பிளைத்தவன் போகட்டும் விட்டோம்

ஆய்வறி வாளர்கள் தேடி - அதில்
ஆய்வுகள் செய்துமே மேலாம்
பட்டங்கள் பெறுகின்ற நூலைத் - தேரான்
பழித்திடில் பேயனென் றாவான்.

மலப்புழு மணமறி யாதே - தேனின்
மதுரமும் தேர்ந்திட மாட்டா
தலைகீழாய் நின்றழு தாலும் - கீழோன்
தலைமைக்கு தகுதிபெ றானே.

அய்ம்பது அறுபது ஆண்டு - செய்த
அரைப்பணம் பெற்றிடாச் சொத்தை
உருப்பெற மாட்டாதே பின்னாள் - யாரும்
உற்றாய்ந்து பார்த்திட மாட்டார்

கண்ணாடி வீட்டினுள் வாழ்வோன் - பிறர்
கல்வீட்டில் கல்லெறி செய்தால்
இல்லையென் றாவனே இல்லம் - அவன்
இருப்பிடம் பொடிப்பொடி யாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் நினைவுகள்; 25

# தமிழக இலக்கிய உறவு

–திக்குவல்லை கமால்

தமிழக இலக்கியவாதிகளோடு தனிப்பட்ட உறவென்று எனக்கு என்றுமே இருந்ததில்லை. தமிழக சஞ்சிகைகளோடு கொண்ட உறவுதான். என்னைப் பொறுத்தவரையில் தமிழக இலக்கிய உறவாகும்.

அதிலும் அமோகமாக விற்பனையாகும், ஜனரஞ்சகச் சஞ்சிகைகள் எனது மேலோட்டமான வாசிப்புக்கு உரியனவாகவே இருந்தன. முதன் முதலில் எனக்கு நெருக்கமான இலக்கிய சஞ்சிகை 'தீபம்' அதற்கு நா. பார்த்தசாரதி ஆசிரியராக இருந்ததே காரணமென்று நினைக்கிறேன்.

அகிலன், மு. வரதராசன், நா. பார்த்தசாரதி என்று வாசித்துக் குவித்த ஒரு காலம் இருந்தது. அதிலும், நா. பாவில் எனக்கு அலாதி விருப்பம். குறிப்பாக அவரது பொன் விலங்கு, குறிஞ்சி மலர் போன்ற நாவல்களில் இடம் பெறும் வாழ்க்கைத் தத்துவக் கருத்துக்கள் என்னைப் போன்ற இளவயதினரை வெகுவாகக் கவர்ந்தன.

அந்த ஈர்ப்பின் காரணமாகவே பின்னர் 'தீபம்' மீது எனக்குப் பிடிப்பு ஏற்பட்டது. அதிலும் கூட, அவரது தொடர் நாவல்கள் இடம் பெற்றன. தீபத்தில் அவ்வப்போது இலங்கை எழுத்தாளர்களின் ஆக்கங்கள் வெளிவருவதுண்டு. ஒரு தடவை இலங்கை மலர் கூடப் போட்டதுண்டு. இலங்கை இலக்கிய நிகழ்வுகளைத் தொகுத்து மாதாந்தம் இலங்கைக் கடிதம் வெளிவரும். நானும் அவ்வப்போது ரசனைக் கடிதங்கள் எழுதிக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் நா. பாவிடமிருந்து எனக்கொரு கடிதம் வந்தது. அது கடல் கடந்த வாசகனுக்குச் சஞ்சிகை ஆசிரியர் ஒருவர் எழுதும் பாங்கிலேயே அமைந்திருந்தது. இருந்தும், ஓர் ஆரம்ப கட்ட எழுத்தாளனுக்கு ஒரு புகழ் பெற்ற எழுத்தாளர், அதுவும் தமிழ்நாட்டிலிருந்து எழுதிய கடிதமாகவே நான் அதைக் கொண்டாடினேன்.

'கணையாழி'யும் எனக்குப் பிடித்த இன்னொரு சஞ்சிகை. அதன் எளிமையான அமைப்பு, வித்தியாசமான சிறுகதைகள், புதுக்கவிதைகள், சமகால பொதுப் பிரச்சினைகள் தொடர்பான எளிமையான வரைபு. இப்படிப் பல காரணங்கள். கி. கஸ்தூரி ரங்கன் காலத்து 'கணையாழி'யைத்தான் சொல்கிறேன்.

என்னைப் புதுக்கவிதைப் பக்கம் தள்ளி விட்டதில் கணையாழிக்கு நிறையப் பங்குண்டு. தொடர்ச்சியாகக் கவிதைகள் வெளிவர ஆரம்பித்தன. 'வானம் பாடி'களின் வரவு புதுக்கவிதையை இன்னொரு தளத்திற்கு இட்டுச் சென்றது. மானுடப் பெருமானத்தால் புதுக் கவிதையை நிரப்பும் இயக்கமாக மலர்ந்தது. சிலபோது வெறும் கோஷமாகவும் அமைந்ததுண்டு. சின்னச் சின்னப் புதுக் கவிதைச் சஞ்சிகைகள் மலர்ந்தன. வானம்பாடி, ஏன், எழுச்சி, வேள்வி என்று அவை தொடரும்.

அதே போன்று ஏராளமான மினித் தொகுப்புக்கள் வெளிவந்தன. சமகாலத்தில் இலங்கையிலும் அதன் தாக்கம் செயற்பட்டது.

அதன் பின்னர் தாமரை, செம்மலர் போன்ற முற்போக்குச் சஞ்சிகைகள் மீது எனது கவனம் திரும்பியது. இன்று வரை வெளிவந்து கொண்டிருக்கும் இவ்விரு சஞ்சிகைகளிலும் எனது சிறுகதைகள் வெளி வந்தன. எனது மண்வள மொழிக் கையாளுகை அவற்றுக்குப் பிரச்சினையாக அமையவில்லை.

தொண்ணூறுகளில் வெளிவந்த 'சுபமங்களா' சகல தரப்பினராலும் விரும்பப்பட்ட ஒரு வித்தியாசமான இலக்கியச் சஞ்சிகை. நாடகக்காரரான கோமல் சுவாமிநாதன் அதனைச் சாதித்தார். இலங்கையில் பிரச்சினை தொடர்ந்து கொண்டிருந்த போது, அவர் இங்கு வருகை தந்தார். அப்போது சந்திக்கக் கூடிய வாய்ப்பேற்பட்டது. பின்னர் **'இலங்கை இலக்கியப் பயணம்'** என்று அபூர்வ அனுபவங்களையெல்லாம் சுபமங்களாவில் பதிவு செய்தார்.

இலங்கை தேசிய கலை இலக்கியப் பேரவையுடன் இணைந்து சுபமங்களா ஈழக் குறுநாவல் போட்டியொன்றை நடாத்தியது. சுபமங்களாவுக்கு எழுதுவோமென்று யோசித்துக் கொண்டிருந்த போது, இந்த அறிவிப்பு எனக்கு வாய்ப்பாக அமைந்தது.

இப்போட்டியில் செ. குணரத்தினம், தெளிவத்தை ஜோஸப் ஆகியோர் பரிசு பெற்றனர். குறிப்பிட்டிருந்தது போல் மூன்றாம் பரிசை எண்மர் பகிர்ந்து கொண்டனர். அதில் நானும் ஒருவன். இதற்கான பரிசளிப்பு நடை பெறுவதற்கிடையில் கோமல் சுவாமிநாதன் காலமானார். அதன் பின்னர் சுபமங்களா ஒரேயொரு இதழ் மட்டுமே வெளி வந்தது.

பிறிதொரு சமயம் தேசிய கலை இலக்கியப் பேரவை ஒழுங்கு செய்த பரிசளிப்பு விழாவின் போது, இன்னொரு எழுத்தாளுமையான வல்லிக் கண்ணனிடம் பரிசு பெறும் வாய்ப்புக் கிட்டியது. இந்திய இலக்கியத் தொடர்பின் உச்சமாக அது எனக்குத் தெரிகிறது.

வாழும் நினைவுகள்; 26

# தேசிய விருது விழாக்கள்

ஒரு நாட்டுத் தலைவனின் கையினால் ஒரு பரிசோ சான்றிதழோ ஒருவர் பெறுவதென்பது அவரது வாழ்வில் முக்கியமான விஷயம். இந்தச் சந்தர்ப்பத்தைக் கடந்த முப்பதாண்டுகளாக நிலவிய அசாதாரண சூழ்நிலையால் இழந்தவர்கள் ஏராளம்.

உயர்மட்ட ஏற்பாடுகளைச் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள், திணைக்களங்கள் மேற் கொண்ட போதிலும், இறுதி நேரத்தில் பாதுகாப்புக் காரணங்களால் மாற்று ஏற்பாடு செய்வதன் காரணமாகவே மேற்படி சந்தர்ப்பங்கள் கிட்டாமல் போவதுண்டு.

இப்படி சில வாய்ப்புக்களைத் தவற விட்டவர்களில் நானும் ஒருவன்.

ஜனாதிபதி விருது என்பதும், ஜனாதிபதியிடமிருந்து விருது பெறுவதும் ஒன்றல்ல.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைச் சிலபேர் போட்டுக் குழப்பிக் கொள்வார்கள்.

1990ம் ஆண்டு இஸ்லாமிய வருடக் கணக்கீட்டின் படி ஹிஜ்ரி 1400ம் ஆண்டு. இதனை தேசிய விழாவாகக் கொண்டாடுவதற்கு அரசு பூரண ஒத்துழைப்பு வழங்கியது.

மாவட்ட ரீதியாகக் குழுக்கள் அமைக்கப்பட்டு பாடசாலை மாணவரிடையே பல்வேறு போட்டிகள் நடைபெற்றன. பணப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இதன் ஓர் அம்சமாகத் சிறந்த சிறுகதை, கவிதைப் போட்டிகளும் நடைபெற்றன. பரிசுத் தொகையும் அப்போதைக்குப் பெரிதாக அறிவிக்கப்பட்டிருந்ததால் உற்சாகமூட்டக்கூடும் போட்டியும் நிலவியது.

முழுநாள் இறுதி நிகழ்வு சுகததாஸ ஸ்டேடியத்தில் நடைபெற்றது. சகல மாவட்டத்தவர்களும், கலந்து கொள்வதற்கான போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. தேசிய மட்டத்தில் வெற்றியீட்டியவர்களுக்கு ஜனாதிபதி பரிசு வழங்குவது உச்சகட்டமாகவிருந்ததால் உறவினர் நண்பர்களென்று நிரம்பி வழிந்தது.

இலக்கியப் போட்டி முடிவுகளின் படி நானும் எஸ். ஐ. நாகூர் கனி, அன்பு முகைதீன், ஜின்னா ஷரிபுத்தீன் ஆகியோரும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதல் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன அவர்களிடமிருந்து விருது பெற்றோம்.

இன்னொரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாக அன்றைய முஸ்லிம் கலாசார அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் அவர்கள் அறிமுகப்படுத்திய 'வாழ்வோரை வாழ்த்துவோம்' விருது விழாவைக் குறிப்பிடலாம்.

கவனிப்பாரற்றுக் கிடந்த முஸ்லிம் கலைஞர்கள் மீது சமூகத்தின் பார்வையைத் திருப்பிய நிகழ்வு இது. நான்கு கட்டங்களாக நடைபெற்ற இந்நிகழ்வின் மூலம் நூற்றுக்கு மேற்பட்ட கலைஞர்-படைப்பாளிகள் மீது ஒளி பாய்ச்சப்பட்டது. பட்டமளித்து பொற்கிழி வழங்கப்பட்டது. வருடா வருடம் சிறப்பு மலர் வெளியிட்டு கலைஞர்களின் பணித் தொகுப்புப் பதிவு செய்யப்பட்டது.


நூறு வீதம் இது சரியாக நடந்ததென்று சொல்வதற்கில்லை. கால வரிசை முன் பின்னாகியது. தகுதியற்றவர்கள் தலை புகுத்திக் கொண்டதாகக் கடும் விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன. இக் குழறுபடிகளைச் சகிக்காத உன்னதமான படைப்பாளர்கள் சிலர் இந்த கௌரவத்தை ஏற்க மறுக்கவும் செய்தனர்.

கடைசி பஸ்ஸில் தான் என்னையும் ஏற்றினார்கள். அதன் மூலம் பிரதமர் ரணில் விக்ரமசிங்ஹ அவர்களிடமிருந்து விருது பெறும் வாய்ப்புக் கிட்டியது.

சாகித்திய மண்டலப் பரிசு, கலாபூஷணப் பட்டமென்றால் கிடைக்கப் பெற்றுள்ள போதும், நாட்டுத் தலைவர்களிடம் பெற்ற விருதுகள் குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பதிவுகளே.

ஓர் உண்மையான திருவடியாளனுக்கு இதெல்லாம் அவசியமில்லை. அவரது புலமைக்கு இவை அத்தாட்சிகளாகலாம். ஆனால், கீழ் மத்தியதர வர்க்கத் திறமைசாலிகளை தலையெடுக்க விடாத சமூக மேலாதிக்கத்திற்கு மத்தியில், எல்லோரையும் ஒருமுறை திரும்பிப் பார்த்து வியக்க வைக்க இத்தகைய நிகழ்வுகள் பெரிதும் உதவின.





# ஒரு நெருஞ்சில்

- உ. நிசா

சின்னையாத்தும்மா கடைத் தெருவைக் கடக்கும் போது ளுஹருக்கான பாங்கோசை கேட்ட வண்ணம் இருந்தது.

"மகென்..... அசுராமா நட, நட்டானாருட்டுக்கு இன்னம் ஒரு கல்லுத் தூரம் நடக்கவும் எக்கு."

அவள் தனது முக்காட்டை இழுத்துத் தலையை மூடிய வண்ணம் சிறுவனின் கையைப் பற்றி அவனின் நடையைத் தூண்டிவிட்டாள்.

"ஆச்சம்மா கால் வலிக்குது"

"சரி..... சரி வா மகென், நான் முனைக்கு பாணிவளையல் வாங்கித் தாரேன்"

அவள் பக்கத்தில் இருந்த கடையை அண்டி தான் வந்ததை அடையாளப்படுத்தி விட்டு ஒரு பக்கமாக நின்று கொண்டாள்.

"பெரியம்மா என்னத்தேன் வேணும்?"

முந்தானை முடிச்சை அவிழ்த்து, அங்கிருந்து சில நாணயங்களை அவன் கையில் கொடுத்தாள்.

"இந்தாங்கோ மகென், இதுக்கு இவனுக்குக் கை நிறையப் பாணிவளையல் குடுங்கோ"

"பெரியம்மா நீங்க இந்தப் பாதையில போறத்த நேத்தும் கண்டேன், முந்தாநாத்தும் கண்டேன். போன கெழமையும் கண்டேன்"

"அத என்னத்துக்குக் கேக்குறீங்க மகென்? இந்தப் பாழாப் போன மஹ்ரூத் நட்டானார், ஒரு சோடி காதுப்பூக்கும், ஒரு சோடிக் காப்புக்கும் என்ன அலக்கழிச்சிறாரு. சின்ன மகளுக்கு நாளைக்கித்தான் கலியாணம். நக நட்டுச் செய்யக் குடுத்து ஒரு மாசமாகியும் நேத்து வரக்கிம் கைக்குக் கெடச்செல்ல"

"பெரியம்மா மெதுவாப் பேசுங்கோ. நாடு கெட்டுப் போய் இப்ப கள்ளன் காவாலிகள் கண்ட கண்டபடியெல்லாம் திரியுறானுகள். நேத்து ஹாஜி மரிக்காருட சந்தும் நூத்தி அம்பது பவுண் காசப் பறிச்செடுத்திட்டானுகள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைக் கேட்ட சுவாரியத்தும்மாவின் முகத்தில் ஒரு எள்ளல் ஏற்பட்டது.

''ஹாஜி மரிக்காருகிட்ட காசப் பறிச்செடுத்தது சரதியலா....?''

''சரதியல் மட்டுமல்ல, மம்மல மரிக்காரும் சேந்து தான்''

''ஏண்ட உம்மண்டே, இந்த மம்மல மரிக்காருக்கு ஈமான் இஸ்லாம் இல்லாமப் போன மாதிரி''

அதைச் சொல்லும் போது அவளுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் அவள் தன் தலையைத் திருப்பும் போது, அவளின் காது இருந்த இடத்தில் மூக்கு வந்து நின்றது.

''பெரியம்மா நக நட்டுக்கள எடுத்துட்டுப் போறதாயீந்தா நேர காலத்தோட பத்திரமா ஊடு வாசலுக்குப் பெய்த்துச் சேந்திடுங்கோ''

கடை முதலாளி மெல்லிய குரலில் அவளுடன் கதைத்தார்.

''ஆச்சும்மா..... அந்தா பல்லக் கொண்டு.... ஆரோ அதுல போறாக''

''மகென் இந்த நேரம் ஆரென் அது பல்லக்குல?''

''பெரியம்மா, மொல்லிகொட குமாரி ஹாமி எங்கயோ பயணமொண்டு பெய்த்துட்டு வளவ்வுக்கு திரும்புறாக போல''

''சரி மகென், அவசரமா பாணிவளயலத் தாங்கோ. நாங்க பொழுது படுறதுக்கு முந்தி வீடு வாசலுக்குப் பெய்த்துச் சேரவும் வாணாமென்''

கடை முதலாளி வாழைச் சருகொன்றை எடுத்து அதைத் துணியொரு துண்டால் துடைத்து அதில் சில பாணி வளயல்களை வைத்துச் சுருட்டி சிறுவனின் கைகளில் வைத்தார்.

''சரி..... சரி...... நீங்க ஒகட ஊரச் செல்லெல்லியே பெரியம்மா?''

''நாங்க இங்க பக்கத்தூர் கனேதன்னயில் ஈந்து தான் மகென் வாரோம்''

''சரி..... சரி.... அல்லாட காவல் நேர காலத்தோட ஊடு வாசலுக்குப் பெய்த்துச் சேந்திடுங்கோ''

அவள் மீண்டும் சிறுவனோடு பயணத்தைத் தொடர்ந்தாள்.

''ஹாஜி மரிக்காரு எனக்குச் செஞ்ச அநியாயத்துக்கு அல்லா அவருக்கு தண்டன குடுத்தீறான்''

தட்டனாரின் வீட்டை வந்தடையும் வரை அவளின் உள்ளம் அல்லாஹ்வைப் புகழ்ந்த வண்ணமே இருந்தது.

''தட்டனார் இண்டெக்கென்டா எப்பிடிச் சரி நக நட்டு ரெண்டையும் தந்தாகோணும். நாளெக்கி மகள்ட கலியாணமும் ஈக்கு''

''மாமி காப்பு ரெண்டையும் செஞ்சிட்டேன். காதுப்பு ரெண்டயும்தான் இது செஞ்சி கொண்டீக்கிறன். முத்து பீபி.... கனேதன்ன ஆச்சி வந்தீராக. அந்தப் பாய விரிச்சி வெத்திலச் செப்ப எடுத்து வை''

அதைக் கேட்ட முத்து பீபி பாயொன்றுடன் ஓடி வந்து அதை வெளி விறாந்தையில் விரித்தாள்.

''பெரியம்மா உக்காருங்கோ. நான் வெத்திலச் செப்ப எடுத்துட்டு ஓடி வாறன்''

சுவைரியத்தும்மாவும் சிறுவனும் பாயில் உட்கார்ந்து கொண்டனர்.

வெற்றிலைச் செப்பை எடுத்து வந்த முத்து பீபி சுவைரியத்தும்மாவுக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டாள்.



''பெரியம்மா கேட்டீகளா இந்தச் சரதியல் செய்யிற அட்டகாசங்கள்.....?''

''நான் இப்ப கட வீதியால வரக்குள்ள தான் கேள்விப்பட்டேன், நேத்து ஹாஜி மரிக்காருட்ட ஈந்தும் காசி பறிச்ச கதய. என்ன ஏமாத்தி, ஏன்ட ஊடு வாசலப் பறிச்சிக் கொண்டத்துக்கு அவருக்கு அல்லா குடுத்த தண்டன அது''

''மம்மல மரிக்காரும் இந்தக் கொலகளுக்கும், கொள்ளகளுக்கும் சம்பந்தமாமே. பெரியம்மா, இன்னமொரு சூடான செய்தியும் ஈக்கு. அதயும் செல்லுறன். மொதல்ல இந்த வெத்தில பாக்க வாயில போட்டுட்டு இரீங்கோ''

பாக்கு, சுண்ணாம்பு, புகையிலையுடன் இன்னும் சில வாசனைப் பொருட்களும் வைத்து மடிக்கப்பட்ட வெற்றிலையை முத்து பீபி சுவைரியத்தும்மாவின் கைகளில் வைத்தாள். அதன் பின் முத்து பீபியின் கண் ஜாடைக் குறிப்பை சுவைரியத்தும்மா புரிந்து கொண்டாள்.

''மகென் செய்யது, அந்தப் பக்கமாப் பெய்த்து தட்டனார் நக செய்யிரத்த பாரு மகென்''

அதைக் கேட்ட செய்யது அங்கிருந்து நகர்ந்து சென்று தட்டனாருக்குப் பக்கத்தில் நின்று கொண்டான்.

''சூடான கதயொண்டு ஈக்கென்டு சென்னியே, இப்ப இனிச் செல்லு?''

''அதச் செல்ல ஏன்ட வாய் கூசுது பெரியம்மா''

சுவைரியத்தும்மா வெற்றிலையை வாயில் போட்டுக் கொள்ள, முத்து பீபியும் தன் கையில் மடித்து வைத்திருந்த வெற்றிலையை வாயில் போட்டுக் கொண்டாள். அதன் பிறகு சுற்றும் முற்றும் பார்த்து விட்டு சுவைரியத்தும்மாவின் காதருகே சென்றாள்.

''மம்மல மரிக்காருக்கு தங்கஉம்மா என்டு தங்கச்சி ஒத்தி ஈக்கிறாளாம். அவள் சரதியலுக்கு வப்பாட்டியா நிக்கிறாளாம்''

''ஏண்ட உம்மண்டே, ஒரு மாறு சாதிக்காரனுக்கு அவள் வப்பாட்டியா நிக்கிறாளாமா? பாத்து முத்து நாயகீட பரம்பரலே வந்த பொண்டுக நாங்க. இவளக் கழுத்து வரக்கிம் பொதச்சி கல்லடிச்சிக் கொல்ல இந்த நாலுவெல்ல மண்ணுல மனிசர் இல்லியா?''

தங்கஉம்மாவின் வீட்டுக்கு சரதியல் வந்து போகும் கதைகளை மேலும் பலுப்புப் போட்டு முத்து பீபி கதைத்துக் கொண்டிருந்தாள். சுவைரியத்தும்மா மிக்க ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''மாமி நகநட்டுளச் செஞ்சி முடிச்சிட்டேன். வந்து கொற நெற ஈந்தாச் சொல்லுங்கோ''

இதைக் கேட்ட சுவைரியத்தும்மாவின் நெஞ்சு குளிர, அங்கிருந்து எழுந்து தட்டனார் பக்கம் வந்து முக்காட்டை இழுத்துத் தலையை நன்றாக மூடிக் கொண்டாள்.

''மாமி இந்தா ஈக்கு காப்பு ரெண்டும் காதுப்பும். கையில எடுத்துப் பாருங்கோ. கொறநெற ஈக்கா எண்டு. மீதமுள்ள தங்கமும் அதோட ஈக்கு. சரதியலுக்குப் பயந்து ஒழிச்சி மறச்சித்தான் நக செய்ய வேண்டீந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துது. அதனால சொனங்கினதுக்கு கோவிச் சிக் கொள்ள வாணாம். உதுமான் மல உச்சியில ஒளிச்சிக் கொண்டீக்கிற சரதிய லும் மம்மல மரிக்காரும் அவன்ட கூட்டாளி மாரும் எந்த நேரம் வாரானுகள், எந்த நேரம் போரானுகள் எண்ட நிச்சயமில்லாமல் ஈக்கு மாமி. வெள்ளக்கார ராஜாவுக்கும் அவனப் புடிச்சி தண்டன குடுக்க ஏலாமல் ஈக்கு''

சுவைரியத்தும்மா நகைகளை கையி லெடுத்து மேலும் கீழுமாகப் பார்த்து விட்டு வளையல் இரண்டையும் கையிலணிந்து சிறிது நேரம் அழகு பார்த்தாள்.

''தட்டனார் கண்ணூறு வாயூறு இல்ல. நகநட்டு ரொம்ப அழகா ஈக்கு. சின்ன மகள் மிச்சம் சந்தோசப்படுவா. இனி இதுக்கு கூலியையும் எடுங்கோ''

''கூலியா? அஞ்சி சிலினும் நாலு பணம் எடுக்கோணும். சரி சரி கொமரு காரிய மாச்சே. அஞ்சி சிலின் தாங்கோ''

சுவைரியத்தும்மா தனது முந்தானை முடிச்சை அவிழ்த்து ஐந்து ஒரு சிலின் நாணயங்களை எடுத்து எண்ணி தட்ட னாரின் முன்னிலையில் வைத்தாள். அதன் பின் அவள் கொண்டு வந்திருந்த உமலை விரித்து அதற்குள் நகையை பத்திரமாக வைத்துக் கொண்டாள்.

''தட்டனார்...... நாங்க அப்போ பெய்த் திட்டு வாறோம்''

சுவைரியத்தும்மா தட்டனாரிடமிருந்து விடைபெற முத்து பீபி சிறிது தூரம் வந்து அவர்களை வழியனுப்பி வைத்தாள்.

''பெரியம்மா இருட்டு வந்துட்டுது. பத்திரமா ஊடு வாசலுக்குப் பெய்த்துச் சேருங்கோ''

பாதையில் இறங்கி சிறிது தூரம் நடக்க பெரிய நகரிலிருந்து வரும் குதிரை வண்டியொன்று அவர்களைக் கடந்து சென்றது.

''மகென் அவசரமா நட. கட வீதிக்குப் போனா வழித்துணக்கி ஆரு சரி அம்புடு வாங்க''

அவள் அப்படிச் சொல்லி விட்டு ஓட்ட மும் நடையுமாகக் கடை வீதி வரை வந்தா லும், அது ஆள் அரவமற்று வெறிச்சோடிக் கிடந்தது. சுவைரியத்தும்மா மலைத்துப் போய் விட்டாள். இருளும் படிப் படியாகச் சூழ்வதைப் பார்க்க அவளின் இதயம் திக் திக் என அடித்துக் கொண்டது. எங்கோ பள்ளி வாசல் ஒன்றில் மஹ்ரிபுக்கான பாங்கோசை ஒலித்த வண்ணம் இருந்தது. ஏனைய நாட்களில் கடை வீதியில் இரு மருங்கிலும் இடையிடையே எரியும் கொப் பறா விளக்குகள் கூட அன்று எரியவி ல்லை. அச்சமும் பீதியும் பயமும் அவளை வாட்டினாலும், அலாதியான தைரியம் ஒன்றை அவள் வரவழைத்துக் கொண்டு சிறிது தூரம் நடக்க, சற்றுத் தொலைவில் மனிதனொருவன் நடந்து செல்வதைக் கண்ணுற்றாள்.

''கொஞ்சம் இரீங்கோ..... நாங்களும் வாறோம். எங்களையும் கூட்டிட்டுப் போங்கோ''

அவள் சற்று உரக்கக் கத்தினாள். அதைக் கேட்ட மனிதன் திரும்பிப் பார்த்து விட்டு அவர்கள் வரும் வரை அங்கே காத்து நின்றான்.



சுவைரியத்தும்மா ஓட்டமும் நடையு மாக சிறுவனையும் இழுத்துக் கொண்டு போய் அந்த மனிதனுக்குப் பக்கத்தில் நின்று, அவனின் முகத்தை உற்று நோக் கினாள். வெண்ணிற உடை அணிந்து, அடர்ந்த தாடியும் வைத்து, தலைப்பாகை யும் தரித்திருந்த அவன், அவளின் பார் வைக்கு ஒதிப் படிச்ச ஓர் ஆலிமாகவே புலப்பட்டான். அந்த வகையில் அவளின் மனதில் இருந்த பதற்றம் ஓரளவு குறைந்து விட்டது.

''பொண்ணாப் பொறந்த நீங்க, இந்த ராவு நேரத்துல எங்கிருந்து வாரீக......? எது வரக்கிம் போரீக.....?''

அவனின் குரல் கடுமையாக ஒலித்தது.

''அய்யோ மகென், நாளெக்கி ஏன்ட சின்ன மகளுக்கு கலியாணம் நடக்குது. தட்டனார் ஊட்டுக்குப் பெய்த்து நகநட்டு ரெண்டு செஞ்சிட்டு வரக்குள்ள இருட்டிப் போச்சி. நாங்க கனேதன்ன வர போகோ ணும். மகென் நாங்களும் ஒங்களோட வாறோம். நீங்க எது மட்டுக்கும் போறீக?''

''சரி சரி வாங்கோ, நான் ஒங்கட ஊட் டையும் தாண்டி கடுகண்ணாவ வரக்கிம் போறேன்''

''அல்லா போதுமானவன். அவன் எங்க எக் கையுட மாட்டான். சரி மகென் நீங்க முன்னால நடவுங்கோ, நாங்க பின்னால வாறோம்''

அடிவானில் எழுந்து வரும் வளர் பிறை யின் மெல்லிய ஒளியொன்றே பாதையில் நடந்து செல்வதற்கு அவர்களுக்கு உறு துணையாக இருந்தது.

அறிமுகமில்லாத ஒருவனுடன் அது வும் இரவு நேரத்தில் எதுவும் கதைக்காமல் நடந்து செல்வது சுவைரியத்தும்மாவுக்குக் குறையாகவே பட்டது. அவள் மௌனம் கலைந்து அந்த மனிதனும் தன் குறை களையாவாவது கதைக்க நினைத்தாள்.

''மகென், நாளெக்கி சின்ன மகள்ட கலியாணம் நடக்குது. நாங்க மிச்சம் ஏழ மனிசர். ஊட்டுள எனக்கு ஆம்புளத் தொணையும் இல்ல. சின்ன மகள் பொற ந்து ஆறு மாசத்துள அவட வாப்பா மவுத் தாப் பெய்த்தாரு. அப்ப பெரிய மகளுக்கு ரெண்டு வருஷமீக்கும். படாத பாடு பட்டு புள்ள ரெண்டையும் வளத்து ஆளாக்கிட் டேன். அதுக்குப் பொறகு மூத்த மகளுக்கு கலியாணம் ஒன்ற செஞ்சி வச்சேன். மாப்புளக் காரன்ட பொய் பொறட்டாலேயும், குடி சூதாலேயும் மகள்ட குடும்ப வாழ்க்க கலஞ்சி போக, அவ வாத்த கேட்டுக் கொண்ட இந்தப் புள்ளயோட ஊடுக்காகி ட்டா. இவனுக்கு இப்ப எட்டு வருஷமாகுது''

''ஆச்சும்மா...... கால் ரெண்டும் வலிக்குது''

சுவைரியத்தும்மாவின் பேச்சை தனது காதிலே போட்டுக் கொள்ளாது மௌனமாக நடந்து வந்த மனிதன் சிறுவனின் குரலைக் கேட்டு பின்னே திரும்பிப் பார்த்தான்.

''வா மகென். நான் ஒன்னத் தூக்கி கழுத்தில வச்சிக் கொண்டு நடக்குறேன்''

''அய்யோ மகென், நீங்க எங்க இந்தப் புள்ளய தூக்கிக்கிட்டு நடக்க. நீங்க முன்னுக்கு நடவுங்கோ. நானும் அவனும் மெதுவா பின்னால வாறோம்''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மனிதன் அதைக் கேட்காதது போல, சிறுவனைத் தூக்கி தோளில் வைத்துக் கொண்டு நடக்கத் தொடங்கினான். சுவைரியத்தும்மா அவனைத் தொடர்ந்ததுடன் அவனின் உடல் வலிமையை அவள் தன் உள்ளத்தால் வியந்த வண்ணம் நடந்து கொண்டிருந்தாள்.

''மகென், இனிக் கதயக் கேளுங்கோ. பெரிய மகள்ட கலியாணச் செலவுக்கு எடுக்க நான் ஏன்ட ஊட்டையும் காணியையும் ஹாஜி மரிக்காருக்கு ஈடு வச்சிப் பத்துப் பவுன் காசி வாங்கினேன். அந்தக் காச அவர் சென்ன காலத்துல என்னால திருப்பிக் குடுக்க எழாமப் போக, ஊடு வாசலும், காணியும் அவருக்கு அறுதியாப் பெய்த்திட்டு. அதுக்குப் பொறகு ஹாஜி மரிக்காரு வந்து எங்கள ஊட்ட உட்டு வெளியே போட்டிட்டாரு. ஊரு மக்களுக்கு நன்மயாப் போக, நாங்க இப்ப பள்ளிக் காணீல மைய வாடிக்குப் பக்கத்துல குடிச ஒன்டக் கட்டிக் கொண்டு அங்கதான் வாப்பா ஈக்குறோம்''

சுவைரியத்தும்மா அவ்வளவு கதைத்தும், அவளுக்கு முன்னே நடப்பவன் எதையுமே கதைக்காமல் இருப்பது அவளுக்கு ஆச்சரியத்தை ஊட்டியது. பேய் பிசாசுகளையும், ஜின்களைப் பற்றியும் கேள்விப்பட்டிருக்கும் அவளது மனம் அம்மனிதனைப் பின் தொடர்ந்து செல்ல அஞ்சினாலும் மெல்லிய சந்திர ஒளியில் அவனது நிழல் நிலத்தில் படிந்திருப்பதைக் காண, அந்த அச்சம் நீங்கி விட்டது. அதனால் அவள் மீண்டும் கதைக்கத் தொடங்கினாள்.

''பள்ளிக் காணீல அதுவும் மையவாடிக்குப் பக்கத்துல ஈக்குறதாயீந்தாலும் எமட்டுக் காலத்துக்குத்தான மகென் ஈக்க? சின்ன மகள்ட கலியாணத்துக்கென்டு ஊருல நல்ல பெரிய மனிசரு நாலு பணம், எட்டுப் பணம், அரப்பவுன், ஒருபவுன், என்டு காசு பணத்தால ஒதவி செஞ்சாக. நான் அதுல கலியாணச் செலவுக்குத் தேவையான காச வச்சிக் கொண்டு மிச்ச மீந்த இருபது பவுன் பணத்த எடுத்துட்டு ஹாஜி மரிக்காருட்ட பெய்த்து ஊட்டையும், காணித்துண்டையும் திருப்பித் தாங்கொ என்டு கெஞ்சிக் கூத்தாடிக் கேட்டேன் மகென், பத்துப் பவுனுக்கு பத்துப் பவுன் வட்டி போதாதா மகென்....? அவக செல்லிட்டாக, அதெல்லாம் பழய கத, ஒனக்குத் தேவ என்டா நூறு பவுன் காசு கோந்து வை. அப்ப தான் ஒனக்கு ஊட்டையும் காணியையும் திருப்பித் தரலாம் என்று. எங்கட முன்னோர்கள் செஞ்ச பாவமொன்டு க்குத் தானைக்கும் மகென், நாங்க இது சொந்த ஊடு வாசல் இல்லாம தவிச்சிக் கொண்டு ஈரது. நேத்து சரதியலும், மம்மல மரிக்காரும் பெய்த்து ஹாஜி மரிக்காருட்ட ஈந்து நூத்தி அம்பது பவுன் காச கொள்ள அடிச்சாமே. அதுகும் சரி தான் மகென். சதகாக்கு இல்லாதது சக்கர தாருக்கு என்டு ஒகமயொன்டு ஈக்கல்லென்''

சிறுவன் தோளில் தூங்கி விழுந்த வண்ணம் இருக்க, அந்த மனிதன் எதுவும் பேசாது தன் பாட்டில் நடந்து கொண்டிருந்தான்.

''சாரதியல் ஈமான் இஸ்லாம் இல்லாதவன். அது சரி, இந்த மம்மல மரிக்கார் சரதியலோட சேந்து கொண்டு கொல செஞ்சி கொண்டும் கொள்ளடியச்சுக் கொண்டும் திரியுறானே, ஏ மகென் அது? இது போதாத்துக்கு அவன்ட தங்கச்சி..... அவள்ட பேரு என்னத்தயோ என்டு சென்னக. ஆ...... சரி..... சரி..... தங்கஉம்மாவாம் அவள்ட பேரு. அவள் இந்த சரதியலுக்கு வப்பாட்டியா ஈக்கிறாளாமே மகென். ஏன்ட பேரன் ஒகட கழுத்துல தூங்குரத்தால தான் நான் இது கதச்சிர. இந்தச் சங்கதியக் கேட்டதும் ஏன்ட மேல் கூசிக் கொண்டு பெய்த்துது மகென். அவள் நாசமாகப் போக. ஏன்ட புள்ளயொண்டா மட்டும் அவள் ஈந்திருந்தா அவள துண்டு துண்டா வெட்டி, பாழ் கெணமொன்டுல தான் நான் அவளப் பொதச்சிப் போட்டிருப்பன்''

சிறுவனை ஒரு தோளிலிருந்து மறு தோளுக்கு மாற்றிக் கொண்டு அந்த மனிதன் தொடர்ந்து நடந்தான். சுவைரியத்தும்மாவின் பேச்சுக்கு எந்தப் பதிலும் அவன் பேசவில்லை.

''ஈக்கிறவங்களுட்ட ஈரத்த பறிச்சி இல்லாத ஜனங்களுக்கு குடுக்கிறதாக இந்தச் சரதியலும், அவன்ட கூட்டாளி மம்மல மரிக்காரும் செல்லுரான்களாம். ஒகட உட, நட பார்வ எல்லாம் நீங்க மார்க்கத்த ஓதிப் படிச்ச ஆலீம் ஒன்டப் போல எனக்குப் படுது. அதனால இஸ்லாத்துல அதுகளுக்கு எடம் ஈக்கா என்டு நீங்கதான் எனக்குச் சொல்லியாகோணும்''

''ஏன்ட உம்மண்டே, பேச்சோடு பேச்சா கனேதன்ன அவ்லியாக்களுட சியாரத்தடிக்கே வந்துட்டோம். இன்னும் பத்திருபது பாகத் தூரம் தான் ஈக்கு மகென், எகட ஊட்டுக்கு''

''மகென் இரீங்கோ. அவ்லியாக்கள்ட உண்டியலுக்கு காணிக்கயொன்டு போட்டிட்டு ஒடி வரக்காட்டிலும்''

தட்டனார் வீட்டுக்குப் போகும் போது அவள் அவ்லியாக்களுக்கு ஒரு நேர்ச்சை வைத்துவிட்டே சென்றாள். அதனால் அவள் பக்கத்தில் இருந்த சியாரத்துக்குச் சென்று தன் முந்தானை முடிச்சை அவிழ்த்து, அதில் இருந்த ஒரு நாணயத்தை எடுத்து மிக்க பயபக்தியோடும், நன்றியுணர்வோடும் அதை உண்டியலில் சேர்த்தாள்.

''மகென் இனிப் போவோம். இன்னம் கொஞ்சத் தூரம் தான் ஈக்கு, என்ட ஊட்டுக்கு''

சிறிது நேரத்தில் அவர்கள் சுவைரியத்தும்மாவின் வீட்டு வாசலை அடைந்து விட்டனர். அவளுடன் வந்த அந்த மனிதன் தன் தோளில் இருந்த சிறுவனைத் தூக்கி நிலத்தில் விட்டான்.

''உம்மா, நீங்க சென்ன கதய நான் கேட்டுக் கொண்டுதான் வந்தேன். நீங்க மிச்சம் கஷ்ட நஷ்டப் பட்ட பொம்புள என்டு எனக்கு வெளங்குது. இந்தப் பையில நூத்தி அம்பது பவுன் காசு ஈக்கு. அதுல அம்பது பவுன் காச நாளெய்க்கு ஈக்கிற மகள்ட கலியாணத்துக்கு எடுங்கோ. மிச்சமுள்ள நூறு பவுன் காச ஹாஜி மரிக்காருட்ட கொண்டத்துக் குடுத்து, ஒகட ஊடு காணிய திருப்பி கேளுங்கோ''

அவனின் கையில் இருந்த பணப்பை சுவாரியத்தும்மாவின் கைகளுக்கு மாறியது. அவள் மிக்க நன்றியுணர்வுடன் அவனின் முகத்தைப் பார்த்த வண்ணம் இருந்தாள்.

''இவளவு ஒதவி செய்ரீகளே மகென். நீங்க ஆரென்?''

''உம்மா, நான் ஆரெனென்டு செல்ல வேணுமா?''





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இமட்டுப் பெரிய ஒலையைச் செஞ்ச நீங்க ஆரெண்டு சொல்லாமல் எப்பிடியெண் மேகன்?"

அதைக் கேட்ட அந்த மனிதன் தன் தலையில் இருந்த தலைப் பாகையை நீக்கினான்.

"ம்மா, நான் தான் மம்மலை மரிக்கார்"

அவன் அதைச் சொல்லி விட்டு அங்கிருந்து விருட்டென நகர்ந்து விட்டான். அத்துடன் கோரியத்தும்மாவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் அவரின் கையிலிருந்த பணப்பையும் கீழே விழுந்து விட்டது. பக்கத்தில் ஓடிய ஹுங்குள் ஓடையின் சலசலப்பில் அந்த ஒலி அவனுக்குக் கேட்டிருக்க நியாயமில்லை.

மம்மலை மரிக்கார் இருளில் மறைந்து விட்டான்.

அவன் சென்ற திசையிலும், நிலத்தில் விழுந்திருந்த பணப் பையிலும் மலைத்துப் போய் நின்ற கோரியத்தும்மாவின் பார்வை சற்று நேரம் மாறி மாறி அலைந்த வண்ணம் இருந்தது.

அருஞ்சொற்கள்:

ஆச்சும்மா- பாட்டி, நாலுவெல்ல- மாவனல்லைப் பிரதேசம், ஈமான்- நம்பிக்கை, ஒகட- உங்களுடைய, ஈந்து- இருந்து, பொண்டுகள்- பெண்கள், ஏமல்லை, பெரிய நகர்- கண்டி, அம்புலுவாங்கொடப்பாக்கள், ஆலிமாக- அறிஞராக, மௌத்தாப் போய்த்தாரு- இறந்து விட்டார், வாத்துகேட்டு- விவாகரத்துப் பெற்று, ஸெயாரம்- மயானம், சதகா- நன்கொடை, சக்கரத்தான்- தரணங்கம், ஏகம்- உண்மை, சிபாரம்- அடக்கஸ்தலம்; இமட்டு- இவ்வளவு, பவுன்- பத்து ரூபா, சிலிங்- ஐம்பது சதம், நாலு பணம்- இருபத்தைந்து சதம்


A. R. R. HAIR DRESSERS
89, Church Road,
Mattakuliya,
Colombo - 15.
Tel : 0112527219
குளிரூட்டப்பட்ட சலூன்




# பத்திரிகை ஜாம்பவான் எஸ். டி. சிவநாயகமும் மல்லிகை ஆசிரியரும்

—பெல். ஐ. நூர்கனி

'சிவநாயகத்தாரின் சீடன்!' என, பல்கலை வேந்தன் சில்லையூர் செல்வராசனே வெள்ளி விழாப் பாராட்டுக் கவிதையில் என்னை சிலாகித்துக் கூறியது போல, நான் பத்திரிகைத்துறை ஜாம்பவான் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் பட்டை தீட்டப்பட்ட 'பக்தன்' சீடன் தான்!

இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைத்துறை வரலாற்றில் ஒதுக்கவோ ஓரங்கட்டவோ முடியாத ஒரு பெயர் தான் எஸ்.டி சிவநாயகம் என்பது. இந்த சிவநாயகத்தாரால் எழுத்துலகிற்கு அறிமுகஞ் செய்யப்பட்டு, பட்டை தீட்டப்பட்ட வைரங்களாக- வைடூரியங்களாக ஜொலிப்பவர்கள் இன்று உள்நாட்டு- வெளிநாட்டு எழுத்துத்துறையிலும், பத்திரிகைத் துறையிலும் வரலாறு படைத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை எதிர்வாதம் கொண்டவர்களும் மறுத்துரைக்க மாட்டார்கள்.

சிவநாயகம் அவர்களின் மாணாக்க வரிசையில் கடைசி அங்கத்தவனாகிய எனக்கு, இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைப் பாரம்பரியத்தில் அதிக தமிழ்ப் பத்திரிகைகளை வெளியிட்ட ஒரே பகுதியான (வாசல்) கொழும்பு வாழைத்தோட்டத்தில், சுதந்திர பத்திரிகை சமாஜம் நிலை கொண்டு, தினபதி- சிந்தாமணி ஆரம்பமான காலம் (1967) முதல் சிவநாயகத்தாருடன் தொடர்பு, அதுவும் நெருங்கிய தொடர்பு. அவர் இறக்கும் வரை (22- ஏப்ரல்- 2000) இருந்ததை பெருமையாகக் கருதிப் பூரிக்கிறேன்.

இந்த 33 வருட உறவில் ஆசிரியர் சிவநாயகம் அவர்களும்- நானும் பல்வேறு விடயங்களைப் பரிமாறியிருக்கிறோம். பத்திரிகை- எழுத்து சம்பந்தமான பல நுணுக்கங்களை எனக்குச் சொல்லித் தந்து, என்னை நெறிப்படுத்தி- நேர் படுத்தியிருக்கிறார். எவரிடத்தில் திறமையைக் கண்டாலும், அதைத் தட்டிக் கொடுத்து, சம்பந்தப்பட்ட ஆளை உயர்த்தி விட எப்போதுமே ஆசிரியர் சிவநாயகம் பின்னிற்க மாட்டார். சாதி- மத- மொழி எல்லைகளைத் தாண்டியவர் அவர்.

எந்த விடயத்தை எத்தனை தடவை கூறினாலும் செவிமடுத்துக் கேட்பார். "ஏன் சேர்.... உங்களுக்கு தெரிந்த விடயம் தானே?" எனச் சொன்னால், "ஏதும் புது விடயம் கிடைத்திடாதா என்று தேடல் முயற்சிதான்" என்பார்.

ஆசிரியர் சிவநாயகத்தாருக்கு எது பிடிக்கும்- எது பிடிக்காது; யாரைப் பிடிக்கும்- ஏன் பிடிக்கும்; யாரைப் பிடிக்காது- ஏன் பிடிக்காது- எதற்காக பிடிக்காது என்று தொடர்புடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்வுகளோடு அழகாக விளக்குவார். அதனால் அவர் மனம் அறிந்து நடப்பேன். இதன் மூலம் பல வெற்றிகளைப் பெற்றுள்ளேன்.

இப்படிப்பட்ட நான், 'மல்லிகை'யின் வாசகனும் கூட. பல முறை 'மல்லிகை' விஷயங்கள் குறித்து ஆசிரியர் சிவநாயகத்தாருடன் அளவளாவி, பல விளக்கங்களையும் அவரிடமிருந்து பெற்றிருக்கிறேன். ஆனால், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா மீது அவருக்கு ஒரு குறை, மனத்தாங்கல் இருந்ததை அறிந்தே வைத்துள்ளேன். ஆனால், ஒரு பொழுதேனும் தனக்குப் பிடிக்காதவரையும் தரக்குறைவாக அவர் பேசமாட்டார். கொள்கை ரீதியிலான முரண்பாட்டை- பிடிக்காத பக்கங்களை எதிர்த்துப் பேசுவார், திடமாக!

நான் மல்லிகை ஆசிரியரை அடிக்கடி சந்திப்பதுமில்லை; அளாவளாவுவதுமில்லை. தூர இருந்தே மல்லிகை ஆசிரியரின் நடவடிக்கைகளை- செயற்பாடுகளை உழைப்பை- சாதனைகளை ஒரு பத்திரிகையாளனுக்குரிய பார்வையில் அவதானித்து வந்துள்ளேன். மல்லிகை ஆசிரியர் சம்பந்தப்பட்ட கூட்டங்களுக்கும் நான் அவ்வளவாகப் போவதுமில்லை. பொதுவாகவே பொது நிகழ்ச்சிகளுக்குப் போகும் வாய்ப்பு, என்னை சூழ்ந்திருக்கும் சூழ்நிலை சூட்சுமத்தால் அமைவது குறைவு.

சில மாதங்களுக்கு முன் ஒரு நாட் காலை மட்டக்குளியிலிருந்து கொம்பனித் தெரு செல்லும் பஸ்ஸில், மல்லிகை ஆசிரியரைச் சந்திக்க நேர்ந்தது. இருவரும் குசலம் விசாரித்து பேசியவாறு சென்ற போது, ஆசிரியர் சிவநாயகம் பற்றிய ஒரு கருத்தைக் கூறினார். அவரிடமிருந்து அப்படியொரு கருத்தினை நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. உரிய தரிப்பிடம் வரவே, சகோதரர் டொமினிக் ஜீவா இறங்கிப் போய்விட்டார்.

ஆனால்- அவர் பஸ்ஸினுள் வைத்து, என்னுள் தூவிச் சென்ற சிவநாயகத்தார் பற்றிய சிந்தனையும் போய்விடவில்லை. மாறாக- மலர்ந்து மணம் வீசத் துவங்கியது. அவ்வப்போது ஆங்காங்கே சந்திக்கும் போதெல்லாம் சொல்லாத கருத்தினை, இப்போது சொன்னது ஏன்? என்ற வினாவும் என்னுள் எழாமல் இல்லை.

வினா ஏற்படுத்திய விளைவு என்ன தெரியுமா? அன்று முதல் சகோதரர் டொமினிக் ஜீவாவை வித்தியாசமாகப் பார்க்கலானேன். எந்தக் கூட்டத்திற்கு யார் அழைத்தாலும், அதைக் கண்ணியஞ் செய்யும் இயல்பு, சகோதரர் ஜீவாவிடம் இருப்பதை நானறிவேன்.

எனக்கு கலாபூஷண விருது கிடைத்ததையொட்டி, என்றன் இலக்கிய அபிமானிகளால் சில மாதங்களுக்கு முன்னம் தலைநகரில் ஒரு விழா எடுக்கப்பட்டது. அவ்விழாவுக்கு சகோதரர் ஜீவாவுக்கும் அழைப்பினை தபால் படுத்தினேன். என் அழைப்பை ஏற்று, வந்து முன்வரிசையில் அமர்ந்து வாழ்த்திச் சென்றார். ஆழ்ந்து பேசிட சூழ்நிலை சூழ்ந்து வரவில்லை.

என் வித்தியாச விழிகளுக்கு இலக்கான மல்லிகை ஆசிரியர் ஜீவா குறித்து, பத்திரிகை ஜாம்பவானாகிய சிவநாயகத்தாரிடம் சிறைப்பட்டிருந்த 'அந்த மனக் குறை' பற்றி சகோதரர் ஜீவாவிடமே கேட்பதற்கான வாய்ப்பு வக்கணையாக வராதா? என எதிர்பார்க்கலானேன்.



அந்த வாய்ப்பும் வந்தது. கடந்த 18 ஜுலை 2009 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி தாண்டி விட்ட பொழுதில், மல்லிகைக்கான ஒருவருட சந்தாவை நேரிலே செலுத்தி வரலாமென்று மல்லிகை பணிமனைக்குப் படியேறினேன். ஆசிரியர் ஜீவா புத்தகமொன்றில் மூழ்கியிருந்தார். என்னைக் கண்டதும் ''வாரும்!'' என வாய் நிறைய அழைத்தார். உள்ளே சென்றேன்.

அவர் அமர்ந்திருந்த கதிரையை எனக்கமரத் தந்துவிட்டு, ஆசிரியருக்கான பதவி வழி ஆசனத்தில் அமர்ந்து கொண்டு, பேசத் துவங்கினார். பல விஷயங்களின் நடுவே, நான் கூட்டங்களுக்கு வராமையை குறிப்பிட்டுக் குறைபட்டுக் கொண்டார். "இப் படியே வராமல் இருந்தால், தனிமைப் பட்டுப் போவீர்......'' எனவும் கூறி, என்ன தான் பிரச்சினைகள் இருந்தாலும், வர முயற்சி செய்யுமாறு வேண்டினார். எனக்கு அமரத் தந்த ஆசனத்தைக் காட்டி,

''இந்த ஆசனத்தில் அமர்ந்து பேசினால், நான் சாதாரண டொமினிக் ஜீவா தான். மேசைக்கு முன்னுள்ள இந்த ஆசனத்தில் அமர்ந்து விட்டால், நான் மல்லிகை ஆசிரியர். மல்லிகை ஆசிரியர் விருப்பு வெறுப்புக்கு அப்பாற்பட்டவர். சாதி- மத- மொழி பேதங்கள் இல்லாத மனிதன். பதவி- பட்டம்- பணம் எதற்கும் விலை போகாதவன்.....'' என உறுதிபடக் கூறினார். பேச்சு அன்றொரு நாள் மட்டக்குளி பஸ்ஸில் சிவநாயகம் ஸேர் பற்றிக் கூறிய விடயத்திற்குத் தாவியது. ஜீவா பேசுகிறார்.

''சிவநாயகம் பத்திரிகைத் துறையில் மிகப் பெரிய மனிதர். 'சுதந்திர'னுக்கு அவர் ஆசிரியராக இருந்த காலத்தில் பலரை அறிமுகஞ் செய்து தூக்கி விட்டிருக்கிறார். நாங்களெல்லாம் இளைஞர்களாக இருந்த காலத்தில் எங்களுக்கெல்லாம் அறிமுகம் செய்து, களம் தந்து கைதூக்கி விட்டவர் அவர்தான்.......''

இந்த இடத்தை- 'அறிமுகஞ் செய்து களம் தந்து'- என்ற வார்த்தைகளைத் தான் எதிர்பார்த்தேன். இந்த இடத்தில் சிவநாயகம் ஸேர் டொமினிக் ஜீவா பற்றிக் கொண்டிருக்கும் மனக்குறை பற்றிக் கேட்க வேண்டும் போல் ஒரெண்ணம் என்னுள் மின்னலடித்தது.

''இந்த இடத்தில் நானொரு விஷயத்தை கேட்கலாம்னு நினைக்கிறேன்....'' எனப் பீடிகை போட்டேன். ''கேளும்..... தாராளமாகக் கேளும்; எதுவானாலும் கேளும். ஆசிரியர் டொமினிக் ஜீவா மனம் திறந்து பேசுவார்.....'' என அனுமதியளித்தார். சந்தர்ப்பம் சாதகமாக வந்தால், என்ன பேசுவது என்பதை ஏற்கனவே மனதுக்குள் ஒத்திகை பார்த்து வைத்திருந்தமையால், தயக்கம் ஏதுமின்றிப் பேசலானேன்.

''இப்போது சொன்னீர்களே..... எங்களை எல்லாம் அறிமுகஞ் செய்து, களம் தந்து கைதூக்கி விட்டவர் சிவநாயகம் தான் என்று, இந்தக் கருத்தை சொல்ல வேண்டிய இடத்தில் நீங்கள் சொல்வதில்லை; எழுதுவதில்லை என்றொரு மனக்குறை, ஆசிரியர் சிவநாயகத்தாரிடம் இருந்து வந்தது என்பதை நான் அறிந்து வைத்துள்ளேன்......''

என்று நான் சொன்னது தான் தாமதம்..... "இல்லை...... சொல்வதில்லை...... எழுதுவதில்லை என்பதெல்லாம் சுத்தப் பொய். நான் தைரியமாகச் சொல்லியிருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறேன். ஏன்..... நமது மல்லிகையில் அட்டைப்படமாக அவரது படத்தைப் பிரசுரிக்கத் தீர்மானித்து, நானே அவரிடம் படம் தரும்படி கேட்டிருக்கிறேன். இப்படி ஒரு தடவை, இரு தடவையல்ல.... மூன்று முறை கேட்டிருக்கிறேன். அவர் கடைசி வரைக்கும் அவரது படத்தைத் தரவேயில்லை..." என உறுதியுடன் ஜீவா கூறினார்.

"ஆ.... அப்படியா? அட்டைப் படத்திற்காக அவரிடமே படம் கேட்டிருக்கிறீர்களா?'' என்றவாறு, நான் மல்லிகை ஆசிரியரையே பார்த்தபடியிருந்தேன். சற்றே நிலவிய மௌனத்தை கிழித்துக் கொண்டு, மீண்டும் ஜீவாவே பேசலானார்.

"சிவநாயகத்தாரின் படத்தை அங்கு- இங்கு என்று எங்காவது இருந்து எடுத்துப் போடுவதை நான் விரும்பவில்லை. நான் அட்டைப் படமாக அவரது படத்தைப் போடப் போவதை அவர் அறிந்து, அவரே விரும்பித் தர வேண்டும் என்பதே என் விருப்பமாக இருந்தது. நான் என்ன செய்யட்டும்? அவர் கடைசி வரை படம் தரவேயில்லை....!''

நான் மௌன ராஜ்யத்தின் அரசனாக அமர்ந்திருந்தேன். என்றாலும்- சிந்தனை, கடலின் அடியில் ஓடும் நீரோட்டமாக என் மன ஆழத்துள் ஓடலாயிற்று.

ஏன்..... சிவநாயகம் ஸேர் படம் தரவில்லை? அதை ஸேர் விரும்பவில்லையா? அல்லது மல்லிகையில் வருவதை விரும்பவில்லையா? எனக்கு ஆசிரியர் சிவநாயகத்தாரின் உணர்வுகள் நன்கு புரியும். என்னிடம் எவ்வளவோ- எதையெல்லாமோ பேசியிருக்கிறார். அவற்றையெல்லாம் இரைமீட்டிப் பார்க்கலானேன்.

சிவநாயகம் ஸேர் ஏன் படம் தரவில்லை....? பந்தாவா....?

ஆசிரியர் டொமினிக் ஜீவா அல்ல..... வேறு எவர் வந்து கேட்டாலும் தரமாட்டார்..... தரவே மாட்டார். ஏன் அது....?

"கதை- கட்டுரை- கவிதை என்று பத்திரிகைகளில் எழுத்துப் பணி புரிந்து வரும் எழுத்தாளர்கள், ஆரம்ப காலத்தில் தங்களை அடையாளப்படுத்திக் காட்டுவதற்காகவும், பிற்காலத்தில் சில ஆவணக் குறிப்புக்களாகவும் தம் படத்தைத் தேவை கருதி பிரசுரிப்பதில் தவறில்லை. ஆனால், கிங் மேக்கர் அதாவது ஆட்சியைத் தீர்மானிக்கும், அல்லது தீர்மானிக்க உதவும், அல்லது மக்கள் சமுதாயத்தைத் திசை திருப்பும்... வல்லமை மிக்க ஒரு பத்திரிகையாளன்- விஷயம் அப்படியல்ல....." இப்படிச் சிவநாயகம் ஸேர் கூறியிருக்கிறார்.

"ஒரு பத்திரிகையாளன் என்பவன் விருப்பு- வெறுப்புக்கு அப்பாற்பட்டவன். எந்த விஷயத்திலும் எவர் பக்கமும் சாராமல், நேர் நின்று உண்மையைத் தேட வேண்டும். உண்மை நிலையை மக்களுக்கு உணர்த்த வேண்டும். அப்படியென்றால் எவருக்கும் கீழ்ப் படிந்தவனாக- கடமைப் பட்டவனாக- பிறர் தயவை எவ்வகையிலும் நாடியிருப்பவனாக இருக்கக் கூடாது...

இந்த இலக்கணம் உண்மையான பத்திரிகையாளனுக்கே பொருந்தும். வளைந்து நெளிந்து கொடுப்பவருக்குப் பொருந்தாது..... இதன் படி, வாழ்ந்த பத்திரிகையாளர் தான் மறைந்த 'கல்கி' கிருஷ்ணமூர்த்தி. இந்தக் கல்கியைப் பின்பற்றியே வாழ விரும்புகிறேன்....."

இப்படிப் பலமுறை என்னிடம் சொல்லி



'அவர் யார்?' எப்படிப்பட்டவர்? என்பதை எனக்குப் புரிய வைத்துள்ளார். நான் மட்டுமல்ல..... அவரோடு, நெருங்கிப் பழகிய அத்தனை பேருக்கும் இந்தக் 'குணம்' தெரியும் என்பதை விட, புரியும் எனலாம்.

முன்னாள் அமைச்சர்களான குமாரசூரியர், இராஜதுரை, தேவராஜ், அஸ்வர் ஹாஜியார் எனப் பலரும் இந்த 'கல்கி தாசரை' கௌரவிக்க விரும்பியும், அழைத்தும் அசைந்து கொடுக்காத கொள்கைப் பற்று மிக்கப் பத்திரிகை ஜாம்பவானே இந்த எஸ். டி. சிவநாயகம் ஆவார்.

"எனக்கு இந்த உணவு பிடிக்காது. என் உடல் நலனுக்கு ஒத்துவராது" என்பவரை கட்டாயப்படுத்த முடியுமா? அந்த ஒன்றுக்காக அவரை வெறுக்க முடியுமா? அவரது திறமைகளை- பணிகளை- பங்களிப்புகளை மறுக்க முடியுமா? அது போலத்தான் இதுவும்......

ஆக- மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா தன்னை எழுத்துலகிற்கு அறிமுகஞ் செய்து, களம் தந்து கைதூக்கிவிட்ட சிவநாயகத்தாருக்கு, செஞ்சோற்றுக் கடன் தீர்க்கும் வழியில் நன்றிக் கடனாக மட்டுமன்றி, அன்னாரின் அபாரமான பத்திரிகைத்துறை பணிகளைக் கண்ணியம் செய்யும் நன்னோக்கில், அட்டைப்படமாக அவரது படத்தைப் பிரசுரித்து மகிழ, எண்ணியதும்- உன்னியதும்- விரும்பியதும் சரியே!

பத்திரிகை ஜாம்பவான் எஸ். டி. சிவநாயகம், தான் கொண்ட கொள்கையில் பிடிப்பும்- பிடிவாதமும் கொண்டு, எவரிடமும்- எந்த உதவியும்- பரிசும்- கௌரவமும் பெற விரும்பாதிருந்ததும் சரியே!

ஒருவரின் இரு விழிகளுக்கு வேண்டுமானால், பார்வை ஒன்றாகலாம். இருவருக்கும் பார்வை ஒன்றாக ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்க முடியாதே! அதனால் அவர் பார்வையில் அவர் கொண்ட தீர்மானம் அவருக்கு சரி; இவர் பார்வையில் இவர் கொண்ட தீர்மானம் இவருக்குச் சரி.

'குணம் நாடி குற்றம் நாடி அவற்றுள் மிகை காணும்' வள்ளுவன் வழியில் நாமெல்லாம் கைகுலுக்குவோம். அவ்வளவுதான்!

ஒரு சம்பவம் என் மனத்திரையில் நிழலாடுகிறது.......

ஏறத்தாழ 25-30 வருடங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சி, அது. நம் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவுக்கு 50 வயது நிறைவடைவதை முன்னிட்டு, ஒரு பொன்விழா- பிறந்தநாள் ஒன்று கூடல் வைபவமொன்று பம்பலப்பிட்டி கிரீன்லன்ட் ஹோட்டலில் ஒழுங்கு செய்யப்பட்டது.

ஆசிரியர் சிவநாயகம் ஸேரின் பொறுப்பில் 'சிந்தாமணி' நன்கு பிரபல்யம் பெற்றிருந்த காலமது. சிந்தாமணி- அத்தாணி மண்டபம் பகுதியில் இலக்கிய விஷயங்கள் பளபளப்பாக வெளிவந்து கொண்டிருந்தன.

ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் பொன்விழா நிறைவு நாள் கூட்டம் தொடர்பான செய்தியொன்றினை, சகோதரர் மேமன் கவி என்னிடம் தந்து, அத்தாணி மண்டபத்தில் போடும்படி வேண்டினார். நான் அக்கால சிந்தாமணியில் உருவகக் கதை- சிறுகதை என்று கொடி கட்டிப் பறந்த வேளை. அதனால் மேமன்கவி என்னிடம் தந்த மேற்படி செய்தியை ஆசிரியர் சிவநாயகத்தாரிடம் சேர்ப்பித்தேன். வருமென்ற நம்பிக்கை எனக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவாரம்- மறு வாரம்- மூன்றாம் வாரம் சென்றது. அத்தாணி மண்டபத்தில் பிரஸ்தாப செய்தி வரவில்லை. மேமன்கவியும் மௌனமாக விசாரித்து முடித்துவிட்டார். எனக்கும் பிரசுரமாகாத மர்மம் புரியவில்லை. ஒருநாள் சிவநாயகத்தாரிடமே அது குறித்து கேட்டுவிட்டேன். அவர் என்ன சொன்னார் தெரியுமா?

“மிஸ்டர் கனி..... நீங்க தந்த டொமினிக் ஜீவாவின் 50 வது பிறந்த நாள் விழா பற்றிய செய்தியை நான் பிரசுரிக்கவில்லை என்பதில் உங்களுக்கு ஒரு வருத்தம் இருக்கலாம். நான் அதை வேண்டுமென்று தான் பிரசுரிக்கவில்லை.....”

‘ஏன் ஸேர்...?’ என்பது போல அவர் முகத்தைப் பார்த்தேன். அவர் பிரஸ்தாப செய்தியைப் பிரசுரிக்காமைக்கான காரணத்தை விளக்கினார். எனக்கு மறுப்புரைக்க முடியாதபடி காரணங்களை முன் வைத்தார்.

‘மிஸ்டர் கனி..... ஒவ்வொரு மனிதனுக்கும் வயசு வருவது சகஜம். 20க்குப் பிறகு 21வது வயது வருவது தடுக்க முடியாத ஒன்று. அது மாதிரி நண்பர் டொமினிக் ஜீவாவுக்கும் 50 வயது பூர்த்தியாகி, 51 பிறப்பது, தானே நடைபெறும் விஷயம் தான். இதில் புதுமையோ- சாதனையோ விசேஷமோ ஏதுவுமில்லை. இப்படியான செய்தியை வேறு பத்திரிகைகள் வேண்டுமானால் பிரசுரிக்கலாம். நான் எனது சிந்தாமணியில் இப்படியான செய்தியைப் பிரசுரிக்க மாட்டேன். ஏன் தெரியுமா?”

எனக்கு ஆவல் அலை மோதியது.....

‘நண்பர் டொமினிக் ஜீவா ஆளுமை மிக்க ஒரு பத்திரிகையாளர். அதுவும் முற்போக்கு சிந்தனைப் போக்குடைய பத்திரிகையாளர். இவரது பிறந்த நாள் எனக்கு ஒரு செய்திக்குரிய சாதனையாகப் படவில்லை. சாதாரண ஒரு நடிகன்- நடிகை- ஒரு கலைஞன் என்றால் பரவாயில்லை என்று பிரசுரித்து விடலாம். சாதி வெறி பிடித்த ஓர் ஆதிக்க சமூகத்தை எதிர்த்து எழும்பி வந்த- தன் எழுத்து- உழைப்பை மட்டுமே நம்பி வந்த டொமினிக் ஜீவா போன்றோருக்கு சரியல்ல....!”

“ஜீவா ஏதாவது சாதித்தார் என்றால், அதைக் கொண்டு வாருங்கள். அதைப் பாராட்டி- படம் போட்டு நாலு வரிகள் எழுதி, சிறப்பிப்பதில் நானே முதலாமவனாக இருப்பேன். அவரது மல்லிகையை 50 வருடம் நடத்தினார் எனச் சொல்லுங்க. அது சாதனை..... தனி மனிதனாக நின்று, 50 வருடமாகத் தொடர்ந்து ஒரு ஏட்டை வெளிக் கொணர்வது மகத்தான சாதனை! அதை எழுதலாம்.....’ என்று விளக்கிக் கொண்டே போனார்.

இந்த விளக்கத்தை அப்போதே சகோதரர் மேமன்கவியிடம் கூறியிருக்கிறேன். பத்திரிகைக்கு நல்ல செய்திகளை- ஆக்கம் என்றால் அதைத் தந்தவன் பகைவனேயானாலும் ஏற்றுப் பிரசுரிக்கும் நல்ல பண்பு சிவநாயகத்தாரிடம் இருந்தது என்பதற்கு உதாரணங்கள் பல சொல்ல முடியும். மல்லிகை 50 வருடத்தை நெருங்கப் போகிறது. சீராட்டி எழுதிட சிவநாயகத்தார் அவர்கள் இப்போது இல்லையே..... என்பது தான் எனக்குள்ள ஒரே வருத்தம்! ஆமாம்.... அந்த பக்கலில் வைத்து சிவநாயகத்தார் பற்றி ஜீவா என்ன சொன்னார்? காலம் கனிந்து வரட்டும். அதுவரை அது ரகசியம்.






# இலங்கை வலைப்பதிவாளர்களின் சந்திப்பு - தாமதமான ஒரு பதிவு-

மேமன்கவி




எனது நீண்ட நாள் கனவு ஒன்று சரித்திரத்தில் நனவானது என்ற மனநிறைவுடன் தான் 23.08.2009 அன்று கொழும்புத் தமிழ்ச்சங்க விநோதன் மண்டபத்தில் முதல் முதலாக நடந்த இலங்கை வலைப்பதிவாளர்களின் சந்திப்புக்குப் போய்விட்டு வந்து எழுத நினைத்த கட்டுரையை ஆரம்பிக்க இருந்தேன்.

ஆனால் அச்சந்திப்புக்கு போனதன் காரணமாக அத்தகைய கனவொன்றினை 'புல்லட்' எனும் வலைப்பதிவாளர் (தனது வலைப்பதிவான 'டுமீல் மற்றும் தனது (தகவல் வந்தியத்தேவன்)' வலைப்பதிவில் அத்தகைய கனவொன்றினை கண்டிருந்ததாக அறிந்த பின்னும். அன்று நடந்த சந்திப்பில் கலந்து கொண்ட இலங்கை வலைப்பதிவாளர்களும் சரி, அவர்களுடன் உறவைப் பேணும் தமிழக, புலம்பெயர்ந்த வலைப்பதிவாளர்களும் சரி, அத்தகைய கனவு ஒன்றுடன் இருந்திருக்கிறார்கள் என்பதை. அன்றைய சந்திப்பில் கலந்துக் கொண்ட,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்துக் கொள்ளாத இலங்கை வலைப்பதிவாளர்களும், அன்றைய சந்திப்பை மது சகோதரர்கள் மற்றும் பக்தரன் ஆகியோரின் முன்னிப்பத்தால், நேரடி ஒளி ஒலிபரப்பாய் காணக் கிடைத்த தமிழக புலம்பெயர்ந்து மற்றும் அச்சந்திப்பில் பங்குபெற இயலாமல் போன இலங்கை வலைப்பதிவாளர்களும், நேரடி ஒளி ஒலிப்பரப்பின் பொழுது Chat இன் மூலம் வெளிப்படுத்திய கருத்துக்களையும், அச்சந்திப்பின் பின் அச்சந்திப்பில் கலந்து கொண்ட கலந்து கொள்ளாத இலங்கை வலைப் பதிவாளர்களும், தமிழக புலம்பெயர்ந்த வலைப் பதிவாளர்களும், அச்சந்திப்பை முன்னிட்டு இட்ட பதிவுகளையும், அப்பதிவுக்கு இடப்பட்ட பின்னூட்டங்களையும் படித்த பின், அத்தகைய கவலை எல்லோரும் கொண்டிருந்திருக்கிறார்கள் என்பதை அறிந்த பின், வலைப்பதிவாளர்கள் *நாங்கள் எல்லோரும் கண்ட கனவு* 23.08.2009 அன்று நிறை வேறியது என்றுதான் சொல்ல வேண்டும்.




இலங்கை வலைப்பதிவாளர்கள் சந்திப்பு பற்றிய முதல் அறிவிப்பு நான் 05.08.2009 திகதியிட்ட வந்தியத்தேவன், லோஷன், புல்லட், ஆதிரை ஆகியோரின் கூட்டு மின்னஞ்சல் மூலம் கிடைக்கப் பெற்றேன். அந்த மின்னஞ்சலை கண்ட நாள் தொடக்கம், ஒரு பண்டிகைக்காக தன்னைத் தயார்படுத்தும் ஒரு சிறுபிள்ளையின் சந்தோஷ மனவுணர்வுடன் இருந்தேன். அதே வேளை அம் மின்னஞ்சலில் அச்சந்திப்பை ஏற்பாடு செய்திருந்த அந்த சிங்கங்கள் (அச்சந்திப்பிலே நால்வரையும் செல்லமாக அப்படித் தான் குறிப்பிட்டுக் கொண்டார்கள்) அச்சந்திப்பில் எமது பங்களிப்பாக ஏதாவது செய்ய வேண்டின் தமக்கு அறிவிக்குமாறு கேட்டிருந்தார்கள்.

சமீப காலமாக எதையுமே ஆய்வு ரீதியாகவும் விரிவாகவும் பார்க்கும் பழக்கத்தை வளர்த்திருந்தவள் என்ற வகையில், கணனி தமிழ் இணையம் வலைப்பதிவு என்பவற்றின் மீதும் அத்தகைய பார்வையை செலுத்தும் எண்ணம் கொண்டிருந்த எனக்கு, இலங்கை வலைப்பதிவாளர்களின் சந்திப்பில், தமிழ் வலைப்பதிவு சம்பந்தமான ஆய்வு ரீதியான ஒரு சிந்தனையை முன் வைக்கும் யோசனை தோன்றியது. ஆனாலும், அச்சந்திப்பு முதல் முயற்சி






என்ற வகையிலும், தமிழ், கணனி இணையம், வலைப் பதிவு என்பவற்றின் மீதான ஓர் ஆய்வுரீதியான பார்வை முன் வைப்பதற்கு தேவையான கருத்துக்களின் எல்லைகளின போதாமையை நான் உணர்ந்த பொழுது, அத்தகைய போதாமையைக் குறைப்பதற்கு அச்சந்திப்பு உதவுவதாக அமையும் என்பதாலும் அச்சந்திப்பில், வலைப்பதிவு சம்பந்தமான ஆய்வு ரீதியான சிந்தனையை முன் வைக்கும் கேட்டு பெறும் அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தாது, வெறுமனே பார்வையாளனாக அச்சந்திப்பில் கலந்துக் கொள்வது என தீர்மானித்தேன். வெறுமனே பார்வையாளனாக அச்சந்திப்பில் நான் கலந்துக் கொள்ளப் போனாலும், அச்சந்திப்பை ஏற்பாடு செய்த சிங்கங்களில் ஒருவரான ஆதிரை என்னும் வலைப்பதிவாளர் கண்டுபிடித்து வந்த செய்தியின் பிரகாரம் தமிழ் வலைப் பதிவுகளின் தொகை வளர்வதற்கும் உதவிய, உதவிக் கொண்டிருக்கும் blogger.com என்ற இணையத்தள நிறுவனம் இலங்கை வலைப்பதிவாளர் சந்திப்பு நிகழ்ந்த அன்று (23.08.2009) தனது 10 வது ஆண்டு நிறைவைக் கண்டதையிட்டு அந்த நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட மரியாதை நிகழ்வில் (மெழுகுவர்த்தி ஏற்றுதல்/கேக் வெட்டுதல்) அதுவும் வலைப்பதிவில் (அவர்களில் அநேகர் இளைஞர்களாக இருப்பினும் கூட) கொள்கை ரீதியாக நிகழ்ந்தவர்கள் நிறைந்த சபையிலே, எனக்கும் என்னோடு கலந்து கொண்ட அந்தனி ஜீவா மற்றும் எழில் வேந்தன் ஆகியோருக்கும் 'மூத்த' என்னும் அடைமொழியால் வழங்கிய கௌரவத்திற்கும், செலுத்திய மரியாதைக்கும் நான் இத்தருணத்தில் அவர்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



ஓர் ஆழமான, ஆய்வு ரீதியான தமிழ் வலைப் பதிவுகளை பற்றிய ஒரு பங்களிப்பு செய்யும் எண்ணத்தைக் கைவிட்ட நிலையில், அச்சந்திப்பில் கலந்து கொள்ள நான் சென்றாலும், நான் முன்பு சொன்னது போல் அத்தகைய





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களிப்புக்கு தேவையான கருத்துக்களையிட்ட என்னளவிலான போதாமையை போக்கி கொள்ளும் வகையிலான ஒரு கலந்துரையாடலை உருவாக்கும் விதமாக சில கருத்துககளை சொல்லவேண்டும், மற்றும் இன்று விரிந்த நிலையில் வளர்ச்சி அடைந்திருக்கும் தமிழ் வலைப்பதிவு களையிட்ட எனது பூரிப்பை வெளிப்படுத்த வேண்டும். மற்றும் தமிழ் கணனி வலைப்பதிவு போன்ற அம்சங்களின் வளர்ச்சிக்கு கணிசமான முறையில் பங்களிப்பு செய்த, சமீபத்தில் மறைந்த தமிழக வலைப்பதிவாளர் 'சிந்தாநதி அவர்களுக்கான சில அஞ்சலி குறிப்புக்கள் சொல்வது என்ற முடிவுகளுடன்தான் நான் அச்சந்திப்பில கலந்துக் கொள்ள போனேன். ஆனால் அச்சந்திப்பு நிகழ்ந்த சபை சூழலின் காரணமாக அவ்வாறான கருத்துக்களை என்னால் அச்சபையில் முன்வைக்கமுடியவில்லை,(அதற்கான மேலும் காரணங்கள் என்னவென்பதை இனி வரும் எனது குறிப்புக்கள் உங்களுக்கு உணர்த்தும்.) ஆனாலும் இன்றைய தமிழ் வலைப்பதிவுகளின் அபரித்தமான வளர்ச்சியிட்ட எனது பூரிப்பையும், மறைந்த தமிழக வலைப்பதிவாளர் சிந்தாநதி அவர்களை பற்றிய சுருக்கமான (அவரது பங்பளிப்புக்களை பற்றி தனிக்கட்டுரையே எழுத வேண்டும்) குறிப்புக்களை முன் வைத்ததுடன் அமர்ந்துக் கொண்டேன். (எனது இந்த பூரிப்பைதான் எனது பக்கத்தில் அமர்ந்திருந்த நண்பர் எழில்வேந்தன் அவர்கள் நான் பதட்டமடைந்திருக்கிறேன் என்பதாக புரிந்துக் கொண்டு பதறாதீர்கள் என எனது காதில் கிசுகிசுத்தார்.)

இத்தகைய சபை சூழலில் நான் மிகவும் விரும்பும் நகைச்சுவை உணர்வு அதிகமான முறையில் (இங்கு கவனிக்க- அதீதமான முறையில் அல்ல) அந்த சபையில் வெளிப்பட்டதை நான் உணர்த்தேன். எனக்கு பிடித்தமான சபை சூழலாக அச்சபை அமைந்திருந்ததனால், மூத்த, கனதியான, ஆய்வு ரீதியான என்ற சிந்தனைகளையெல்லாம் மூட்டை கட்டி ஒரு மூலையில் வைத்துவிட்டு, அவர்களில் ஒருவனாக மாற முயற்சி செய்தேன். அந்த முயற்சியில் நான் எந்த அளவு வெற்றி பெற்றேன் என்பது எனக்குத் தெரியவில்லை.

இவ்விடத்தில் இடையீடாக சில குறிப்புக்கள் சொல்லவேண்டும்

என்னைப் போன்று வலைப்பதிவாளர்களுடான பரிச்சயமும், அவர்களே வலைப்பதிவாளர்களாக இருக்கும், இலங்கையின் ஒரு சில மூத்த படைப்பாளிகளும் அச்சந்திப்பில் கலந்துக் கொள்ளாதது எனக்கு குறையாக பட்டது. குறிப்பாக அந்த வகையில் திரு உடுவை தில்லை நடராஜா, டாக்டர் எம். கே. முருகானத்தன் ஆகியோர்தான் உடனடியாக என் நினைவுக்கு வந்தார்கள்.

அத்தோடு சமீபத்தில் வலைப்பதிவாளர்களாகிய டாக்டர் ஜின்னா ஷெரிப்புதீன், அஸ்ரப் சிஹாப்தீன், திக்குவல்லை கமால், (எனக்கு



கிட்டிய தகவல் பிரகாரம்தான் இவர்களின் பெயர்களை சொல்லி இருக்கிறேன். இன்னும் பல மூத்த படைப்பாளிகள் இருக்கக் கூடும்). போன்றோரும் இச்சந்திப்பில் கலந்துக் கொண்டிருக்க வேண்டும என்ற எண்ணமும் எழுந்தது. (அவர்கள் எல்லோரும் கலந்து கொள்ள முடியாமல் போனதற்கான அவர்கள் சார்ப்பான நியாயமான காரணங்கள் இருக்கக்கூடும் என்பதையும் நான் மறுக்கவில்லை)

அத்தோடு, என்னோடு 'மூத்த' அடைமொழியுடன் கௌரவம் வழங்கப்பட்ட நண்பர் அந்தனி ஜீவாவும் சரி, ஆறாம் வகுப்பு படிக்கும் வலைப்பதிவாளரின் (முஹம்மது யசீர்) தந்தையாக அச்சபையின் கவனத்தை கவர்ந்த நண்பர் அஸீஸ் நிஸாருத்தீனும் சரி (அவரும் ஒரு மூத்தப் படைப்பாளி என்ற தகவல் அங்கு வருகை தந்திருத்த இளைய நண்பர்களுக்கு தெரிவிருக்கவில்லை) அச்சபைக்கான மண்டபத்தில் ஒரு மூலையில் அமர்ந்திருந்த மூத்த இலக்கியவாதியும், அச்சந்திப்பை ஏற்பாடு செய்திருந்த சிங்கங்களில் ஒருவரான லோஷனின் தந்தையாருமான பால ஸ்ரீதரன் அவர்களும் சரி, பின் வரிசையில் உட்கார்ந்திருந்த மூத்த ஊடகவியலாளர் செல்வராஜன் அவர்களும் சரி, பூண்ட மௌனமானது, இந்த இளைஞர்களின் இத்தகைய முயற்சியில் நான் அடைந்திருந்த, வெளிப்படுத்திய பூரிப்புக்கு ஒத்ததாகவே நான் கருதினேன்.

இலங்கை வலைப்பதிவாளர்களின் சந்திப்பில் நான் கண்ட இன்னொரு முக்கியமான ஓர் அம்சத்தை பற்றி இங்கே பதித்தே ஆகவேண்டும் .கலை இலக்கியத் துறையில் ஈடுபட்டிருக்கும் பல இளைஞர்களுடன் நெருங்கியத் தொடர்புக் கொண்டவன் என்ற வகையிலும், அவ்வாறு ஈடுபட்டிருக்கும் நான் நெருங்கி பழகாத பல இளைஞர்களை பற்றி அறிந்தவன் என்ற ரீதியிலும், அவர்களில் சிலரிடம் காணப்படும் ஒரு சில தன்மைகள் அவர்களின் எதிர்கால வளர்ச்சிக்கு குந்தகமாக அமைந்திருப்பதையும், மூத்தப் படைப்பாளிகளின் மத்தியில் அவர்களின் ஆரம்பகால நல்லெண்ணத்தை தக்க வைக்க தவறியிருப்பதை நான் அறிவேன், அதாவது படைப்புலக பயணத்தில் சில காலம் பயணம் செய்த தன் விளைவாக, அவர்கள் பேசப்பட்டதையும், கவனிக்கப்பட்டதை தமக்கான பெரிதான ஓர் அங்கீகாரமாக கருதிக் கொண்டு, தம்மை பற்றிய அளவுக்கு அதிகமாக கணக்கு பண்ணிக் கொள்வதும், அந்த தன்மையின் காரணமாக மூத்த படைப்பாளிகளிடம் அவர்கள் நடந்துக் கொள்ளும் முறையிட்டு என் போன்றவர்கள் அதிருப்தி கொண்டிருக்கும் சூழலில், இலங்கை வலைப்பதிவாளர் சந்திப்பில் நான் சந்தித்தது என்று சொல்வதை விட அங்கு வந்திருந்த எல்லா இளைஞர்களிடம் காணப்பட்ட பணிவு மூத்தப் படைப்பாளிகளிடம் என்பது மட்டுமல்லாமல் சக வலைப்பதிவாளர்களுடன் அவர்கள் நடந்துக் கொண்ட விதமும், கருத்துக்களை முன் வைத்த நிதானமும், கலை இலக்கியத்துறையை பொறுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரை ஆரம்ப நிலையில் இருந்தாலும் (ஒரு சிலரை தவிர) கணனி மற்றும் தொழில் நுட்பத்துறையில் அங்கு வந்திருந்த பெருபான்மையானவர்கள் நிபுணர்களாக இருந்தும், இன்னும் புதி தாய் அறிந்துக் கொள்ளவேண்டும் என்ற உணர்வும் ஆர்வமும் அவர்கள் எல்லோரினதும் முகத்தில் தெரிந்தது. அப்பண்பு என்னை மிகவும் கவர்ந்தது. ஒட்டுமொத்தமான அவர்களின் இந்த வெளிப்பாடு என்னை மிகவும் கவர்ந் தது எனலாம்.

இச்சந்திப்பில் சீரியஸான விடயங் கள் கருத்துரைகளில் பேசப்படபட்ட பொழுதெலாம் இந்த சந்திப்பை ஏற் பாடு செய்திருந்த சிங்கங்கள் குறிப் பாக வந்தியத்தேவன் புல்லட் மற்றும் லோஷன் போன்றோர் கூர்மையான முறையில் அந்த உரைகளை கண் காணித்ததும், விஷயம் கைமீறி போகி றது என்ற நிலை வரும்பொழுது இடை யீடு செய்ததும், முதல் பார்வையில் இவர்கள் ஏன் சீரியஸான விடயங் களை பேசுவதை தவிர்க்க பார்க்கி றார்கள்? (குறிப்பாக இலங்கை வலைப் பதிவாளர்களுக்காகவே ஆரம்பிக்கப் பட்டுள்ள யாழ்தேவி எனும் திரட்டியின் பெயர் சம்பந்தமான உரையாடல் போன்ற உரையாடல்களை) என்ற கேள்வி அங்கு வந்திருந்தவர்களுக்கு எழுந்ததோ இல்லையோ எனக்குள் எழுந்தது. ஆனால் நின்று, நிதானித்து ஆழ்ந்து யோசித்த பொழுது அவர்க ளின் அந்த செயற்பாட்டில் இருந்த நியாயம் எனக்கு புலப்பட்டது. அதா வது அவர்கள் அன்று கூடியிருந்தது, ***இலங்கை வலைப்பதிவாளர்களின் முதல்சந்திப்பே*** தவிர, முற்போக்கு பிற்போக்கு, நற்போக்கு பச்சை, சிவப்பு, நீலம், வடக்கு, கிழக்கு, மேற்கு, என்ற மாதிரியான அடையாள ங்களை கொண்ட வலைப்பதிவாளர்க ளின் சந்திப்பை அல்ல என்பதால் எந்தவிதமான கருத்து முரண்பாடு களோ மனக்கசப்புகளோ ஏற்பட்டு, இலங்கை வலைப்பதிவாளர்களின் முதல் சந்திப்பு குதம்பி விடக்கூடாது என்ற நல்லெண்ணத்துடன் கூடிய எச்சரிகை உணர்வே அவர்களின் அவ்வாறான கண்காணிப்புக்கும் இடையீடுக்கும் காரணமாக இருந்தது என்பதை நான் புரிந்துக் கொண்ட பொழுது, அவர்களின் பொறுப்புணர்ச்சி யினை என்னால் அடையாளம் காணக் கூடியதாக இருந்தது. (அத்தகைய நல்லெண்ணத்துடன் கூடிய அக்கறை யில்தான்,இச்சந்திப்பை ஏற்பாடு செய் வது சம்பந்தமான பொருளாதார சுமையை ஏற்றுக் கொண்டு செயல் பட்ட புல்லட்டின் சுமையை குறைக் கும் வண்ணம் அங்கு வந்திருந்தவர்க ளில் விரும்பியவர்கள் தமது பங்களி ப்பை செய்யலாம் என்ற யோசனைக்கு இணங்க, ஏற்பாடு செய்யப்பட்ட காட் போட் பெட்டியினை வந்திருந்த எல்லோரிடமும் **கொண்டு செல்வது** என்ற வகையிலான நண்பர் எழில் வேந்தன் அவர்கள் முன் வைத்த யோசனையை நான் மறுத்தேன். எனது இச்செயலில் இருந்த நியாயத்தை அங்கு வந்திருந்த வலைப்பதிவாளர்க ளில் ஒருவரான நண்பர் சேரன் கிரிஷ்



ஒருவர்தான சரியாக புரிந்துக் கொண்டார் என நினைக்கிறேன். (பார்க்க- http://cherankrish. blogspot. com/ இச்சந்திப்பை நடத்தையிட்டு அவர் தனது வலைப்பதிவில் இட்ட பதிவொன்றில் எனது அச்செயல்பாட் டின் நியாயத்தை பதிவு செய்திருக் கிறார்.)

இந்த வகையில் அச்சந்திப்பில எந்த வொரு குழுவாதமோ, எந்தவொரு 'பக்கவாதமோ, எந்தவொரு பிரதேச வாதமோ, எந்தவொரு கருத்து நிலை யின் மேலாண்மை வாதமோ அந்த கூட்டத்தினரிடையே ஏற்பட்டு விடக் கூடாது என்பதான அச்சிங்கங்களின் மிகுந்த எச்சரிகை உணர்வினை என் னால் இனங் காணக்கூடியதாக இருந் தது. அதே எண்ணத்தை கொண்டிரு ந்த நானும் கூட, கணனி இணையம் கலை இலக்கியம் என்ற தலைப்பில் தயாரித்துக் கொண்டிருக்கும் நூலுக் கென கருத்துரைகளில் பேசப்பட்ட விடயங்களையிட்டு நான் கொண்டி ருக்கும் அழுத்தமான சில கருத்துக் களையும் உரத்த நிலையில், முன் வைப்பதை தவிர்த்தேன்.

கருத்துரை நிகழ்வில் முக்கியமாக நான்கு விடயங்கள் பேசப்பட்டன.

(1).கணனி மற்றும் இணையம் போன் றவற்றில் தமிழ் பயன்பாட்டுடன் சம் பந்தப்பட்ட குறியீட்டு முறைமை (Encodring)) விசைப் புலகை (Key board) எழுத்துரு(Font) ஆகியவற்றின் பயன்பாடும், இடர்வுகளும்

(2) புனைப்பெயரில் பதிவுகளை பதித்தல் சம்பந்தமானது.

(3).வலைப்பதிவுகளின் பதிவுகளால் எதிர்க் கொள்ளும் பிரச்சினைகள்

(4)இலங்கை பதிவாளர்களுக்கென ஆரம்பிக்கபட்டுள்ள 'யாழ்தேவி திரட்டி யின் பெயர் சம்பந்தமானது.
என்ற வகையில் கருத்துக்கள் அமைந் திருந்தன.

மேற்படியான விடயங்கள் சம்பந் தமாக எல்லோரும் கருத்துக்களை முன் வைத்த விதமும், அதில் இருந்த நிதானமும், குறிப்பாக யாழ்தேவி திரட் டியின் பெயர் சம்பந்தமான கருத்துக் கள் மிகுந்த நிதானத்துடன் பலரால் முன் வைக்கப்பட்டதையும், அதிலும் குறிப்பாக யாழ்தேவி திரட்டியின் மூல கர்த்தாகளான மருதமூரான், சேரன் கிரிஷ் ஆகிய இருவரும் அக்கருத்துக் களை எதிர்க் கொண்ட விதமும். அக் கருத்துக்களை சம்பந்தமான தம் எதிர் வினையினை நிதானத்துடன் வெளிப் படுத்திய விதமும் என்னை மிகவும் கவர்ந்தது.

கருத்துரை நிகழ்வு நிறைவு பெற்ற பொழுதுதான், அச்சந்திப்பை ஏற்பாடு பண்ணியிருந்த நான்கு சிங்கங்கள கொண்டிருந்த நல்லெண்ணத்துடான எச்சரிகை உணர்வினை அங்கு வந்திருந்த, கருத்துக்களை கூறிய எல்லா வலைப்பதிவாளர்களும் கொண்டிருந்தார்கள் என்பது புலப்பட் டது. அத்தகைய எச்சரிகை உணர் வினை அவர்கள் எல்லோரும் கொண் டிருந்தற்கான காரணம், வலைப் பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாளர் என்ற ரீதியில் அவர்கள் எல்லோரும் எதிர் கொள்ளும் ஓர் அனுபவமே முக்கிய காரணமென எனக்குத் தெரிந்தது. நல்லதொரு விடயம் செய்கின்ற பொழுது அப்பணியினை கெடுக்கும் தீயசக்திகள் எங்கும் இருப்பது போல், வலைப்பதிவு உலகில் அத்தகைய தீயசக்திகளை அவர்கள் அனாமதயங்களாக(அனானிகள்) அடையாளம் கண்டு கொண்டவர்களாக அவர்கள் இருந்தமை ஒரு முக்கிய காரணமாக எனக்குப் பட்டது.

அதனை நிரூபிக்கும் வகையில் அச்சந்திப்பை முன்னிட்டு வெளியிட்ட அறிப்புகளுக்கும், அச்சந்திப்புக்கு பின் அச்சந்திப்பையிட்டு இடப்பட்ட பதிவுகளுக்கு இட்டப்ட்ட அனாமதைய பின்னூட்டல் சக்திகள் மற்றும் அச்சந்திப்பு நேரடி ஒலிஒளிப்பரப்பு நடந்துக் கொண்டிருக்கும் இணையத்தின் செட் அறையில் பரவிய அனாமதைய வைரஸ் சக்திகளை பற்றிய அறிதலும், அனுபவமும்தான், அத்தகைய எச்சரிக்கை உணர்வுடன் அவர்கள் எல்லோரையும் செயல்பட வைத்திருக்கிறது என்பதையும் நான் புரிந்துக் கொண்டேன். அவர்களின் அந்த எச்சரிக்கை உணர்வின் பயனாக, எந்தவொரு கருத்து முரண்பாடுமின்றி, எந்த விதத்திலுமான முகமுறிவுமின்றி, சக வலைப்பதிவாளர்களை சந்திக்க கிடைத்த முக சந்தோஷத்துடன் எல்லோரும் விடை பெற்று சென்றது அச்சந்திப்பை ஒழுங்கு செய்த சிங்கங்களினதும், அங்கு வருகை தந்திருந்த சகல வலைப்பதிவாளர்களினதும் நோக்கம் நிறைவேறி விட்டதை எடுத்துக் காட்டியது.

ஒவ்வொரு சிந்தனையாளரும், செயற்பாடாளரும் ஏதோ ஒரு விதத்தில் ஏதோ ஒரு கருத்தியல் நிலை சார்ந்துதான் இயங்குகிறார்கள். இதை யாரும் மறுக்கமுடியாது. அதுதான் யதார்த்தம். அப்படி இயங்குவது தான் சரி என்பதை ஏற்று கொள்பவன் நான். நடுநிலை என்ற ஒன்று உலகில் கிடையாது என்பதை அழுத்தமாக நம்புகிறேன் நான். ஆனால் இலங்கை வலைப்பதிவாளர்களின் முதல் சந்திப்பை பற்றி அறிவித்தல் பரவலாக அறியக் கிடைத்த பொழுது, அச்சந்திப்பின் பயனாக இலங்கை வலைப்பதிவாளர்களின் அமைப்பு அல்லது ஓர் இயக்கம் ஒன்று உருவாகும் என்ற எதிர்ப்பார்ப்பில்தான் பலர் (குறிப்பாக வலைப்பதிவாளர்கள் அல்லாத) இருந்திருப்பார்கள். ஆனால், அச்சந்திப்பின் பொழுது அவ்வாறான அமைப்பு உருவாகவில்லை என்பதும், அவ்வாறு உருவாகாததையிட்ட அதிருப்தி அங்கு வந்துச் சென்ற எந்தவொரு வலைப்பதிவாளரிடமும் காணப்படவில்லை என்பதும் இங்கு குறிப்பிடதக்க ஓர் அம்சமாகும்.இதனை நான் அழுத்தமாக சொல்வதற்கு காரணம் எனது இக்குறிப்பு அச்சுக்கு போகும் வரை நான் உலாத்திய வலைப்பதிவுகளில், இச்சந்திப்பை பற்றிய போடப்பட்ட நான் படித்த பதிவுகள் ஓன்றிலும் கூட, (எனது கவனத்திலிருந்து ஏதாவது பதிவு தப்பு இருப்பின் நண்பர்கள் சுட்டிக் காட்டலாம்) இதையிட்டு



பிரஸ்தாபிப்பு காணப்படவில்லை. பெரும்பாலான அவ்வாறு இடப்பட்ட பதிவுகள் இச்சந்திப்பையிட்ட தமது சந்தோஷத்தை பகிர்ந்து கொண்டவையாக அமைந்திருக்க, அத்தகைய பதிவுகளில் ஒன்றான சேரன் கிரிஷ் மற்றும் வந்தியத்தேவன் பதிவுகள் மட்டும் அச்சந்திப்பை பற்றி சற்று விமர்சன பூர்வமான முறையில் வெளிப்பட்டிருந்தாலும், அப்பதிவுகளில் கூட இதையிட்டு பிரஸ்தாபிப்பு காணப்படவில்லை. அவ்வாறான ஓர் அமைப்பு உருவாக்கப்படாத தற்கான காரணத்தை என்னளவில் நான் உணர்த்திருந்தாலும், வலைப்பதிவாளர்களாக இல்லாத வெளியார்களுக்கு அதையிட்டு ஒரு தெளிவினை ஏற்படுத்தும் வகையில், ஒரு பதிவினையினை , அச்சந்திப்பபை ஏற்பாடு செய்த சிங்கங்கள் அல்லது, அச்சந்திப்பை பற்றி ஆழமான ஒரு பதிவுகளை இட்டிருக்கும் சேரன் கிரிஷ், வந்தியத்தேவன் போன்றவர்கள் இடும் பட்சத்தில், அதற்கான தெளிவினை வலைப்பதிவாளர் அல்லாத வெளியார்களுக்கு விளக்ககூடியதாக இருக்கும்.

ஒட்டும் மொத்தமாக நோக்குமிடத்து 23.08.2009 அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கம் வினோதன் மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இலங்கை வலைப்பதிவாளர்களின் முதல் சந்திப்பு மிகுந்த பயன்மிக்கதாகவே அமைந்தது. பரஸ்பரம் பெரும்பான்மையான இலங்கை வலைப்பதிவாளர்கள் சந்தித்து கொண்டதற்கான நல்லதொரு தருணத்தை ஏற்படுத்தி தந்தாகவும், வலைப்பதிவு உலகில் ஏலவே வலைப்பதிவாளர்களாக இருப்பவர்கள் மேலும் உற்சாகத்துடன் செயற்படவும், மேலும் இலங்கை வலைப்பதிவாளர்கள் உருவாகும் சூழலை உற்சாகப் படுத்தும் வகையிலும், அச்சந்திப்பு அமைந்திருந்து என்ற வகையில், அச்சந்திப்பு வெற்றிகரமான ஒரு சந்திப்ப என்றே சொல்லவேண்டும். மேற்குறித்த பலன்களுடன், இனிவரும் நாட்களில் இலங்கை வலைப்பதிவாளர்களிடையே நிகழப்போகும் உரையாடல்கள், கருத்தாடல்கள் ஊடாக முன்வைக்கப்படப் போகும் கருத்துக்கள் எற்படுத்தப் போகும் எதிர்வினைகள் கூட, இச்சந்திப்பின் வெற்றிகரமான தன்மைக்கு பலம் சேர்க்கும் என்பதே எனது கணிப்பாகும்.

**பிற்குறிப்பு-01**

இலங்கை வலைப்பதிவாளர் முதல் சந்திப்பையிட்ட எனது மேற்குறித்த கருத்துக்கள் படிக்க கிடைக்கும் கலை இலக்கிய நண்பர்கள் (கவனிக்க- வலைப்பதிவாளர்கள் அல்ல) அக்கருத்துக்ள் விமர்சன பூர்வமான நிலையில் அல்லாது அதிக அளவாள பூரிப்பை வெளிப்படுத்தியிருக்கும் வகையில் அமைந்திருக்கின்றன என அப்பிராயப்படலாம். உண்மையும் அதுதான். இன்றைய கணனித்துறை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் இணையத்தளம் போன்றவற்றில் வளர்ச்சி, ஈழவம் அத்தோடு அவை தம்மில் தமிழின் பயன்பாடு என்ற வகையிலும். அப்பயன்பாட்டு பணியில் இளைய தலைமுறையினர் கணிசமான அளவில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்ற வகையிலும்தான் எனது புரிதலை வெளிப்படுத்தி இருக்கிறேனே தவிர, வலைப்பதிவு எனும் ஊடகத்தில் முன்வைக்கப்படும் பதிவுகள் மற்றும் படைப்புக்களின் உள்ளடக்கங்களிட்ட விமர்சன பூர்வமான பார்வை முன் வைக்கப்பட வேண்டும் என்ற எனது எதிர்பார்ப்புக்கு ஏற்ப, அவ்வாறான பார்வை ஒன்று எனக்கு உண்டு என்ற பொழுதும். அச்சந்திப்பு அத்தகைய நோக்கத்துடன் கூட்டப்படவில்லை என்பதையும் மனங்கொண்டுதான் அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனே இக்குறிப்புக்கள் என்னால் முன் வைக்கப்பட்டுள்ளன என்பதை நண்பர்கள் நினைவில் நிறுத்திக் கொள்வது நல்லது.

பிற்குறிப்பு 02

இக்குறிப்பில் வெளியிடப்பட்டுள்ள படங்கள் வலைப்பதிவாளர் ஆதிரை தனது பதிவில் இணைத்திருந்த வலைப்பதிவாளர்களின் இச்சந்திப்பு சம்பந்தமான புகைப்படத் தொகுப்பிலிருந்து பெறப்பட்டது. அதற்காக அவர்கள் இருவருக்கும் எனது நன்றிகள்.






# மறக்க முடியாத மாமனிதர்

## இலக்கியப் புரவலர் எம். ரெங்கநாதன்

**- அந்தனி ஜீவா**



'மனிதன் எத்தகைய அற்புதமானவன்!' என்றான் புகழ்பெற்ற இலக்கிய மேதை ஷேக்ஸ்பியர். அத்தகைய அற்புதமானவர்களில் ஒருவர் தான் இலக்கியப் புரவலராக எம்மிடையே வாழ்ந்து மறைந்த எம். ரெங்கநாதன் என்ற பெரியார். இவர் தமிழ் நாட்டின் சென்னை மாநகரத்தில் பெசன்ட் நகரில் சில வாரங்களுக்கு முன்னர் அமரராகிவிட்டார் என்ற தகவல் காற்றோடு கலந்து வந்தது. அது உண்மை என்பதை மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா உறுதிப்படுத்தினார்.

இந்தச் செய்தியை என்னால் நம்பவே முடியவில்லை. பின்னர் அது உண்மை என்பதை தோழர் 'தாமரை' சி. மகேந்திரனுடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொண்டேன். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் முதுகெலும்பாக அதாவது பொருளாளராக இருந்து, பொருளாதார ரீதியில் அவர் வழங்கிய ஒத்துழைப்பு வரலாற்றில் பதியப்பட வேண்டியதாகும். முற்போக்கு சிந்தனையாளராக நம்மிடையே தோழமையுடன் பழகிய எம். ரெங்கநாதனை நினைத்துப் பார்க்கிறேன். என் நினைவுகள் எங்கோ சிறகடிக்கின்றன.

பெரியவர் எம். ரெங்கநாதன் அவர்களை முதன் முதலில் சந்தித்தது இன்றும் என் நெஞ்சில் பசுமையாக பதிந்து உள்ளது. கொள்ளுப்பிட்டியில் [illegible] சங்க மண்டபத்தில் ஓர் இலக்கியக் கருத்தரங்கு. பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், எழுத்துலக ஜாம்பவான்கள் கலை இலக்கியம் பற்றிக் காத்திரமான கருத்துக்களை முன் வைக்கிறார்கள். ஆனால், நாடகம் பற்றி உரையாற்ற வந்த ஒரு பேச்சாளர் பல்கலைக்கழக மட்டத்தில் நடந்த நாடக முயற்சிகளைப் பற்றிப் பேசுகிறார். கொழும்பில் நடைபெறும் நாடக முயற்சிகளைப் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ஆனால், கொழும்பில் நடைபெறும் நாடக முயற்சிகளை புறக்கணித்தவர். அவரது உரை முடிந்த பின்னர் தலைமை வகித்த திரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேம்ஜி ஞானசுந்தரம் பார்வையாளர்களைக் கருத்துச் சொல்ல அழைக்கிறார். உடனே, நான் மேடையேறிக் கொழும்பு நாடக முயற்சிகளைப் பற்றி எடுத்துக் கூறியதுடன், அங்கு நடைபெற்ற உரைகளில் மலையக இலக்கிய முயற்சிகளைப் பற்றி எவருமே எடுத்துக் கூறவில்லை என ஆக்ரோஷமாக மலையக இலக்கிய வளர்ச்சி பற்றிச் சுருக்கமாக எடுத்துக் கூறினேன். பார்வையாளர்களிடையே பலத்த கரகோஷத்துடன் எனது கருத்துக்களுக்கு வரவேற்பு. பின்னர் என் கருத்துக்களை ஆதரித்து சில்லையூர் செல்வராசனும், என். சண்முகரத்தினமும் காத்திரமான கருத்துக்களை முன் வைத்தனர். கூட்டம் முடிந்து வெளியே வந்ததும் என். சண்முகரத்தினம் அங்கு இருந்த ஒருவரிடம் என்னை அறிமுகப்படுத்தினார். அவர் தான் எம். ரெங்கநாதன்.

என்னைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வம் கொண்ட எம். ரெங்கநாதன், என்னையும் என். சண்முகரத்தினத்தையும் அவரது காரில் ஏற்றிக் கொள்கிறார். போகும் வழியில் என்னைப் பற்றி விசாரிக்கிறார். ஓய்வு கிடைக்கும் பொழுது, அவரை வந்து சந்திக்கும்படி கேட்டுக் கொண்டார். அன்று முதல் எம். ரெங்கநாதனுடன் எனக்கு நெருக்கமான நட்பு ஏற்பட்டது. மலையகக் கல்வி, இலக்கிய வளர்ச்சியில் அதிகம் அக்கறை காட்டினார். மலையகக் கல்வி மேம்பாட்டுக்காக, பல்கலைக் கழகத்தில் பயிலும் வசதியற்ற பட்டதாரி மாணவர்களுக்காக ஓசைப்படாமல் உதவி செய்தார். மலையகப் பட்டதாரி மாணவர்களின் ஒன்று கூடலின் போது என்னையும் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார். எல். சாந்திகுமார் போன்றவர்கள் எனக்கு எம். ரெங்கநாதன் மூலமே அறிமுகமானார்கள். சாந்திகுமாரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த **'தீர்த்தக் கரை'** சஞ்சிகைக்கு நிதி உதவி செய்தார் என்பது பலருக்குத் தெரியாத உண்மையாகும். அது மாத்திரமல்ல, 'மல்லிகை' சஞ்சிகைக்குக் கடைசிப் பக்க விளம்பரத்தை அவர் தமிழகத்திற்குப் புலம் பெயர்ந்து போகும் வரை, வழங்கினார் என்பது மல்லிகையுடன் தொடர்புடைய அனைவரும் அறிந்த உண்மையாகும்.

1978 ம் ஆண்டு தமிழகத்தில் திரும்பூரில் நடந்த தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாநாட்டில் கலந்து திரும்பிய பின்னர், கண்டியில் மலையகக் கலை இலக்கியப் பேரவை என்ற அமைப்பைக் கண்டியில் உள்ள நண்பர்களுடன் இணைந்து உருவாக்கிய பொழுது மக்கள் கவிமணி சி. வி. வேலுப்பிள்ளை, எம். ரெங்கநாதன், செய்தி நாகலிங்கம் மூவரும் ஆலோசகர்களாக இருந்து பேரவையின் செயற்பாட்டிற்கு ஆலோசகர்களாகவும் வழிகாட்டிகளாக இருந்தனர்.

ஒரு நாள் என்னை வெள்ளவத்தையிலிருந்த வீட்டிற்கு எம். ரெங்கநாதன் வந்து சந்திக்கும்படி கூறினார். ஒரு மாலை வேளை வெள்ளவத்தையிலிருந்த அவர் வீட்டிற்கு சென்ற வேளை, மலையகக் கவிமணியும், தொழிற்சங்கவாதியுமான சி. வி. வேலுப்பிள்ளை அவர்களைப் பாராட்டிக் கௌரவிக்க மலையகக் கலை இலக்கியப் பேரவை மூலம் சிறப்பான விழா ஒன்றை ஏற்பாடு செய்யும்படி, அதற்குத் தேவையான ஒத்துழைப்பையும் வழங்குவதாகச் சொன்னார்.

கவிஞரும், தொழிற்சங்கவாதியுமான சி. வி. வேலுப்பிள்ளை அவர்களின் இலக்கியப் பங்களிப்பைக் கௌரவிக்கும் முகமாகக் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் தினகரன் ஆசிரியர் திரு. ஆர். சிவகுருநாதன் தலைமையில் ஒரு பாராட்டு விழாவை நடத்தி னேன். சி. வி. யின் இலக்கிய ஆளுமை பற்றிப் பேராசிரியர் க. கைலாசபதி அவர் கள் சிறப்புரை ஒன்றை நிகழ்த்தினார். விழாவில் நாவலாசிரியர் இளங்கீரன், கலாநிதி சபா. ஜெயராசா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். எம். ரெங்கநாதன் 'மலையக மக்கள் கவிமணி' என்ற கௌரவத்தை சி. வி.க்கு வழங்கினார். இந்தப் பெயரைத் தெரிவு செய்து தந்தவர் பேராசான் கைலாசபதி.

பேராசிரியர் கைலாசபதி, ரெங்கநாதனும் நெருக்கமான நண்பர்கள். இன ஒற்றுமைக்காகச் செயற்பட்ட அமைப்புக்களில் இருவரும் அங்கம் வகித்தவர்கள். பேராசிரியர் கைலாசபதி சுகவீனமாகி வைத்தியச் சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவர் ஒரு கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியிருந்தார். பேராசிரியர் கைலாசபதி மீது மிகவும் மதிப்பு வைத்திருந்தவர்களில் ஒருவர் சண்முகரத்தினம். அவரும் ரெங்கநாதனும் கைலாசபதி வைத்தியச் சிகிச்சைக்காக வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று பேசிக் கொண்டிருந்த பொழுது, "கைலாசபதி பெறுமதி மிக்கவர். உடனடியாக ஒரு லட்சம் தருகிறேன். ஆக வேண்டியதைப் பாருங்கள்" என்றார். ஆனால், எதிர்பாராத விதமாகக் கைலாச பதி ஓரிரு தினங்களில் அமரராகிவிட்டார். கைலாசபதியின் மறைவுக்காகப் பெரிதும் கவலைப்பட்டவர் எம். ரெங்கநாதன். பேராசிரியர் கைலாசபதியின் அஞ்சலிக் கூட்டம் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற பொழுது சகல ஒத்துழைப்புக்களையும் வழங்கி என்னையும், சி. வி. வேலுப் பிள்ளையையும் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்ற ஏற்பாடு செய்தார்.

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பாரதி நூற்றாண்டைச் சிறப்பாகக் கொண்டாடிய பொழுது, அந்த நிகழ்வுகள் வெற்றிகரமாக நடைபெறத் துணை நின்றவர் இலக்கியப் புரவலர் ரெங்கநாதன். தமிழகக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான தா. பாண்டியன் இலங்கை வந்த பொழுது, அவரை மலையகத்திற்கு அழைத்துச் சென்று, பாரதி விழாவை நடத்த உதவிகள் வழங்கியவர் ரெங்கநாதன்.

மகாகவி பாரதியார் நாடகத்தை மேடையேற்றும் முயற்சியில் நாடகத்தை எழுதிய எழுத்தாளர் இளங்கீரனும் நானும் முயற்சித்த பொழுது, நாடக மேடையேற்றத்துக்கான டவர் மண்டபத்தை ஏற்பாடு செய்து தந்தவர் ரெங்கநாதன். கறுப்பு ஜூலைக்குப் பின்னர் எம். ரங்கநாதன் குடும்பத்தினர் தமிழகத்தில் குடியேறிவிட்டார்கள்.

தமிழகம் சென்ற எம். ரெங்கநாதன் கம்யூனிஸ்ட் கட்சியோடு தொடர்பு கொண்டு செயற்பட்டார். நான் தமிழகம் சென்ற வேளையில் தாமரை மகேந்திரன் மூலம் கேள்விப்பட்டு என்னையும், சாரல் நாடனையும் பெஸண்ட் நகர் வீட்டிற்கு அழைத்து விருந்தளித்துக் கௌரவித்தார். நான் தமிழகம் செல்லும் போதெல்லாம், தொலைபேசியில் அவருடன் உரையாடுவது வழக்கம். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தைப் பற்றியும் எழுத்துலக நண்பர்களைப் பற்றியும் விசாரிப்பது அவரது வழக்கம். அவரது நாமம் இலக்கிய வரலாற்றில் பதியப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேண்டும் ஒரு வாழ்க்கை வரம்!

- ஆனந்தி

அவசரமாகப் படியிறங்கித் தெருவின் திருப்புமுனை வரை, அசுரகதியில் சென்று மறையும் அம்மாவின் நிழலையே பார்த்தபடி, சூர்யா ஜன்னலடியில் சோகம் கவிந்த முகத்தோடு, உறைந்து போய் நின்றிருந்தாள். அவள் அப்படி நிற்பது இன்று நேற்றல்ல. ஒரு யுகம் போல் நீண்டு செல்கிற முற்றுப் பெறாத அந்தக் கலைக் கணக்கின் நிரந்தர சோகமும், அதனால் ஏற்படுகிற தீர்வற்ற மனக் குழப்பமும் அவளுக்கு மட்டுமல்ல, அம்மாவுக்கும் கூடத் தான். இவ்வாறான குரூரமாக வந்து வதைக்கும் அனுபவச் சூட்டில், தினம் தினம் செத்துப் பிழைக்க வேண்டிய, சவால்களை எதிர்கொள்ளும் பரிதாபகரமான வாழ்க்கைச் சோகம் அவர்களுடையது.

அவளது முழுப் பெயர் சூர்யகுமாரி. தினமும் நித்திய களையுடன், ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் சூரியனின் ஏக சாயலாக, முழுவதும் ஒளிமயமான உயிர்க்களையுடன் தானும் வாழ்ந்து சிறக்க வேண்டுமென்பதை, மனதில் கொண்டே அப்பா அவளுக்கு இந்தப் பெயரை வைத்திருக்கவும் கூடும். பெயர் இருக்கட்டும். அது அவளோடு ஒட்டிய ஒரு புறம் போக்கு அடையாளம் தான். அதை மெய்யாக்குவது போல, வாழ்க்கையில் என்றைக்கும் அவள் இருந்ததில்லை. அவளை அவ்வாறான இருள் கனக்கின்ற சோக நிலையிலிருந்து, மீட்டெடுக்கிற பகீரதப் பிரயத்தனமாகவே, அம்மாவின் சமகாலச் செயற்பாடுகள் அவளை மையமாக வைத்து அரங்கேறி வருகிற, இந்தக் கல்யாணத் தேடலும் அதையொட்டி ஏற்படுகிற அனுபவங்களும், அம்மா எதிர்கொள்கிற பெரும் சவால்கள் தான். இதற்காக நின்று பேசக் கூட நேரமில்லாமல் அவள் ஓடிக் கொண்டிருக்கிறாளே? எதற்காக இந்த ஓட்டம்?

வாழ்க்கையென்ற பெருஞ் சமுத்திரத்தினுள் மூழ்கிக் கரையேறத் துடிக்கிற நிலைமை தான் அவளுக்கு. பாவம் ஒற்றை மனுஷியாய், எவ்வளவு பெரும் பொறுப்புகளையெல்லாம் சுமக்க நேர்ந்திருக்கிறது அவளுக்கு. இதிலே சூர்யாவின் கல்யாணக் காரியம் வேறு, இழுபறியாய் போய்க் கொண்டிருக்கிறது. அது ஒப்பேறினால் தான், இப்போது சூழ்ந்திருக்கிற, இருளிலிருந்து அவள் முற்றாக விடுதலை பெற முடியும்.

அதற்காகவே ஒரு பேச்சுக்கால் கருதி அம்மாவின் இன்றைய புறப்பாடு. முன்பென்றால், அப்பா அம்மாவினுடைய காலத்தில், இப்படியொரு பேச்சுக்கால் என்றாலே மாப்பிள்ளை வீட்டில் கல்யாணக் களை கட்டித்தான் நடைபெறுமாம். அம்மா சொல்லியிருக்கிறாள். இன்று அந்தச் சம்பிரதாயச் சடங்குகளே இல்லாதொழிந்த நிலையில் கல்யாணத் தரகரின் காரியாலயத்திலேயே வெறும் வாய் மொழியாகவே இது ஒப்பேறிவிடுகிற நிலைமைதான்.



இரு பகுதியினரும் கூடிப் பேசுவார்கள். இன்றைக்கு அதற்குத்தான் முதற் புள்ளி போட அம்மா அங்கு போயிருக்கிறாள். சூர்யாவின் மனக் கண்ணிலோ ஆசை ஆசையாக எவ்வளவோ காட்சி நிழல்கள். ஒரு கனடா மாப்பிளைக்கு இலக்கு வைத்துத் தான், அம்மா போட்டுக் கொண்டிருக்கிற இந்த வேடம். அரங்கேறுகிற நாடகம். மனதை மையலில் ஆழ்த்தும் அற்ப சலனப் பொறிகள் சூர்யாவிற்கு. அவை கனவுகள் தானென்றாலும், அவளுக்கு மயக்கம். கட்டறுந்த மனதில் வரக் கூடிய மயக்கம் தான். அந்தக் கனடாக் காவிய புருஷன் தான், இப்போது அவள் மனம் முழுக்க. கனடா என்றால் சும்மாவா? பணமழையாகவே கொட்டப் போகிற, ஒரு சகாப்த புருஷன் மாதிரி அவன்.

அவனோடு சேர்ந்தால், அவள் கூடச் சொர்க்கத்தில் தான் கொடி கட்டிப் பறக்க நேரிடும். அதன் பிறகு காலுக்கடியில் புதைகுழிக்குள் புதையுண்டு மறைந்து போன, சொந்த மண் பற்றி ஞாபகமே அவளுக்கு அடியோடு மறந்து போகும். வாழ்க்கை திசைமாறும். அவள் இப்போது போலில்லாமல் முழுவதும் சூரியக் குளியல் குளித்தபடி என்னமாய்த் தேர் ஏறிப் பறக்கப் போகிறாள், வானத்தில் மிதந்தபடி. அப்படி வரக் கூடிய பொன்னிறக்கைகளிலான தேர் இப்பொழுதே அவள் காலடியில் கனவு மனதில்.

அவளுக்கென்ன? கனவு காணுகிற வயது தான். ஆனால், அது நிறைவேற வேண்டுமே! நிச்சயம் அம்மா நிறைவேற்றி வைப்பாளென்று அவள் திடமாக நம்பினாள். எனினும் அம்மாவைப் பொறுத்த வரை இதில் எதிர்மறையான பல சவால்களுக்கெல்லாம் முகம் கொடுத்துக் காரியம் சாதிக்க வேண்டிய மிகவும் தர்மசங்கடமான நிலைமை அவளுக்கு.

அங்கு கல்யாணப் புரோக்கரின் தரகு மேடையில் முழுவதும் பலியாடாகிப் போகிற நிலைமை தான் அவளுக்கு. பெண்ணைப் பெற்று விட்ட குற்றத்தினால், தலை குனிந்து, தாங்கிப் போக நேர்ந்த, தீராத மன உளைச்சலும், சாந்தியின்மையும், அவளுக்கு மட்டும் தான். ஆனால், அவர்கள்......? அந்தக் கனடா மணமகனை வைத்துப் பேரம் பேச மட்டுமல்ல, தீட்டிய கத்தியில் கூர் பார்க்கவும் அவள் தான். மடை திறந்த வெள்ளம் போல் அவர்களிடமிருந்து புறப்பட்டு வரும் கேள்விக் கணைகளே ஆளைப் பதம் பார்க்கப் போதும். மணமகனின் அக்காவும், புருஷனூடாக அவளைத் துருவித் துருவிக் கேள்வி கேட்பதிலேயே பொழுது கரைந்து போனது. அவள் ஒளிவு மறைவில்லாமலே பதில் சொல்லி முடித்தாள்.

இருப்பினும் ஒரே ஒரு விடயத்தை மட்டும் வெளிப்படையாக மனம் திறந்து பேச அம்மாவால் முடியவில்லை. அதைச் சொன்னால், சூர்யாவிற்குக் கடைசி முறையாக வந்து பொருந்தியிருக்கும் இக் கல்யாணமே தடைப்பட்டுப் போகும். ஏனென்றால் சூர்யாவின் அக்கா சம்பந்தப்பட்ட, ஒரு பாரதூரமான வாழ்க்கைச் சோகம், அவர்கள் அறியக் கூடியதாக மனம் திறந்து, பேசக் கூடிய ஒரு சாதாரண விடயமல்ல. சுமார் பத்து வருடங்களுக்கு மேலாகச் சராசரிப் பெண்களைப் போல் வாழும் பாக்கியமின்றி, மனநலம் பாதிக்கப்பட்ட காரணத்தினால், கூண்டிலடைக்கப்பட்ட நித்திய சிறைக் கைதி மாதிரிச் சூர்யாவின் அக்காவான ரம்யா இருந்து வருகிறாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில் மட்டும் தான் அவள் ரம்யமான ஓர் உயிர்ச் சித்திரம் போல. அந்த உயிர்ச் சித்திரமே இல்லாதொழிந்த, நடைப்பிணம் போலாகிவிட்ட வெறும் வரட்டுப் பிறவியே இப்போது அவள். அவளின் இத்தகைய பரிதாப நிலைக்காக அம்மா உட்பட அவள் சார்ந்த உறவுகளுமே, சிலுவையில் தொங்கி வருந்தியழுகிற நிலைமை தான். சூர்யா மட்டும் இதற்கு விதிவிலக்கல்ல. எனினும் இப்படியொரு பாவப்பட்ட அக்காவுக்காக, தானும் அவள் போலாகி முழுவதும் சிறகொடிந்து போன நிலையில், கருகி அழிந்து போக அவள் தயாரில்லை. அவளுக்கு வாழ்க்கை வேண்டும். மின்னிச் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்ற பொன்னிறக் கைகளோடு, வானில் மிதந்து அவள் பறக்க வேண்டும். இயற்கை நியதிக்கு ஏற்றவாறு, நெஞ்சில் கனக்கிற அக்கா பற்றிய துயர நினைப்புக்களை மறந்துவிட்டு, இப்படியான கற்பனை செய்வதே, அவள் மனதைச் சிறிது ஆறுதல் படுத்தியது. அதுவே நிஜமானால், இன்னும் எவ்வளவு நன்றாக இருக்கும்!

புரோக்கரின் தரகு மேடைக்குப் போய்க் கல்யாணப் பேச்சுக்கால் முடித்துக் கொண்டு அம்மா வீடு திரும்பும் போது, வாசலில் நின்று சூர்யா அவளை எதிர்க் கொண்டாள்.

வீடு நிசப்தமாக இருந்தது. அப்பா பேப்பரில் மூழ்கிப் போயிருந்தார். வெளியே என்ன நடந்தாலும் மௌன கவசம் பூண்டு வாழ்கிற மாதிரி, எதிலும் ஒட்டாமலிருக்கிற தனி உலகம் அவருடையது. ரம்யாவைப் பற்றிய, ஆத்மார்த்தமான கவலை அம்மாவுக்கு மட்டும் தான். சூர்யா வழி மறிக்கும் போது, அவள் சலனமின்றி நின்று கொண்டிருந்தாள். ரம்யா உள்ளே தூங்கிக் கொண்டிருந்ததால், சூர்யா பயமற்ற தொனியில் குரலை உயர்த்தி ஆவலோடு கேட்டாள்.

''அம்மா! அவையள் என்ன சொன்னவை?''

இதற்குப் பதில் சொல்ல முடியாமல் அம்மா தயங்கினாள். முடிவு அவள் கையில் இருந்தால், வெளிப்படையாகக் கூறி விடலாம். இது ஒரு பெண்ணின் தலைவிதியை நிர்ணயிக்கிற கல்யாணக் காரியமென்பதால்- நிறைய யோசித்தே கவனமாகப் பேச வேண்டியிருக்கிறது. அதுவும் ரம்யாவின் காதில் விழாமலே, இது பற்றிப் பேச வேண்டிய மிகக் குரூரமான ஒரு வாழ்க்கை நிர்ப்பந்தம் அவர்களுக்கு.

“சொல்லுங்கோவனம்மா!” என்று சூர்யா மீண்டும் ஆவல் அதிகரித்துக் கேட்கிற போது, மௌனத்தைக் கலைத்துக் கொண்டு பேசுவதைத் தவிர, வேறு வழியில்லை என்று படவே, சுருதி குலைந்து பேசுவது போல் நா வரண்டு அவள் கூறினாள்.

''எதற்கும் அவர்கள் ஊரில் போய் விசாரித்து விட்டுத்தான் சொல்வார்களாம்''

அது வரைக்கும் சூர்யா என்ன செய்யப் போகிறாள்? மடியில் நெருப்பைக் கட்டிக் கொண்டு விட்ட நிலைமை தான். இது அம்மாவுக்கும் பொருந்தும். கரையேறி மீளவே முடியாமல் போன ஒரு பாவத் தீயாய், அவர்களின் மனதை மட்டுமல்ல, வீட்டையே கொளுத்திக் கொண்டிருக்கிறது போல, எப்போதும் ஓர் அவல நிலைதான். சந்தோஷ ஒளி காணாத அந்தகார இருட்டுத்தான். இதிலிருந்து அவர்கள் மீண்டு வந்து சுகம் பெறுவதும், வாழ்வதும்



ரம்யாவின் நோய் நீங்கிய புது வாழ்விலேயே தங்கியிருப்பதாக அவர்களுக்குப் படும்.

அப்படியொரு வரம் கிடைத்தால், கூடவே சூர்யாவுக்கும் ஒரு வாழ்வு கிடைக்கும். அவள் நோய் நீங்கித் தேறாத வரை, சூர்யாவின் வாழ்க்கையும், அதனால் வரப் போகிற குடும்ப உறவு சார்பான உச்சகட்ட இன்பங்களும், அவர்கள் எதிர்கொள்ளப் போகிற சவால்களையெல்லாம் வென்றெடுத்தே பெற வேண்டிய பரிதாபகரமான நிலைமை சூர்யாவுக்கு. ரம்யா பற்றிய வாழ்க்கை உயிரோட்டமிழந்த திரிபு நிலையில், சூர்யா இதில் தேறுவாளா என்பதே பெரும் சந்தேகம் தான்.

சூர்யா இப்போதிருக்கிற இந்த அக்கினிக் குண்டத்திலிருந்து முழுவதும் எரிந்து போகாமல், காப்பாற்றப்பட வேண்டுமானால், விண்ணிலிருந்து ஒரு தேவ புருஷன் தான், அவளை நோக்கி மாலையும் கையுமாக வரவேண்டும். அப்படி வர முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! ஆனால், வாழ்க்கை என்ன சொல்கிறது? மிகவும் பாவப்பட்ட மனதோடு ஒரு நாள் சூர்யா அதைக் கேட்க நேர்ந்தது. அவளைப் பரிசுத்தப்படுத்திப் புனிதமாக்கும் ஒரு வேத பிரகடனமாகவல்ல. சுற்றி வளைத்துக் கொன்று போடும், ஒரு பாவப் பிரகடனமாகவே, அவளை முற்றாகக் கருவறுக்க வென்றே அது வந்த போது, அவளால் தாங்க முடியவில்லை. இப்படித்தான் இரை விழுங்கும் மனித உண்மைகள். அம்மா இதை எப்படித்தான் மனசளவில் ஏற்றுக் கொண்டு ஜீரணிக்கப் போகிறாளோ, தெரியவில்லை.

புரோக்கரிடம் கொடுக்கப்பட்ட, அவளது நிழற் படத்தின் அழகில் எடுபட்டுத்தான், அந்தக் கனடா மாப்பிள்ளை சம்பந்தமான திருமண காரியம் நடைபெற்று முடிந்தது. அந்த நிழல் அழகிற்குப் பின்னால், நிஜமென்று ஒன்றிருப்பதை அப்போது அவர்கள் அறிந்திருக்கவில்லை. அதை அவர்கள் அறிய அம்மா கூறியிருந்தால், அது அப்பவே முறிந்து போயிருக்கும். ஏன் சொல்லவில்லை? தினமும் இந்த உயிர்களுக்காக, அவள் பெற்ற பிள்ளைகளுக்காகத் தினமும் தீக்குளித்தே பழக்கப்பட்ட அவளுக்கு, இப்போதும் அப்படியொரு நிலைமைதான். வாழ்க்கை குறித்து எரிக்கிற சத்தியத் தீயின் எடுபடாத ஒரு மறுதுருவமாக இருந்து கொண்டே, அதைச் செய்து முடிக்க வேண்டிய தார்மீகக் கடமை ஒன்றே அப்போதிருந்த மனோநிலையில் அவளுக்குப் பெரிதாகப் பட்டது.

ரம்யா என்றொரு மூத்த சகோதரி, சூர்யாவுக்கு இருப்பதாகவும், செவ்வாய் தோஷம் காரணமாக அவளுக்கு இன்னும் கல்யாணம் நடக்கவில்லை என்று மட்டுமே, அவள் அவர்களிடம் கூறியிருந்தாள். அது எப்படியோ ஊரின் காது வரைக்கும் எட்டி, இன்று காற்றில் பறக்கிறது. எப்படியென்றால், அலை பாயும் போன் வழி மூலமாகத்தான். அம்மா அதைப் பொறுமையிழந்து கேட்டுக் கொண்டிருந்தாள். அவர்கள் தெய்வவரம் தருவார்களென்று நம்பியிருந்த அந்தக் கனடா மாப்பிள்ளையின் அன்பு அக்கா தான், எதிர்முனையிலிருந்து கோபக் கனல் பறக்கக் கேட்கிறாள்.

''நீங்கள் சொன்னதெல்லாம் பொய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே? ஏன் உங்கடை பிள்ளைக்கு, இன்னும் கல்யாணம் நடக்கேல்லை என்று, எங்களுக்கு இப்ப நல்லாய் விளங்குது. உங்கடை பிள்ளைக்கு சாதக தோஷமில்லை விசர்! இப்படியொரு இடத்திலை எப்பிடி நாங்கள் பெண் எடுக்கிறது?"

இதற்கு அம்மாவால், என்ன பதிலைத் தான் கூற முடியும். வருந்தியழுகிற அவர்களின் உடலை வேரானது. தாங்கு உளுத்துப் பரைபோடிப் போயிருக்கிறது. அவர்களின் முகமும், வலிகளும் மாற்று உலகின் கல்களுக்கு எட்டாமல் போனது. அதன் தவறல்ல. இப்படியொரு நிலைமையில் வாழ்க்கை வரம் வேண்டி, மண்டியிட்டுக் கைபேந்தி நின்றதற்காகத் தன்னையே நொந்து சபிப்பது போல, அம்மா தன் தலையில் கை வைத்தே, தனது இந்த இயலாமையையும் வெறும் போக்குத்தனத்தையும் எண்ணிப் பெருங்குரலெடுத்து அழுகிற போது, அப்படி அழுகிற தாய்க்காகத் தனது இல்லாறான வாழ்க்கை வரம் கிடையாமல் போன துயரங்களையெல்லாம் புறம் தள்ளி மறந்து விட்டுத் தாயை ஆசுவாசப்படுத்தி, ஆறுதல் படுத்துவதொன்றையே பெரிதும் மனம் விரும்பியவளாய், அம்மாவின் தோள் மீது கைபோட்டுச் சலனமின்றிக் கூறினாள் சூர்யா.

"விடுங்கோவம்மா...... எனக்குக் கல்யாணமாகாவிட்டாலென்ன? ரம்யாவுக்கு ஒரு நல்ல துணையாகக் கடைசி வரை நானே இருந்திட்டுப் போறன். இனி இதை மறந்திடுங்கோ"

ஏதை...? அம்மாவுக்கு அது விளங்க நீண்ட நேரம் பிடித்தது. சிருஷ்டிபெல்லு, மிகப் பெரிய அளவிலான இந்த உலக நடப்புகளுக்கெல்லாம், ஆதார சுருதியாக இருந்து இயங்குவதே, ஆணும் பெண்ணுமாய் இணைந்து சிறப்புப் பெறுகிற இந்தத் திருமணப் பந்தம் தான். அதை அடைவதனால் ஏற்படுகிற வம்சவிருத்தியும், வளமான வாழ்வும் பேறுவதே, யதார்த்த வாழ்வின் சிறப்பு அடையாளங்கள் என்று கூறப்பட்டாலும், அது இல்லாதொழிந்த நிலையிலும், உணர்ச்சிகளடங்கி மனதளவில் எல்லாக் கறைகளும் நீங்கப் பெற்றுப் பூரண ஒளிகொண்டு பிரகாசிப்பது அதைவிடச் சிறப்பு.

அப்படியொரு தபஸ்வினி போலாக விரும்புகிற சூர்யாவை, இனி எந்தச் சலனங்களுமே அசைக்காதென்று, அம்மா மனப்பூர்வமாக நம்பினாள். ஏனென்றால், வாழ்க்கை மாயமான கறைகளை எரிக்கத்தான், மனதில் சுவாலை விட்டுப் பற்றியெரியும் அக்கினிக் குண்டம். அது சூர்யாவிற்கும் பொருந்தும்.


**சந்தா செலுத்தி விட்டீர்களா?**


புதிய ஆண்டு தொடங்கி விட்டது. தயவு செய்து தமது சந்தாக்களைப் புதுப் பித்துக் கொள்ளவும்.

மனந் திறந்து மல்லிகையுடன் ஒத்துழையுங்கள். ஏனெனில் மல்லிகை உங்கள் ஒவ்வொருவரினதும் இலக்கிய குரலாகும்.

அசட்டை செய்வோருக்கு முன்னறிவித்தலின்றி இதழ் நிறுத்தப்படும்.




அன்று அலுவலகத்தில் என் பணிகளில் மூழ்கியிருந்த வேளையில் கிடைக்கத் தொலைபேசியினூடு வந்த அந்த செய்தி என்னைச் சில நிமிடங்கள் ஸ்தம்பிக்க வைத்து விட்டது. "எங்கட பிரசிடென்ட் இன்னைடைக்குக் காலையிலை இறந்திட்டார்" கட்டைவேலி நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நூலகராகப் பணியாற்றும் கார்த்திகா பாலசுந்தரம் தான் அந்தச் செய்தியைத் தளதளத்த குரலில் அவசர அவசரமாக எனக்கு அறியத் தந்தார். இதுவரை நேரில் கண்டு அறிமுகம் ஏதுமற்ற, தொலைபேசியினூடாக மட்டுமே பழகிய சக எழுத்தாளர் ஒருவர், தங்கள் சங்கத் தலைவரின் மறைவினை உடனே எனக்கு அறிவிக்க வேண்டுமென்ற உந்துதலை ஏற்படுத்தியது; சிதம்பரப்பிள்ளை மாஸ்டர் உடனான எனக்கிருந்த நட்பாட்டினை அவர்கள் அறிந்து வைத்திருப்பதற்கும் அப்பால், அன்னார் மீது அவர்கள் கொண்டிருந்த பற்றுதலும் பெருமதிப்புமே காரணங்களாய் அமைந்தன என ஊகித்துக் கொள்ள எனக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை.



# சிதம்பரப்பிள்ளை மாஸ்டர்- சில நினைவுகள்

- புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

இந்தத் தகவல் கிடைத்த சில மணிநேரங்களின் பின்னர், பிற்பகலில் தான் தினக்குரல் யாழ் அலுவலகத்திலிருந்து செய்தியாக அது, நான் பணிபுரியும் கொழும்புத் தினக்குரல் காரியாலயத்தினை வந்தடைந்தது. மரணம் என்பது நிகழக் கூடாதது ஒன்று என சில மறைவுகள் என்னை எண்ணத் தூண்டும். அந்த வகையில் மாஸ்டரின் மறைவும் எதிர்பாராமலேயே நிகழ்ந்துவிட்டது. திரும்பத் திரும்ப அதை எண்ணியே மனம் பொருமியது. ஈவிரக்கமின்றி மறைந்திருந்து மாஸ்டரைப் படு கொடூரமாகத் தாக்கிவிட்டது மரணம்.

மாஸ்டர் சற்று நோய்வாய்ப்பட்டுள்ளார் என்ற செய்தியை முன்னர் நான் அறிந்திராது விட்டாலும், கூட்டுறவுச் சங்க அலுவலகத்தில் அவரது கதிரையில் அமர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் தான் இந்த விபரீதம் நிகழ்ந்திருக்கக் கூடுமென நான் எண்ணியிருப்பேன். சங்கத்தின் வளர்ச்சிக்கு அடுத்து என்ன செய்யலாம்? அதனூடு வடமராட்சி மக்களுக்கு, இலக்கியவாதிகளுக்கு எந்தவகையில் உதவலாம்? என அந்தக் கதிரையில் அமர்ந்திருந்தவாறு தானே அவர் சிந்திப்பார், செயற்படுவார். நாட்டின் உயர்வுக்காக, மக்களின் மேம்பாட்டிற்காகக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சேவையாற்றிய ஒரு மாமனிதர், தான் 'சீவித்த' இடத்திலேயே தன் இறுதி மூச்சினையும் விட்டிருக்கக் கூடும் என நான் கற்பனை கொள்வதில் ஏது தவறு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

×××××××

தொண்ணூறுகளின் இறுதிக் கூறில் என நினைக்கிறேன். மீரா பதிப்பகத்தின் எந்தத் தலையமைப்பினை ஏடு பூராகவும் விசாலிப்பதில் நான் தீவிரமாக இருந்த வேளையில் தான், வடமராட்சியில் ஓர் விற்பனை மையத்தினை ஏற்படுத்திக் கொள்ள கட்டைவேலி- நெல்லியடிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவரை அணுகுமாறு தெணியான் அண்ணா எனக்கு ஆலோசனை கூறினார். தொலைபேசியில் தொடர்பு கொள்ள இயலாத அந்தக் கால கட்டத்தில், எனது விருப்பினை, வேண்டுதலை நீண்ட மடலாக எழுதிச் சிதம்பரப்பிள்ளை மாஸ்டரின் முகவரிக்கு அனுப்பி வைத்தேன். எனது வெளியீடான ஆறுக் கூடிய பிரதிகளைக் கொள்முதல் செய்யத் தான் சம்மதிப்பதாக மாஸ்டர் எனக்கு அனுப்பி வைத்த கடிதம், விசாக விடுமுறைகளைத் தொடர்ந்து வந்த ஒரு வேலை நாளன்று காலைப் பொழுதில் என் கரம் கிட்டியது.

சிதம்பரப்பிள்ளை மாஸ்டருக்கும் எனக்குமான உறவு இவ்வாறு தான் ஆரம்பித்தது. அன்றிலிருந்து என் பதிப்பக வெளியீடுகளுக்கு வடமராட்சி முகவர் போல செயற்பட்டு இன்று, இராஜேஸ்கண்ணனின் நூலோடு எழுபத்தொன்பது நூல்களை வெற்றிகரமாக வெளியிட்டுள்ளதோடு எனது பதிப்பகத்தினை நற்பாதையில் இட்டுச் சென்றதில், சிதம்பரப்பிள்ளை மாஸ்டருக்கும் பங்கு உண்டு என்றால் அது மிகையாகாது.

நூற் பிரதிகளை வெள்ளவத்தையிலுள்ள தனியார் தபாலகங்களில் ஒன்றில் பொதிகளாய் ஒப்படைப்பேன். அதே மாத முடிவில் அல்லது அடுத்த மாத முதல் வாரத்தினுள் கட்டைவேலி- நெல்லியடி கூட்டுறவுச் சங்கத்தின் காசோலை தாங்கிய கடிதம் என் கரம் கிட்டிவிடும்.

எனது சிறுகதைகள் பற்றி மௌனகுருவின் மாணவி அல்வாயூர் எம். திருமகள் ஆய்வு செய்து எழுதிய நூலையே, என்னிடமிருந்து மாஸ்டர் கொள்வனவுக்காக இறுதியாகப் பெற்றிருந்தார். வழமைக்கு மாறாக அந்நூலினை பொதிகளில் சேர்ப்பிக்காது; மகரகம ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் ஆங்கில ஆசிரிய பயிற்சிக்காகக் கொழும்பு வந்திருந்த எனது தங்கை மூலம் சேர்ப்பித்திருந்தேன். அந்நூல்களை எனது தங்கை மாஸ்டரிடம் நேரில் சென்று கையளித்த போது, "உங்கடை அண்ணாவை ஒருக்கால் நான் நேரிலை சந்திக்க விரும்புறன்" எனக் கூறியதாக, தங்கை பின்பு எனக்கு எழுதியிருந்தாள். காலம் கனியட்டும் என நான் காத்திருந்தேன். ஆனால், அதற்குள் காலன் முந்தி விட்டான்...... என ஓலமிட மட்டுமே இப்போதென்னால் முடிகிறது.

×××××××

கூட்டுறவுக் குடும்பத்திலே சிதம்பரப்பிள்ளை மாஸ்டர் பெறும் முக்கியத்துவத்திற்கான காரணம், அவரது திட்டமிட்ட செயற்பாடுகளும், கடின உழைப்பும், வெகுஜனத் தொடர்புகளும் மட்டுமல்லாது இலக்கியத்தின் மீதும், பிரதேசத்தின் மேலும் அவர் கொண்டிருந்த பற்றுதலுமே ஆகும்.

தான் சார்ந்த மண்ணினையும் மக்களையும் மட்டுமல்லாது அயலக மக்களையும் அவர் எவ்வாறு நேசித்திருந்தார் என்பதற்கு திசைக்குரல் மற்றும் அதை ஒத்த உள்ளூர் இதழ்களில் அவருக்காகப் பிரசுரமாகியிருந்த எண்ணற்ற கண்ணீர் அஞ்சலிகளும், நினைவுக் கட்டுரைகளும் சான்றாக அமைந்திருந்தன.

சங்கத் தலைவராக இருந்தாலும் எந்த வித 'பந்தா'வும் இன்றி பணியாளர்களுடன் நட்புறவுடன் அவர் பழகிய பாங்கு பற்றிப் பலரும் சிலாகித்து சொல்லக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.

தலைவராக அவர் நின்று ஆற்றிய கெளரவமான சேவையை கண்ணெதிரே பார்க்கையில் இளைஞராக, நடுத்தர வயதினராக இருந்த போது பொறுப்போடு அவர் ஆற்றிய ஆசிரியத் தொழிலும் அந்த அக்கறையுமே முன்னின்று தாங்கி உச்சத்தில் இருத்தியது அவரை அழைத்து வந்திருப்பது புலனாகின்றது.

கூட்டுறவாளனது நாட்டுப்பற்று என்பதைத் தனது செயற்திறனில் காட்டிய அந்த முன்னோடியின் வழியில் கட்டைவேலி- நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தொடர்ந்தும் நடம் பதித்துச் செல்லும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.


ஆனால்.........

சிதம்பரப்பிள்ளை மாஸ்டரின் 'அந்த' இடம், அவர் பிரிவினாலான மனம் போலவே, இட்டு நிரப்பப்பட முடியாது என்றும் வெற்றிடமாகவே இருக்கும்!


**‘மட்டு நகரின் மருத்துவச் சமூகம்- பேசப்படாத வரலாறு’**

நகரின் சமூக வரலாற்றின் ஒரு சிறிய பகுதியைப் பேசும் புத்தகம் விற்பனையாகிறது.

விலை ரூபா. 200/= தபால் செலவு ரூபா. 70/=



-கிடைக்குமிடம்- இல. 43, டயஸ் ஒழுங்கை, மட்டக்களப்பு.

-கொழும்பில்- பூபாலசிங்கம் புத்தகசாலை 202, செட்டியார் தெரு.

மோகனதாஸ்.

தொ. பே. இல: 0712214400






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்காலிக விடிவெள்ளிகள்

பெரிய ஐங்கரன்

என் வானத்தைக் கடந்து
உன் வானத்தில் உதிக்கிறது
விடிவெள்ளி

என் வானத்தில்
இருளும் வெறும் கோடுகளும்
இனம் புரியாத தூசி துணிக்கைகளும்

நிலவும் ஒளியும் மீன்களும்
உன் வானத்தில் எப்பொழுதும்

என் வானம்
வெடித்துச் சிதறுகின்றது
உனதும் உன் வானத்தினதும் வீக்கங்களால்

எனது வானத்தை
என் கருவிற்குள் அடக்கிக்கொள்கின்றேன்
ஓர் ஆலம் விதையைப் போல.

உனது ஆணவப்படி இப்போதைக்கு விரித்துக்கொள்
உனக்கான வானத்தையும்
உப்புச் சப்பில்லாத விடிவெள்ளிகளையும்.



# பிரிதலும்...இரங்கலும்

— ஈழக்கவி

கர்வமும் பொய்மையும்
கலந்த ஒரு வெளிப்பாடு
உன்னிலிருந்து வெளிவருமென
நான் நினைக்கவே இல்லை.

கடவுளுக்கு இட்ட தினையை
உண்ட மயில்
ஆடுமகள் ஆனது போல
துடித்தது இதயம்.

கனிதரும் மரத்தை
வேரோடு பிடுங்கி
தலை கீழாக நடுகின்ற
இன்றைய உலகில்
உன் செயலொன்றும்
பெரிய விடயமல்ல;

இருந்தும்,
நீர்மலி கண்ணில் வலித்தது.

மழை மொக்குகள்
உடைதல் போல
என் கனவுகள்
சிதைகின்ற காலங்களில்
நீ வந்தாய்
நிலவாக.....

கொஞ்சம் நிம்மதி
ஒளிர்கையில்
ஒதுங்கிக் கொண்டாய்.

பிரிதலுக்கு
ஒரு பாலையாகவா
இரங்கலுக்கு
ஒரு நெய்தலாகவா

நீ வந்து போனாய்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக்கிற கைதான் அணைக்கும்

முருகபூபதி

எனக்குத் தெரிந்த லெபனான் நாட்டைச் சேர்ந்த ஒரு குடும்பப் பெண் ஒரு நாள் தனது கவலையைச் சொல்வதற்காக என்னைப் பார்க்க வந்தாள். அவளுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள். கணவனும் அவளும் வெவ்வேறிடங்களில் வேலை செய்கிறார்கள்.

வேலைக்குச் செல்லும் போது பிள்ளைகளை தனது தாயிடம் விட்டுச் செல்வாள். தாயான பிள்ளைகளின் பாட்டியார்தான் அந்தப் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதும் மாலையில் வீட்டுக்கு அழைத்து வருவதுமான பணிகளை கவனித்துக்கொண்டு உணவும் சமைத்துக் கொடுப்பார்.

மாலையில் வேலை முடிந்து தாயாரிடம் சென்று பிள்ளைகளை அழைத்துக் கொண்டு தனது வீட்டுக்குச் செல்வாள் அந்த லெபனீஸ் பெண்.

அந்தப் பிள்ளைகளில் மூத்தவன் சற்றுக் குழப்படிக்காரன். ஒரு நாள் பாட்டியார் வீட்டில் எதனையோ போட்டு உடைத்து விட்டான். மாலையில் மகள் வேலையால திரும்பியதும் பேரனின் குழப்படி பற்றி புகார் சொல்லி போட்டுக் கொடுத்து விட்டார் பாட்டியார்.

வேலைக் களைப்பினால் வந்த தாய்க்கு பொல்லாத கோபம். வீடு அருகில்தான். பிள்ளைகள் இருவரையும் அழைத்துக் (இழுத்துக்)கொண்டு வீடு செல்லும் போது மூத்தவனின் முதுகில் இரண்டு அடி போட்டு விட்டாள். அவனும் அழுது புலம்பிக் கொண்டு போயிருக்கிறான்.

வழக்கமாக வீடுகளில் நடக்கும் சாதாரண சம்பவம்தான். பிள்ளைகள் குழப்படி செய்தால் பெற்றவர்கள் அடிப்பது சகஜம்தான். ஆனால் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் சங்கடத்தைத் தருவதும் இந்த விவகாரம் தான். இங்கு பாடசாலைகளிலிலும் மாணவர்கள் குழப்படி ஏதும் செய்தால் அதற்கான தண்டனை அடிப்பது அல்ல. பாடசாலை விட்டதும் மேலும் சில மணிநேரங்கள் பாடசாலையிலிருந்து படிக்க வேண்டும் வீட்டுப் பாடத்தை (Home Work) செய்ய வேண்டும்.

அந்த லெபனீஸ் தாய். மகனுக்கு தெருவில் வைத்து அடித்ததை யாரோ பார்த்து விட்டு பொலிஸுக்கு தகவல் சொல்லி விட்டார்கள். பொலிஸ் உடனடியாக அந்தப் பெண்ணின் வீட்டுக்குச் சென்று விசாரணைக்கும் அழைத்துவிட்டார்கள்.



"எனது பிள்ளை குழப்படி செய்தால் அடிப்பதற்கு எனக்கு உரிமையில்லையா?" என்று கேட்டிருக்கிறாள்.

"இது அவுஸ்திரேலியா. லெபனான் அல்ல" என்பது பொலிஸ் தரப்பு நியாயம். ஒருவரை கை நீட்டி அடிப்பது குற்றம். அது யாராக இருந்தாலும் அடிக்க முடியாது. இதுதான் அவுஸ்திரேலியாச சட்டம்.

அந்தப் பெண் இங்கு கவுன்ஸிலிங்குக்கு அனுப்பப்பட்டாள். அதாவது பிள்ளைகளை அடிக்காகமல் எப்படி வளர்ப்பது என்பதை சில வாரங்களுக்கு அங்கே சொல்லிக் கொடுப்பார்கள்.

இதனை வாசிக்கும் இலங்கை வாசகர்கள் மூர்ச்சித்து விழாமல் இருக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். கோபத்தில் ஒருவரின் சேர்ட்டைப் பிடித்து இழுத்தல் கூட. சட்டப்படி குற்றம்தான் இந்த நாட்டில். நிரூபிக்க முடிந்தால் வழக்கும் தாக்கல் செய்து தண்டனையும் வாங்கிக கொடுக்கலாம். அண்மைக் காலங்களில் இந்திய மாணவர்கள் தொடர்ச்சியாக இனந்தெரியாத நபர்களினால் தாக்கப்பட்டதையடுத்து ஊடகங்கள் அதனை அம்பலப்படுத்தின. அத்துடன் இந்திய மாணவர்களும் கண்டனப் பேரணிகளும் நடத்தினர். அவுஸ்திரேலியா - இந்தியா உறவுக்கு இந்த விவகாரம் பெரும் குந்தகமாகிவிடும் என்பதனால் இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஸ்ணாவும் இங்கு வந்தார். பாதிக்கப்பட்ட மாணவர்களை பார்த்தார்.

இந்திய மாணவர்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தீபாவளிக் கொண்டாட்டங்களை விமரிசையாக நடத்துவதற்கு அவுஸ்திரேலிய அரசு அனுசரணை வழங்குவதற்கும் முன்வந்துள்ளது. அதன் மூலமும் பதட்டத்தை தணிக்கலாம் என்று அரசு நம்புகிறது.

ஒருவரை அடிப்பது சட்டப்படி குற்றம்தான். ஆனால். இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் மட்டுமல்ல சுவாரஸ்யங்களும் உண்டு. இந்த நாடு ஒரு பல்தேசிய கலாசார நாடு. நூற்றுக்கணக்கான நாடுகளைச் சேர்ந்தவர்கள் இங்கே குடியேறி வசிக்கிறார்கள்.

ஒரு தமிழர் கோபத்தில் மனைவிக்கு அடித்துவிட்டார். மனைவி பொலிஸ் நீதிமன்றம் வழக்கு என்று உஷாராகிவிட்டார். மாப்பிள்ளை சட்டத்தரணியிடம் சென்றார். "அடிக்கிற கைதான் அணைக்கும்" என்று பாடியும் காட்டியிருக்கிறார்.

"அதெல்லாம் உங்க நாட்டில். இங்கே அடிப்பதற்கு கையை ஓங்குவதும் குற்றம்தான்" என்று சட்டத்தரணி சொன்னாராம்.

சட்டத்தில் வன்முறைக்கு அனுமதியில்லை என்பதனால். அவுஸ்திரேலியாவில் குடும்பங்களில் கணவன் மனைவிக்கிடையில் சச்சரவு வந்தாலும் அது வன்முறையில் முடிந்தால் அடுத்த கட்டம் விவாகரத்தாகவிருக்கும். வெள்ளை இனத்தவர்களி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையில் மட்டுமல்ல புலம்பெயர்ந்து வாழும் இலங்கை, இந்திய தமிழர்கள் மத்தியிலும் விவாகரத்துகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

கணவன்தான் மனைவிக்கு அடிக்கிறான் என்று மாத்திரம் சொல்ல முடியாது. மனைவியிடம் வாங்கிக் கட்டும் கணவர்களும் இருக்கிறார்கள். சமையலறையில் ஆயுதங்களுக்கா குறைவு? கத்தி, முள்ளுக்கரண்டி, அகப்பை, சாவிக் கொத்து கூட ஆயுதங்கள்தான்.

நான் வேலை செய்யும் இடத்தில் ஒரு வெள்ளை இனத்தவர் ஒருநாள் கன்னத்தில் இரத்தக்காயத்துடன் வந்தார். "என்ன நடந்தது?" என்று கேட்டேன்.

மனைவி முள்ளுக்கரண்டியால் கீறிவிட்டாள் என்று சிரித்துக் கொண்டு சொன்னார். சில வாரங்களின் பின்னர் ஒரு நாள, தனது மனைவி வீட்டை விட்டு போய்விட்டதாகச் சொன்னார்.

"அடுத்து என்ன விவாகரத்தா?"- என்று கேட்டேன்.

"இல்லை. நாமிருவரும் சில வருடங்கள் சேர்ந்து வாழ்ந்தோம். (Living together) அவள் போய்விட்டதனால் இனி நிரந்தரமாக பிரிந்து விடுவோம். இப்போது நான் சந்தோசமாக இருக்கிறேன். எத்தனை நாட்களுக்குத்தான் அவளிடம் அடி வாங்குவது?" என்றார்.

சரி.. நீர் ஏன் பொலிஸுக்குப் போகவில்லை?"- எனக்கேட்டேன்.

அதெல்லாம் வீண் அலைச்சல். பொலிஸ் நீதிமன்றம் என்று போகத் தொடங்கினால் அநாவசியமாக சட்டத்தரணிக்குத்தான் செலவழிக்க நேரிடும்"- என்றார். அந்த புத்திசாலி முன்னாள் கணவர்.

நல்லவேளை அவர்களுக்கு பிள்ளைகள் இல்லை. இருந்திருந்தால் தாபரிப்பு, ஜீவனாம்சம் என்று வாழ்க்கை இன்னுமொரு கட்டத்திற்கு நகர்ந்து நரகமாக்கியிருக்கும்.

இப்படி எத்தனையோ கதைகள் இங்கு எம்மைச் சுற்றியிருக்கின்றன. இரவில் நித்திரையின் போது கணவர் குறட்டை விடுகிறார் என்று விவாகரத்துக்கோரிய பெண்களும் இருக்கிறார்கள். வாராந்த விடுமுறை நாட்களில் தொடர்ச்சியாக ஒரே உணவு விடுதிக்குத்தான் அழைத்துச் செல்கிறார் என்ற காரணத்தைச் சொல்லி விவாகரத்து கேட்ட பெண்ணும் இருக்கிறாள்.

இப்படி எத்தனையோ.......

ஒரு கணவர் விவாகரத்து கோருவதற்கு சொன்ன காரணம் சற்று அதிர்ச்சி தருவது. எழுதுவதற்கும் சற்று கூச்சமாகத்தான் இருக்கிறது. எனினும் இப்படியும் வெளிநாடுகளில் நடக்கிறது என்பதை இலங்கை வாசகர்கள் அறிந்திருப்பதில்



எந்த நட்டமும் இல்லை என்பதனால் எழுதுகின்றேன்.

அந்தக் கணவர் சொன்ன காரணம்: உடலுறவின் போது, மனைவி புத்தகம் படிக்கிறாளாம். இது எப்படி இருக்கிறது?

இலங்கையில் இந்தியாவில் தமிழ்நாட்டில் தெருவோரங்களில் குடியிருக்கும எத்தனையோ ஏழை மக்களைப் பார்த்திருப்போம். அன்றாடம் காய்ச்சிகளாக கூலித்தொழில் செய்துகொண்டும் கிடைப்பதை வைத்து சாப்பிட்டு தியேட்டரில் படமும் பார்த்து வருடத்துக்கு ஒரு பிள்ளையும் பெற்றுக்கொண்டு சண்டை சச்சரவுகளுடன் வாழும் எத்தனையோ ஏழை மக்கள் மத்தியில் இந்த விவாகரத்து என்ற பேச்சுக்கே பெரும்பாலும் இடமிருப்பதில்லை.

முதல் நாள் கணவன் குடித்துவிட்டு வந்து மனைவியை போட்டு அடித்தாலும் மறுநாள் காலை கணவனுக்கு கோப்பி-தேநீர் தயாரித்துக் கொடுக்கும் பெண்கள், பெண்ணிலைவாதிகளாக மாறாத வரையில் கணவர் பாடு கொண்டாட்டம்தான். அதே சமயம் கணவனின் கொடுமை தாங்க முடியாமல் பிறந்த வீட்டுக்கு முறையிடச் செல்லாமலும் பொலிஸ் நீதிமன்ற படிகளில் ஏறி இறங்காமலும் கணவனை பரலோகம் அனுப்பிய வீராங்கனைகளும் இருக்கிறார்கள்.

ஒரு நாட்டில் ஒரு கணவர் தனது மனைவியைப் பார்த்து "நீ அவலட்சணமாக இருக்கிறாய்!" என்றாராம். மனைவி விடுவாளா? நீதிமன்றம் சென்று கணவனுக்குத் தண்டனையும் வாங்கிக் கொடுத்துவிட்டாள். இன்னுமொரு நாட்டில் மனைவிக்கு கணவன் அடிப்பது பாரதூரமான குற்றம் இல்லை என்று தீர்ப்பளித்த ஒரு நீதிபதிக்கு எதிராக சில மனித உரிமை இயக்கங்களும் பெண்ணுரிமை அமைப்புகளும் போர்க்கொடி உயர்த்தியிருக்கின்றன.

இன்று உலகில் பல புதிய புதிய நோய்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது போன்று, புதிய புதிய சமய பீடங்கள் தோன்றுவது போன்று கணவன் - மனைவி உறவு தொடர்பாகவும் புதிய புதிய சிந்தனைகள் உருவாகியிருக்கின்றன.

இதனை எழுதிக் கொண்டிருக்கும் போது லண்டன் பி.பி.சி.யில் கேட்ட செய்தி சற்று வித்தியாசமாக இருந்தது.

அதாவது, ஒரே கட்டிலில் ஒன்றாக உறங்கும் கணவன் - மனைவிமாருக்கு நித்திரைக் குறைவு ஏற்படுவதாகவும் 55% வீதமானவர்கள் பாதிக்கப்படுவதாகவும் குறட்டைச் சத்தத்தினாலும் பெரும்பாலானவர்களின் ஆரோக்கியம் கெடுவதாகவும் புள்ளிவிபரத்துடன் தெரிவித்தது அந்தச்செய்தி.

இது எப்படி இருக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்டுத் திறத்தாலே- சிறுகதைத் தொகுப்பு

## ஓர் இரசனைக் குறிப்பு

**– யோகேஸ்வரி சிவப்பிரகாசம்**

கலாநிதி த. கலாமணி அவர்களை கலை, இலக்கிய நெஞ்சங்களுக்கு அறிமுகப் படுத்த வேண்டிய அவசியமில்லை. அவரது இரண்டாவது சிறுகதைத் தொகுதியாக, **'பாட்டுத் திறத்தாலே'**, ஜீவநதி வெளியீடாக வெளிவந்திருக்கிறது.

கையிலெடுத்ததும் ரமணி அவர்களின் கைவண்ண அட்டை வடிவமைப்புடன் நூல் மனதைக் கவர்கிறது. உள்ளே பத்துச் சிறுகதைகள் நூறு பக்கங்களில் எமக்கு விருந்தாகின்றன.

'பாட்டுத் திறத்தாலே' என்ற தலைப்பைப் பார்த்ததுமே பாரதியின் கவிதை வரி நினைவிற்கு வருகிறது. உள்ளே சிறுகதைகளின் தலைப்புகளைப் பார்க்கும் போது, மேலும் சில பாரதியார் கவிதை வரிகள் மனதினுள்ளே தொடர்கின்றன. முதலாவது கதை **'பாட்டுத் திறத்தாலே'**, பத்தாவது கதை **'பாலித்திட வேண்டுமம்மா'** இடையே **'புவனேஸ் வரி'**, **'வீழ்ந்து விடாதிருப்பேன்'**, **'மிக்கேல்'**, **'முதுசொம்'**, **'வஞ்சமிலா இனம் வேண்டும்'**, **'அரசன் எவ்வழி'**, **'புலவி'**, **'விதியே விதியே'** ஆகிய கதைகள் அமைந்துள்ளன.

இசை, நாடகம், கூத்து என்பவற்றிலும் வல்லவரான நூலாசிரியர் பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டதாரி, யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர். இதனால் மனதினுள்ளே கருக்கட்டிய கதைகளை, இலக்கிய இலாவகத்தையும் அனைத்துத் துறைகளிலுமுள்ள புலமையையும் கலந்து சிறுகதைச் சட்டகத்துள் திறமையாகத் தீட்டியுள்ளார்.

அவர் கதை கூறும் நேர்த்தியில் கதை எமது மனக் கண் முன் நாடகமாக அரங்கேறு கிறது. காணும் காட்சியில் அது, இது என ஏதாவது தவறிவிடலாம். ஆனால், படிப்படியாக அவர் வர்ணிக்கும் போது எதுவுமே தவறாது மனதிலே பதிந்துவிடுகிறது. கதையோட்டத் துடன் பாத்திரங்கள் மளமளவென முழுமை பெறும் வேளை கதையை வாசிக்கத் தூண்டும் ஆவலொன்று உள்ளே எழுப்பப்பட்டு விடுகிறது. புத்தகத்தை மூடி வைத்து, நாட்கள் பல கடந்த பின்னரும், வேதாசலம் ஐயாவின் இசை எங்கோ, இல்லை, உள்ளே ஒலிப்பது போன்று பிரமை தட்டுகிறது. வேதநாயகம் மாஸ்ரரும், மிக்கேலும், பூமணி மச்சாளும் என அனைத்துப் பாத்திரங்களும் நீண்ட நாட்கள் பழகியவர்கள் போன்று நினைவிலே வருகிறார்கள். அந்த அளவிற்கு ஆசிரியர் தன் கதை கூறுந் திறனால் கதாமாந்தரின் தோற்றங்கள், குணநலன்கள் அனைத்தையும் எமது மனங்களிலே பதித்துவிடுகிறார்.



சிறுகதைத் தொகுதியில் ஆசிரியர் முன்னீடாகச் சிலவரிகள் எழுதியுள்ளார். வாழும் மாந்தரின் வாழ்வியற் கோலங்கள் சிலவற்றைத் தான் பதிவு செய்துள்ளதாகக் கூற வந்த அவர், 'சிறுகதைகளில் வரும் பிரதான கதாமாந்தர் உங்களின் உறவுக ளாகவும் அயலவர்களாகவும் கூட இருக் கக் கூடும்' என அப்பகுதியில் குறிப்பிட்டுள் ளார். அவரது திறமையால் அவர்கள் எம் உறவுகளாகியே விடுகின்றனர் என்பது எனது அநுபவம். அதன் காரணமாக அப் பாத்திரங்களூடாகத் தெரிவிக்கப்பட்ட கருத்துகளும் எமது நினைவில் நிலைத்து விடுகின்றன.

எமது பாரம்பரியக் கலைகள் எமது அறியாமையாலேற்படும் அலட்சியத்தாலும் புலம் பெயர்வாலும் அழிந்துவிடுமோ எனப் பெரும்பாலோர் இன்று கவலையுறுகின்ற னர். 'பாட்டுத் திறத்தாலே', 'முதுசொம்' ஆகிய கதைகளில் இக் கவலையை ஆசி ரியர் புலப்படுத்துகின்றார். அத்துடன் புலம் பெயர்ந்தோரின் எதிர்காலச் சந்ததியினரும் இதில் ஆர்வங்காட்ட வாய்ப்புண்டு என்றும் ஒரு சிறு ஆறுதலையும் தந்து, அதற்காக அவற்றைப் பாதுகாக்க வேண்டுமென்ற எமது பொறுப்பையும் உணர்த்துகிறார், வேதாசலம் ஐயாவின் வேண்டுகோளில் எம் மனது கரைகிறது.

கல்விப் புலத்திலுள்ளோர் சிறார்களது மனநிலை பற்றி அதிகமாகக் கருத்தி லெடுப்பார்கள். 'அரசன் எவ்வழி', 'விதியே விதியே', 'பாலித்திட வேண்டுமம்மா' ஆகிய கதைகள் சின்னஞ் சிறிசுகளின் மனங்களி லேற்படும் பாதிப்புகளை விவரிக்கின்றன.

பல எழுத்தாளர்கள் புராணம், இதிகா சம், காப்பியம் முதலிய பழைய இலக்கி யங்களில் வரும் சம்பவங்களைத் தம் கற்பனை கலந்து சிறுகதையாக்கியுள்ள னர். அவை பெரும்பாலும் மிக முக்கிய மான கட்டங்களைப் பற்றியனவாகவே இருக்கும். கலாமணி அவர்களும் 'புலவி' என்ற கதையை அவ்வாறு படைத்துள் ளார்.

பாண்டியன் கொடுங்கோலனல்லன். அத்தகையவன் எப்படி கோவலனுக்கு மரண தண்டனை அளித்தான்? அவன் அப்படி நீதி தவறியதற்கும் ஒரு காரண மிருக்க வேண்டும். அந்தக் காரணத்தைக் கற்பனை தேடிக் கண்டு கதையாக்க 'புலவி' பிறந்துள்ளது.

சமகால நிகழ்வுகள் சில கதைகளி லும், அவுஸ்திரேலியப் புலம்பெயர் வாழ்க்கை சில கதைகளிலும் தளமாக அமைய, எமது கிராமங்களில் முன்பு நாம் வாழ்ந்த வாழ்க்கையைச் சில கதைகள் மீட்டுக் காட்டுவதால், தொகுப்பு மனோரஞ்ச மாக அமைந்துள்ளது.

ஜீவநதி சஞ்சிகை இரண்டாவது ஆண்டை நிறைவு செய்து சில மாதங்களே கடந்த நிலையில், நூல் வெளியீட்டுப் பணியிலும் கால் பதித்திருக்கிறது. அவர் களது முதலாவது வெளியீடான 'பாட்டுத் திறத்தாலே' சிறப்பாக அமைந்திருப்பதைப் பாராட்ட வேண்டும்.

நூலை வாசித்து முடித்த போது, 'இந்தத் தொகுப்பு நூல் வாசகர்களைப் பாலித்திடுமென உறுதியாக நம்புகிறேன்' என கலாபூசணம் தெணியான் அவர்கள் நூலின் பின்னட்டையில் தெரிவித்துள்ள கருத்தை எனது மனமும் உறுதி செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்

சென்ற இதழில் கடிதங்கள் பகுதியில் கிளிநொச்சி மகாலிங்கம் அவர்களது கடிதத்தைப் படித்துப் பார்த்தேன். சிரிப்புக்குப் பதிலாக, எரிச்சல் தான் வந்தது. இந்த மனுசன் எந்த உலகத்தில் வாழுகின்றார்? இந்த நாட்டில் தானா?- அல்லது வேறு உலகத்தில் வசிக்கின்றாரா?

தமிழர்களிடையே- சாதிமான்களிடையே இன்று வரைக்கும் கடைப் பிடித்து ஒழுகி வரும் சாதி அகம்பாவ மேட்டிமை உணர்வு அற்றுப் போய்விட்டதாக இவர் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளுகின்றாரா?

மாவிட்டபுரம் கோயில் பிரச்சினை, வில்லூன்றிச் சுடலைச் சம்பவம், மற்றும் ஒடுக் கப்பட்ட சிறுபான்மைச் சமூகத்திற்குச் சாதி வெறியர்கள் காட்டி வரும் தீவிர துவேஷ கைங்காரியங்கள் இந்த மண்ணில் தானே நேற்று வரை நடந்தேறிய சங்கதிகள்!

சாதித் துவேஷக் கைங்டாரிய வழி முறைகளில் தென்னிந்தியப் பார்ப்பானும் சரி, யாழ்ப்பாணத்து உயர் சாதி வேளாளச் சாதி வெறியனும் சரி, ஒருவரை ஒருவர் மிஞ்சின வர்கள்.

இந்தச் சமூக அநீதிகளையெல்லாம் எழுத்தில் பதியப்படக் கூடாதாம். உங்களது பரம்பரை கடந்த காலங்களில் இந்த மண்ணில் வாழ்ந்து வந்த ஒடுக்கப்பட்ட சகோதரர்களுக்குச் செய்த சமூக நிஷ்டூரங்கள் எழுத்தில் வெளிக் கொணரப்படுவதைக் கண்டு, கிளிநொச்சி மகாலிங்கம் வெட்கப்படுகிறாரா, என்ன?

மல்லிகை ஆசிரியரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவரது சுயசரிதையைக் கருத் தூன்றிப் படித்திருக்கிறாரா, இந்தக் கிளிநொச்சியான்?

அவர் சாஹித்திய மண்டலப் பரிசு பெற்று யாழ் திரும்பிய தினம் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அவர் பிறந்த சாதியைக் குறிப்பிட்டு வகுப்பில் கிண்டலடித்த சம்பவம் நிகழ்ந்து நீண்ட காலமாகவில்லையே! அதிலும், ஜீவா நாவிதன் எனக் குறிப்பிடுவதற்குப் பதிலாக பாமரத் தமிழில் நாசிவன் எனச் சொல்லிக் கிண்ட லடித்தது எழுத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதே! இதையும் கூடக் கழதக்காரர் கவனத்தில் கொள்வாரா, என்ன! இந்தச் சம்பவத்தில் கண் கண்ட காட்சி தெணியான் தானே!

இன்றும் மேலைநாடுகளில் கடல் கடந்து போன நம்மவர்களின் உயர்குடிப் பிறப்புக்கள் "ஊரிலை எண்டால் இவையளின்ரை வீடு வாசலுக்கெல்லாம் போய்ச் செம்பு, தண்ணி தூக்கி அறிஞ்சிருக்க மாட்டம்!" எனச் சாதிச் செருக்குடன் செப்பித் திரியும் சாதி



வெறியர்களும் இக் கடிதக்காரர் சொல்லும் சாதி வெறியர்கள் தானே?

ஓவியன் ஒருவன் ஓர் ஓவியத்தை வரைந்திருந்தான். காட்சிக்கும் வைத்தி ருந்தான். ஒரு மனிதன் சிங்கத்தைத் தனது மனித வலிமையால் வீழ்த்திக் கால டியில் போட்டிருந்த ஓவியமது. பெர்னாட் ஷாவையும் அழைத்திருந்தான். ஓவியத் தைச் சாவகாசமாகப் பார்த்துக் கொண்டி ருந்த ஷா, முடிவில் தனது அபிப்பிராயத் தைச் சொன்னார். "இந்த ஓவியம் சிறப் பானது தான். இதைக் கொஞ்சம் திருப்பிப் பார்க்க வேண்டும்....! காரணம், இந்த ஓவியத்தை வரைந்தவன் மனிதன்! இதே ஓவியத்தைச் சிங்கம் வரைந்திருந்தால்....!" என்றாராம்.

நாம், தெளிவாக ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம். உயர் சாதியி னரை மொத்தமாகக் குற்றஞ் சாட்டுவ தல்ல, நமது நோக்கம். அற்புதமான பலர் உயர்குடியில் பிறந்திருந்த போதிலும் கூட, சாதி வெறியை முற்றாகவே துடைத்தெறிய மனசாரப் பாடுபட்டு, உழைத்து வந்துள்ளனர்.

ஏன் டொமினிக் ஜீவா, டானியல், பொன்னுத்துரை போன்றோரை அன்று உருவாக்க முனைந்து பாடுபட்டவரும் வடபகுதியில் முதன் முதலில் கம்யூனிஸ்ட் கட்சிக்கு அடித்தளமிட்டவருமான தோழர் கார்த்திகேசன் வட்டுக்கோட்டை அசல் வெள்ளாளனே! இப்படியாக எத்தனை எத்தனையோ உயர்தர மனப்பான்மை கொண்டு உழைத்தவர்கள் உயர் சாதி மட்டத்தினரிடையே உண்டு என்பதையும் நாம் நன்றியுணர்வுடன் நினைவு கூருகின் றோம். அதே சமயம் உயர் சாதியில் பிறந்து விட்டோம் என்ற சாதித் திமிர் கொண்டு அற்பத்தனமாகச் செயற்பட்டு வருவோரை யும் நாம் நன்கு அறிந்து வைத்துள்ளோம்.

'வட பகுதியில் சாதிப் பாகுபாடெல்லாம் ஒழிந்து போய்விட்டது!' எனச் சும்மா புலுடா விட்டு உண்மையை மறைக்கப் பார்க்கா தீர்கள். இது நீண்ட நெடு நாளைய தொழு நோய். உடனடியாக இந்தச் சாதீயக் கொடுங் கோன்மை தீர்ந்து விடும் என நாம் நம்ப வில்லை. அதே சமயம் தங்களது வசதி வாய்ப்புக்காகச் சாதி பாகுபாடெல்லாம் மறைந்து போய் விட்டது எனச் சாட்டுச் சொல் லித் தப்பித்துக் கொள்ளப் பார்க்காதீர்கள்.

இன்றும் கூட, கனடாவில் ஒடுக்கப்பட்ட மக்கள் குவியலாக வாழும் பகுதிக்கு 'அது அவையளின்ரை பக்கம்! இது எங்கட பக் கம்!' எனக் கன்னை பிரித்துச் சாதிக் கிடுகு வேலி போட்டுப் பேசும் அங்கு குடியேறி வாழும் நம்ம மேட்டுக் குடிப் பெருமக்களி டம் சகஜமாகவே இடம் பெற்று வருவதும் நமக்குத் தெரியாத சங்கதியல்லத் தான்.

சாதிப் பாகுபாட்டு மேட்டிமைத் தனம் தற்காலிகமாகத் தன்னைத் தானே மறைத்துக் கொண்டுள்ளதே தவிர, அது தன் விஷக் கொடுக்குகளை இன்னமும் இழந்து விடவில்லை- கவனம்!

**அ. அருந்தவநாதன். கொக்குவில்.**

மல்லிகை இதழில் நான் முதலில் படிப்பது தூண்டில் பகுதியும், வாசகர் கடித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் தான். செப்டம்பர் 2009 இதழில் வாசகர் கடிதங்கள் காத்திரமாக இருந்த மல்லிகையின் மதிப்பீட்டிற்கு இக்கடிதங்கள் பெரும் பங்காற்றுகின்றன. வே. மகாலிங்கம் அவர்கள் மல்லிகை தொடர்பாக சில காட்டமான, காத்திரமான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார் என்பது ஒருபுறமிருக்க அதைப் பிரசுரித்த மல்லிகை ஆசிரியரின் இலட்சிய நேர்மைக்கு எனது பாராட்டுக்கள். வே. மகாலிங்கம் அவர்களின், 'சாதிப் பாகுபாட்டை விடாமல் வரலாற்றாக்க முனைகிறீர்கள்' என்ற கருத்துச் சிந்திக்க வேண்டியதே.

மூன்று வாசகர்களின் கடிதங்களில் இடம் பிடித்த ச. முருகானந்தனின் 'சுடலை ஞானம்' என்ற சிறுகதையை நானும் பெரிதும் ரசித்தேன். அண்மைக் காலங்களில் நான் வாசித்த கதைகளில் தரமான கதை. வே. மகாலிங்கம் அவர்கள் குறிப்பிட்டது போல, அகதி முகாம் நடை முறை பற்றிய தகவல்கள் தவறாக இருக்கலாம். ஆனால், இது நேரடி றிப்போட் அல்ல, சிறுகதை அல்லவா? அகதி முகாம்களில் மக்கள் படும் அவலங்களை வெளிக் கொண்டு வரவும், சாதியம் அழிந்து வருவது பற்றிய சாவுமணியும் இக்கதையின் அடிநாதமாக உள்ளது.

கெக்கராவ ஸஹானா குறிப்பிட்டுள்ளது போல, யாழ் மண்ணில் வளமான எதிர் காலம் மீண்டும் திரும்ப வேண்டும் என்ற கதாசிரியரின் ஆதங்கத்தையும் இக்கதையில் நானும் உணர்கிறேன்.

இம்மாத இதழில் சோலைக்கிளியின் அட்டைப்படக் கோட்டோவியம் சிறப்பாக இருக்கிறது. வரைந்தவருக்குப் பாராட்டுதல்கள். சோலைக்கிளியின் அட்டைப்படம் தாமதமாகவேனும் மல்லிகையில் இடம் பெற்றது மகிழ்ச்சியே, மல்லிகை உருவாக்கி வளர்த்தெடுத்த கவிஞன் அல்லவா?

உங்களுக்கு வயது 27... ஆமாம் உங்கள் சுறுசுறுப்புக்கும், இலக்கிய உத்வேகத்திற்கும் வயது 27 தான். 83 அல்லவேயல்ல.

**ச. சிவாஜினி.** **கொழும்பு- 14**

மல்லிகையின் புதிய வாசகன் நான். நான் ஒரு உயர்தர கலைப் பிரிவு மாணவன். மல்லிகையின் எளிமையும் கவர்ச்சியும் என்னை மல்லிகையின் வாசகன் ஆக்கிவிட்டது. உண்மையில் நாச்சியாதீவு பர்வீன் தான் மல்லிகையை எனக்கு அறிமுகப்படுத்தினார். அவர் தொடர்ந்து எழுதிய **பேனாவால் பேசுகிறேன்** தொடர் என்னை மிகவும் கவர்ந்தது. தவிரவும், பரன் எழுதிய நினைவழியா நாட்கள் தொடரானது ரசிக்கக் கூடியதாக இருந்தது.

இன்னும் சொல்லப் போனால் உங்களது தூண்டில் கேள்வி பதில் மிகவும் ரசனையைத் தூண்டக் கூடியதாக இருக்கிறது. தூண்டில் கேள்வி பதில் மூலம் உங்களது இலக்கிய அனுபவங்களை எங்களால் அறிய முடிகின்றது. கடந்த இதழில் வெளியான எல்லா ஆக்கங்களும் நன்றாகவே இருந்தன. மல்லிகையின் தொடரான வருகைக்காக நான் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**இளங்கவி நுஸ்கான்.** **நாச்சியாதீவு**



ஒரு தேநீர்க் கடைக்குள் இருவர் தேநீர் அருந்தப் புகுந்தால் நூறு ரூபாவுக்குக் குறையக் கொடுத்து வர முடியாத காலமிது. அப்படியிருக்க மல்லிகையின் விலையை அதிகரியுங்கள் என்று பலர் வற்புறுத்தியும் பத்து ரூபாவால் மட்டும் கூட்டியிருக்கிறீர்களே. ஒரேயடியாக ஐம்பது ரூபாவாக ஆக்கியிருந்தால், தபாற் சேவையையும் தாங்கி, குறைந்தது இரண்டு வருடங்களுக்காவது ஐம்பது ரூபாவிலேயே தாக்குப் பிடித்திருக்கலாம். யோசியுங்கள்.

ஓகஸ்ட் இதழில் 'இஸ்லாமிய மொழியாக இன்னும் தமிழ் மாறாதிருப்பதேன்?' என்ற கட்டுரையைத் தந்த எஸ். ஐ. நாகூர் கனி சரியான தருணத்தில் சரியான கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இவர்கள் பழையவர்கள், இவர்களுடைய பார்வையும் கருத்தும் செயலும் வரலாற்றைத் திரும்பிப் பார்த்து எதிர்காலத்தை முன்னோக்கியதாகத் தான் எப்போதுமே அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஈழத்தில் தெற்கில் தற்போது சில முஸ்லிம் பிள்ளைகளின் கற்கைமொழி, பேசும் மொழி தமிழை விட்டு மாறிக் கொண்டு போவது நல்ல சகுனமல்ல. மொழி என்பது வெறுமனே பேசுவதற்கான கருவியோ அல்லது ஊடகமோ மட்டுமல்ல, அதற்கு மேலே இன்னும் இன்னும் எத்தனை எத்தனையோ..... நாகூர்கனியின் சிந்தனைகளை ஆராதிக்கின்றேன்.

'பாம்புச் சட்டை' சிறுகதை சிறுவர்கள் சொல்வது போலவே கதையை நகர்த்திச் சென்று, உங்களுடைய தமிழில் சொல்லப் போனால், ஒரு யதார்த்தமான உண்மையைக் குறியீடாகச் சுட்டிக் காட்டியுள்ளது. வெளிநாடுகளிலிருந்து வந்த தமிழர்களாயினும் சரி, கொழும்பிலிருந்து வந்த தமிழர்களாயினும் சரி ஊர்த்தவனத்திற்காக ஏங்குவதாகக் காட்டிக் கொள்வார்களே தவிர, இங்கு நிரந்தரமாக இருக்க விரும்புவதேயில்லை. வருடா வருடம் ஊருக்கு வந்து தங்கள் பவிசுகளைக் காட்ட எத்தனிப்போர் தான் அதிகம். எல்லோருமல்ல. பனம்பழச் சமாச்சாரமும், ''எங்கட ஊர் தண்ணியக் குடிச்சிட்டே இருக்கலாம்'' என்பதும் ''இந்த ஊரை விட்டு அங்கை போய் அடைஞ்சு கிடக்கிறதை நினைச்சாத்தான் எனக்குக் கவலையாக் கிடக்கு'' என்பதும் நானும் என் காதுகளால் கேட்டு அனுபவித்த சங்கதிகள் தான். சாவகனுக்கு எனது பாராட்டுக்கள்.

**கொற்றை பி. கிருஷ்ணானந்தன்.**

ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்காகப் பல போராட்டங்களை வட பிரதேசத்தில் நடத்தினார்கள். இதன் பேறாகவே இன்று அனுபவிக்கும் உரிமைகளைப் பெற்றுக் கொண்டார்கள். இந்தப் போராட்டங்கள் இடம் பெற்று வந்தமைக்கு நீண்ட ஒரு வரலாறு உண்டு. கிறிஸ்தவப் பாடசாலைகளில் (இந்துப் பாடசாலைகளில் அல்ல) சம ஆசனங்களில் ஒடுக்கப்பட்ட சமூகத்து மாணவர்கள் கல்வி கற்பதற்கான போராட்டம் இருபதுகளில் ஆரம்பமானது. ஒடுக்கப்பட்டவர்களின் பிணங்களைக் கூட, மயானத்தில் சமத்துவமாக வைத்துச் சுடுவதற்கான உரிமை மறுக்கப்பட்டது. அந்த உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையப் பெறுவதற்கான போராட்டம் சங்கானை மயானத்தில் 1931 இல் ஆரம்பமானது. 1944ம் ஆண்டு வில்லூன்றி மயானத்தில் முதலி சின்னத்தம்பி சுட்டுக் கொலை செய்யப்பட்டதுடன் அந்தப் போராட்டம் தீவிரமடைந்தது. அதன் பின்னர் தேநீர்க் கடைப் போராட்டம் (1956), பன்றித் தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசப் போராட்டம் (1968), மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் போராட்டம் (1968) என ஒடுக்கப்பட்ட மக்கள் முற்போக்குச் சிந்தனையாளர்களின் ஆதரவுடன் தமது உரிமைகளை வென்றெடுத்துக் கொண்டு வந்தார்கள். இக்காலங்களிலும் இதற்குப் பின்னரும் தமிழ் என்றும் தமிழர் என்றும் பேசிப் பேசி அரசியல் நடத்தியவர்கள் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக முழு மனதுடன் செயற்பட்டதாக இல்லை. இடதுசாரிகளின் செல்வாக்கு ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் பெருகி வருவது கண்டு, கல்லுடைப்பு வேலைகளை சிலவேளைச் செய்து முடிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானார்கள். சமபந்திப் போசனம் நடத்திக் காட்டினார்கள். ஒடுக்கப்பட்ட சாதியினருக்குள்ளேயே கலப்புத் திருமணம் செய்து வைத்துச் சாதியத்தை ஒழிக்க முற்பட்டார்கள். இவர்களுடைய வழித் தோன்றல்களாக வந்த ஆயுதக் குழுக்கள் பலவும் சாதிய விடயத்தில் தமிழ்த் தலைவர்களை முன்னோடிகளாகக் கொண்டு செயற்பட்டன. இந்த ஆயுதக் குழுக்களின் வருகையுடன் ஒடுக்கப்பட்ட சமூக மக்களின் உரிமைப் போராட்டங்கள் முடக்கப்பட்டன. அவர்கள் நூல்கள் எழுதாவாறு தடுத்து வைத்தார்கள். அப்படியொரு பிரச்சினையுமில்லை என்று வெளி உலகத்துக்குக் காட்ட முற்பட்டனர். எண்பதுக்குப் பின்னர் சாதியின் பெயரால் இடம் பெற்ற கொடுமைகளை வெளி உலகம் அறிய மாட்டாது. வடபிரதேசத்திலுள்ள இன்னும் எத்தனை ஆலயங்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் உள்ளே புகுந்து வழிபடுவதற்கு அனுமதிக்காதவைகளாக இருந்து வருகின்றன. நீர் அள்ளிப் பருகும் பொதுக் கிணறுகளில் இந்த மக்களுக்கு உரிமை மறுக்கப்படுகிறது. இப்படிப் பலவற்றைப் பட்டியல் இடலாம். வெளியில் தெரிய வராத பல சம்பவங்களை எடுத்துச் சொல்லலாம். இவைகள் யாவையும் மறைத்துப் பொய்மையாகப் பேனா பிடிக்க வேண்டும் என எதிர்பார்ப்பது ஒருவகைத் தந்திரமல்லவா? பொய் முகங்களின் முகமூடிகள் எமது எழுத்துக்களால் கிழித்தெறியப்பட வேண்டும். வெளி உலகத்துக்கு உண்மை தெரிய வர வேண்டும். இன விடுதலைப் போராட்டம் என்ற போர்வையினால் அடிபட்டு, சாதியப் பிரச்சினைகளை வெளியே எடுத்துச் சொல்லாமல் பல எழுத்தாளர் மறைத்து வந்தார்கள். அந்த எழுத்தாளர்களும் சாதியக் கொடுமைகளை அவ்வப்போது எடுத்துச் சொல்லி வந்திருந்தால், டானியல், ஜீவா, தெணியான் ஆகிய எங்களுடைய பொறுப்புக்கள் குறைந்திருக்குமல்லவா? நாங்கள் மாத்திரந்தான் சாதியம் பற்றி எழுதிக் கொண்டிருக்கின்றோம் என நீலிக் கண்ணீர் வடித்திருக்க மாட்டார்கள். இனி மேலாவது அவர்கள் பார்வை சாதியத்துக்கு எதிராகத் திரும்புமா? திரும்ப வேண்டும்.

தெணியான்




# தூண்டில்

- டொமினிக் ஜீவா

❖ அமைச்சர் மிலிந்த மொறகொட அவர்களுடைய புதிய 'சன்னல் மூலம் பார்த்த உலகத் தலைவர்கள்' நூல் வெளியீட்டு விழாவுக்குப் போயிருந்தீர்களா? நூல் பற்றி உங்களது உண்மையான அபிப்பிராயம் என்ன?

கொழும்பு - 06 — எஸ். சிவநாதன்



❖ வெளியீட்டு விழா அழைப்பிதழ் கிடைத்தது. போயிருந்தேன். கௌரவமாக மேடைக்கழைத்து நூலொன்று தந்தார்கள். கடகட இரவே படித்து முடித்துவிட்டேன். உயர் கல்வி மாணவர்கள் அவசியம் படித்துப் பார்க்க வேண்டிய புத்தகமிது. தமிழுக்குப் புதிய வரவு.

ஐரோப்பிய, அமெரிக்க, ஜப்பானிய, ரஷ்ய, சீன, இந்திய பத்திரிகைகளுக்குத் தலைமை வாய்ந்தவர்களின் சுருக்கமான வரலாறு இடம் பெற்றுள்ள கட்டுரைத் தொகுதி நூல். இது புதிய முயற்சி. நல்ல முயற்சி.

படிக்கும் போதே எனக்கொரு மலைப்பு. இந்து சமுத்திரத்தின் மகத்தான முத்து நமது நாடு. உலகத்திலேயே முதற்பெண் பிரதமரைப் பெற்றுக் கொண்ட நாடு. தோழர் என். எம். பெரேரா, கொல்வின் போன்ற இடதுசாரித் தலைவர்களை அந்தக் காலத்திலேயே பெற்றிருந்த தேசம் நமது பூமி. இலங்கையில் மிக மிகச் சிறுபான்மை இனமான பறங்கியர் சமூகத்தில் பிறந்த தோழர் பீட்டர் கெனமன் மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்று, உயர் தேசியத் தலைவராக மிளிர்ந்தவர் அவர். இன்று மருதானை சம்பின்ஸ்டன் சந்தியில் கைகளை உயர்த்திக் கொண்டு சிலையாக நிற்கின்றார். அடுத்துத் தொண்டமான். வெறும் மண் புழுக்களாகக் கருதப்பட்ட தோட்டப் பகுதித் தொழிலாளிகளை நிமிர்ந்து நிற்கக் கற்றுத் தந்தவர். அடுத்து என்னதான் கருத்து வித்தியாசங்கள் இருந்திட்டாலும் நமது தந்தை செல்வா..... அடிமட்டத்திலிருந்து முகிழ்ந்தெழும்பிய பிரேமதாஸ அவர்கள்.....

இவர்களை நாம் உலக வரலாற்றிலிருந்து அப்புறப்படுத்தி விட முடியுமா? எல்லா தனிப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பு வெறுப்புகளைக் கடந்து நாம் பழகு முகத்தின் சிறேஷ்டர்களைப் பார்க்க வேண்டும்.

வெறும் யாகாணத் தலைவர்களான கருணாநிதி, ஜெயலலிதா போன்றவர்களுக்கு இத்தனை முக்கியத்துவம் கொடுத்து நூலில் பதியப்பட்டிருக்கும் போது, நம் மண்ணைச் சேர்ந்தவர்கள் ஒருவருமே இந்நூலில் குறிப்பிட்டுச் சொல்லப்படவில்லை என்பது மிக மிகச் சோகம் தருமல்லவா!

எவ்வளவுதான் சர்வதேச வலைத்தில் நாம் கட்டாயத்துப் புழுந்தாலும் கூட, நாம் நிமிர்ந்து நிற்கப் பழகிய இந்த மண்ணையும் அதிந்து கவனிக்கப் பழக வேண்டும். உலகத்திற்கு நிமிர்ந்து நின்று சொல்லப் 'பஞ்சிப்' படக் கூடாது. இது வரலாற்றை இருட்டடிப்புச் செய்து விடும்.

எனக்கு இந்த நூலை அன்பளிப்புச் செய்த அதே வேளையில் வைத்து அமைச்சர் [illegible] Undersea Portrait For Unwritten Poetry ஆங்கிலப் பதிப்பை அன்பளிப்புச் செய்து கொண்டேன்.

அமைச்சரின் இப் புத்தகம் பிரமாதமாகப் பதிப்பு எழிலுடன் கவர்ச்சியுடன் தயாரிக்கப் பட்டுள்ளது. தயாரித்தளித்த குமரன் புத்தக இல்லத்திற்கு மல்லிகையின் மனமார்ந்த நன்றிகள்.

➢ உங்களுடைய பெயர் டொமினிக் என்றும் [illegible] பட்டம் [illegible] குறிப்பிடப்பட்டிருக்கிறது. [illegible] உண்மை தான் என்ன?

நெடுங்கேணி சி. குமார் லிங்கம்

✍ ஆம். பொறுக்க இது ஒரு பெருமைப் பிரச்சினை? இலக்கியம் சம்பந்தமான கட்டுரைகளில் என்னை, அல்லது பேராசிரியர்களான சிவத்தம்பி, கைலாசபதி போன்றோரை புதுமைக்குரியவர்களையில் 'சொட்டை' சொல்லாது போனால், அவருக்கு எழுதுவதில் திருப்தியே ஏற்படுவதில்லை. நானும் அதைப் பொருட்படுத்துவதேயில்லை. ஜீவா என்பது எனது புனைப் பெயரல்ல. சொந்த இயற்பெயரே. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரே பிறப்புச் சான்றிதழ் பத்திரத்தில் உத்தியோக பூர்வமாக இணைத்துச் சட்டரீதியாகப் பயன்படுத்தி வரும் எனது முழுப் பெயருமே டொமினிக் ஜீவா தான். கடவுச் சீட்டு, அடையாள அட்டை போன்றவற்றிலும் எனது இயற்பெயரே பதியப்பட்டுள்ளது. எனது பெயரில் பின் பகுதி புனைப் பெயரென்றால் இலங்கையாம் சாத்தியப்படுமா? சொல்பவருக்கு இலங்கைச் சொற்பன் [illegible] நெடுங்காலமாகவே உண்டு என்பது இலக்கிய வட்டத்தினருக்கு நீண்ட நெடு நாட்களாகவே நன்கு தெரிந்த சங்கதிதான். தன்னை அறியாமலேயே என்னைப் பிரபலப்படுத்தி வருகிறார் என்பேன்.

➢ [illegible] சங்கம், முஸ்லிம் எழுத்தாளர்களி [illegible] பாலம் அமைக்க இயங்கும் [illegible] முன்வந்து வந்தது எனக் கருதுகிறீர்கள்?

அக்கரைப்பற்று எம். எஸ். பர்ஹா

✍ அரசியல்வாதிகள் தமது ஆதிக்க நோக்கத்திற்காக இந்த நாட்டில் வாழும் மூவின மக்களையும் பகடைக்காயாகப் பாவித்துச் சென்ற காலங்களில் அரசியல் கிளித் தட்டு விளையாடிக் கொண்டு வந்துள்ளனர்.



இந்த மூவின மக்களிடையே வாழ்ந்து வந்த புத்திஜீவிகளான எழுத்தாளர்கள் கடந்த காலங்களில் தமக்குள்ளே ஒன்றிணைந்து பல பல வெற்றிகளைக் கண்டு தெரிந்து வருகின்றனர்.

அதற்கு உதாரணமாகக் கடந்த 10.9. 2009– ல் மிகக் கோலாகலமாக நடந்தேறி முடிந்த 'கொடகே' இலக்கிய விழாவைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

இந்த நாட்டின் வரும் காலத்தில் மூவின வகையைச் சேர்ந்த படைப்பாளிகளும் ஒன்றுபட்டு [illegible] சீரான திசை வழியில் நடந்துச் செல்லப் போகின்றனர் என்பதற்கு அந்தப் பொது விழாவே சாட்சி சொன்னது.

➢ மல்லிகையில் கவிதைகள் அரிதாக இடம் பெறுவது ஏன்?

பண்டாரவளை. [illegible]

✍ மல்லிகை கவிதைக்கான இதழல்ல. அது இலக்கிய இதழ். கவிதைகளும் அதில் மாதா மாதம் விகிதாசாரக் கணக்கில் இடம் பெற முடியும். நமது கணிப்பீட்டின் படி மாதா மாதம் ஒதுக்கப்பட்ட பக்கங்களுக்கமையக் கவிதைகள் இடம் பெற்றே வருகின்றன.

➢ அவ்வொரு கல்லூரி மாணவி. மெய்யாகத் தான் கேட்கிறேன். எவரையும் மல்லிகைக்குத் தட்டிக் கேட்க முடியாது இல்லையா? உண்மையைச் சொல்லுங்கள்?

அனலைதீவு [illegible]

✍ ஓர் இளந் தலைமுறையைச் சேர்ந்த மாணவச் சகோதரி ஒருவர் இத்தகைய கேள்வியைக் கேட்டதையிட்டு உண்மையாகவே சந்தோஷப்படுகின்றேன். பெருமையாகவும் கூறிக்கொள்கிறேன். இந்த நூற்றாண்டில் மறைந்து போனவர்களுக்கு அப்பால் காரணமே தெரியாத வறுமை தான். மல்லிகை இந்தப் பாரிய சுமையைச் சுமக்க இயலாத காலங்களில் தாங்கிக் கொண்டிருந்தது. உங்கள் ஊருக்குத் தெரிந்த அண்ணாச்சி, எம். ஏ. கிஸார், திருச்சி ரெங்கநாதன், நமது துரை விஸ்வநாதன் போன்றோர் கடந்த காலங்களில் மல்லிகைக்குப் பெரும் பங்களிப்புச் செய்து வந்துள்ளனர். இன்றைக்கும் கூடப் பலர் உதவத் தயாராக உள்ளனர். இவர்களுக்குப் பின்னர் இலக்கியப் பத்திரிகை பதிப்பில் பெயர் முக்கியமல்ல, இங்கு முக்கியம். உதவும் மனந்தான் முக்கியம். 'என்ன, கடனுண்டா' என்று நானே கேட்டுள்ளேன். கடன் உண்டு இன்றும் கூடச் சமாளித்து விடலாம். இலக்கிய உலகில் பணப் பிரச்சினை தன்னம்பிக்கை தான் அதி முக்கியமானது. பிரதானமானது.

➢ மல்லிகையின் வெள்ளி விழாவைத் தாண்டி இன்னும் [illegible] ஆண்டுகளாக மல்லிகையால் முடிந்திருக்கிறதா?

திருக்கோணமலை [illegible]

✍ ஓர் இலக்கியச் சஞ்சிகை தனது விலையை அதிகரிக்க முற்படும் பொழுது, அதற்கு ஓர் அடிப்படைக் காரணம் இல்லாமல் இருக்க முடியாது. நாம் மனப்பூர்வமாக விரும்பி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லிகையின் விலையைக் கூட்டவில்லை. அடக்கச் செலவு அதிகரிப்புதான் இதற்கு அடிப்படைக் காரணமாகும் எனவே ஆக்கபூர்வமான இந்நாட்டு இலக்கிய வளர்ச்சிக்கு நீங்கள் கொடுக்கும் மாதாந்தப் பணம் என இந்த விலையேற்றத்தைப் புரிந்து கொள்ளுங்கள் – அதுதான் முக்கியம்!

➢ உங்களுக்கு நானோர் உண்மையைச் சொல்லட்டுமா? இனிமேல் இந்த விருதுகள், பட்டங்கள், பாராட்டுக்களைத் தவிர்த்து மேலும் மல்லிகை வேலைகளை இருக்கப் பாருங்கள். கடந்த ஐம்பது வருடங்களாகத் தொடர்ந்து, நீங்கள் சாகித்திய மண்டலப் பரிசு முதல் முதல் தமிழ்ப் பட்டப்படிப்புவரை பெற்றுக் கொண்டீர்கள். இதனுடன் சாகித்திய ரத்னா பரிசையும் பிற ஆட்சிக் கழகங்கள் முன்னர் ஜனாதிபதியின் கௌரவக் கிடைக்கப் பெற்றீர்கள். இனி என்ன? போதும். வருங்காலத்தில் இந்த விருதுகளும் பட்டங்களையும் பெற்றுக் கொள்ள இருந்தது காட்டாதீர்கள். என்னால் சொல்வது. சரிதானே?

நல்லூர் — எஸ். ராஜகுலேந்திரன்

✑ நூற்றுக்கு நூறு சரி! ஈழத்து இலக்கிய வரிசையில் நான் மாத்திரம் கொம்பனல்ல; என்னையும் விடத் திறமைசாலிகள். ஆற்றலாளர்கள் இந்த மண்ணில் தமிழர்கள் நிறைய நிறையப் பேர்களுண்டு. எனவே, வருங்காலங்களில் தமிழ் இலக்கியப் பரப்பில் எந்த விதமான பாராட்டுக்களையோ, விருதுகளையோ ஏற்றுக் கொள்ளமாட்டேன்! என ஆரோக்கியமான இலக்கிய வளர்ச்சியின் பெயரால் சபதமேற்று, ஈழத்து சூழல் இதைப் பிரகடனப்படுத்துகின்றேன்

➢ இலங்கையின் நாடு தழுவிய மட்டத்தில் பார்த்த பகுதி பல பல்கலைக்கழகங்கள் செயல்படுகின்றன. இந்தப் பல்கலைக் கழகங்களில் தமிழ், முஸ்லிம் மாணவர்கள் ஏராளமானோர் பட்டப் படிப்பு படித்து வருகின்றனர். இந்தத் தமிழ்த் துறையிலிருந்து வாய்ந்த நாவலாசிரியர்களது தெளிவைப் போன்ற அரும் முயற்சியும் ஆற்றலாளருமான பண்பாளரும் மிக்க இலக்கியப் படைப்பாளியை அழைத்து, உங்களது கடந்த கால அநுபவங்களை, அதன் பெறுபேறுகளைப் பற்றி உரை நிகழ்த்த அழைத்தால் என்ன?

ஒரு பேராதனை மாணவன் (?)

✑ உண்மையை மனந் திறந்து சொல்லட்டுமா? எம்மைப் போன்ற மக்களிடமிருந்து பிரிந்து வந்தவர்களை அழைத்துக் கருத்துப் பரிமாற வைக்க சங்காது பேராசிரியர்களுக்கு உள் மனப் பயம். மனச் சங்கடம்!

நிச்சயமாக நம்புங்கள். இது இந்த மண்ணில் இந்தத் தலைமுறையில் நடக்கவே மாட்டாத சங்கதி! பல்கலைக் கழகங்கள் என்பது வேறு. அங்கு விரிவுரை நிகழ்த்தும் பேராசிரியர்கள் வேறு. பாட நூல்களே வேத வாக்கியங்கள் என மனதார நம்பிப் பாடப் புத்தகங்களையே கரைத்துக் குடிக்கும் மாணவர் என்பது வேறு. இந்த ஆக்கபூர்வமான சங்கதியை அடுத்த தலைமுறையினருக்குப் பாரப்படுத்துவோமே

பயப்படாதீர்கள். எங்களைப் போன்றவர்களின் சுயவரலாறு, நாளைய பல்கலைக் கழக மாணவர்களுக்குப் பாடப் புத்தகமாக வைக்கப்படலாம். அதுவரையும் பொறுத்திருங்கள்.

[illegible] Lakshmi Printers [illegible]

எமது புதிய வெளியீடுகள்

**ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்**
கலாநிதி நா. சுப்பிரமணியன்
முன்னாள் இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



ஈழத்திலே தமிழ் நாவலிலக்கியம் தோன்றி வளர்ந்த வகையினை வரலாற்று நோக்கிலே தொகுத்து நோக்கி மதிப்பீடு செய்வதாக இந் நூல் அமைகின்றது. இந் நூலின் முதலாம் பதிப்பு 1978 ஆம் ஆண்டு வெளிவந்தது. தற்போது வெளிவரும் இப் புதிய பதிப்பிலே, மேற்படி இடைப்பட்ட முப்பது ஆண்டு காலப்பகுதியில் ஈழத்திலும் புலம்பெயர் சூழல்களிலும் வெளிவந்த நாவல்களின் வரலாற்றுச் செல்நெறிகளையும் வளர்ச்சிப் அம்சங்களையும் இனங்காட்டும் வகையிலான பின்னிணைப்புகளும் இடம்பெறுகின்றன.

ISBN 978-955-659-192-7 விலை 700.00 பக்கங்கள்: xxxi + 509

1. பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம்
 - பேராசிரியர் கா. சிவத்தம்பி 937.50
2. நாடகம் - அரங்கியல்: பழையதும் புதியதும்
 - பேராசிரியர் சி. மௌனகுரு 450.00
3. செ. கணேசலிங்கன் நாவல்கள்: ஓர் ஆய்வு
 - அமிர்தலிங்கம் பௌநந்தி 500.00
4. நவீன அரசியல் சிந்தனை: ஓர் அறிமுகம்
 - க. சண்முகலிங்கம் 350.00
5. ஈழத்துத் தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும்
 - கலாநிதி செ. யோகராசா 250.00
6. ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி
 - பேராசிரியர் எம். சிவலிங்கராஜா 300.00
7. இலங்கையில் அரசியற் கட்சி முறைமை
 - சி. அ. யோதிலிங்கம் 300.00
8. மாணவரின் வகுப்பறை நடத்தை
 - கலாநிதி ப.கா. பக்கீர் ஜஃபார் 350.00

**குமரன் புத்தக இல்லம்**






**OUR PRODUCT**

DATABASE PRINTING, BROCHURES, CATALOGUES, SOUVENIRS, BOOK MARKS, GREETING CARDS, NAME TAGS, CD/DVD COVERS, COLOUR BIO DATA, STICKERS INVITATION CARDS, PROJECT REPORTS, BOOK COVER, MENU CARDS, GARMENT TAGS, THANKING CARDS,CERTIFICATES, BOOKS, POSTERS, CD STOMER, TRANSPARENCY SHEET, PLASTIC CARDS, SCRATCH CARDS, VISITING CARDS.

# HAPPY DIGITAL CENTRE (PVT) LTD

**Digital Colour Lab & Digital Offset Press**

No.75 1/1, Sri Sumanatissa Mawatha, Colombo - 12.
Tel: +94 11 4937336, +94 11 7394590
web: www.hdclk.com E-mail: happy2002@live.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org